
# தமிழரசு




16-11-1982 75 காசு.

திருவள்ளுவர் ஆண்டு 2013

மாண்புமிகு தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திருப்பதியிலிருந்து புதுடில்லி செல்லும் வழியில் 31.10.82 அன்று காலையில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார்கள்.



சென்னையில் கோ-ஆப்டெக்ஸின் 600-வது விற்பனை நிலையமான தில்லையாடி வள்ளியம்மை மாளிகையை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 27.10.82 அன்று திறந்து வைத்தார்கள். விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்தார்.







# நெசவாளர் வாழ்வு நலம் பெற.

— மாண்புமிகு முதல்வர்

தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்ற பெயரில் சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பு நல்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு எத்தகைய ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்திப் பார்த்தால் இந்த நிகழ்ச்சியில் பெருமையும் நிம்மதியும் மன நிறைவையும் பெற முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு புயல் வீசித் தொல்லை தந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி பெற்று, துன்பத்திற்கு ஆளானவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றார்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்டியல்கள் ஏந்தி வசூலித்து 25 ஆயிரம் ரூபாய் தந்தபோது அதைப் பணமாக்த் தராமல் கைத்தறி ஆடையாகத் தர வேண்டும் என்றார்.

துன்பத்திற்குள்ளானவர்களுக்கு ஆடை தரவேண்டும். அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயும் சென்று சேரவேண்டும் என்பதுதான் அண்ணாவின் எண்ணம்.

ஒரு காரியம் செய்யும்போது அது நேரடியாகச் செல்லாமல் பல்வேறு வகையில் சென்று பயன்தரவேண்டும் என்று அறிஞர் பெருமக்கள் கருதுவார்கள்.

கைத்தறித் துணி விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தபோது அண்ணா அவர்கள தலையில் சுமந்து விற்றார். தம்பியர்களையும் விற்கச் செய்தார்.

எங்களால் முடிந்தது இதுதான். ஆட்சியிலிருப்பவர் தங்களால் முடிந்ததைச் செய்யட்டும் என்றார் அண்ணா.

அந்த வகையில் "அண்ணாவின் எண்ணத்தைச் செயல் வடிவம் பெறச் செய்கிறோம்" என்பதில் ஓரளவு நிம்மதி பெறுகிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாகப் பாதுகாப்புக் கொடுத்து விட்டோமா என்றால் இல்லை என்று தான் கூறவேண்டும்.

சங்கம் வைத்திருப்பவர்கள் அந்தப் பலத்தின் அடிப்படையில் சிலவற்றைத் தங்கள் சலுகைகளாகப் பெற முடிகிறது.

65 லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம். இதனால் அந்தக் குடும்பங்கள் திருப்தி அடைகின்றன. அந்தக் குடும்பங்களுக்கு வசதி இல்லை என்றுதானே பொருள்? வசதி இருந்தால் அனுப்புவார்களா?

சத்துணவுத் திட்டத்தில் ஆசிரியர்களை வேலை வாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அவர்கள் பாடம் சொல்லித் தரட்டும். படித்த பெண்களைச் சத்துணவு அளிக்க நியமிக்க இருக்கிறோம். உண்ண வரும் குழந்தைகளை இடைக்காலத்தில் கொஞ்சம் கவனிக்க வேண்டாமா?

ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஒத்துழைப்புத்தருகிறார்கள். ஒரு சிலர், மாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவர்கள்கூட இதுவரையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஒத்துழைக்காமல் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகிறோம். அவர்கள் வாழ முடியாதவர்கள்-வாழ்வு இழந்தவர்கள் மற்ற பகுதியினரான குடியானவ மக்களுக்கும் செய்ய வேண்டியிருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் கொண்டுவந்திருக்கிறோம். மக்கள் வீடு வசதி பெற, வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டித்தருகிறது. குடிசை மாற்று வாரியம் வீடுகட்டித் தருகிறது. இதைப் போலவே நெசவாளர்களுக்குச்செய்து கொடுக்கக்கூடாதா? ஒருவருக்கு ஒரு நீதி, மற்றவருக்கு ஒரு நீதியா?

நான் எல்லோரையும் ஒரே நிலையில் வைத்துத்தான் பார்க்கிறேன். அறிவுக்கு ஏற்ப, திறமைக்கு ஏற்ப மதிக்க வேண்டியது தான். ஆனால் பசிபோக்க வழி செய்தாக வேண்டும்.

மற்ற மாநிலங்களில் இருந்துவரும் விசைத்தறித் துணியைத் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. அதைச் செய்ய அதிகாரம் இருந்தாக வேண்டும்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி செய்தது குறித்து இங்கே எடுத்துக் கூறினார்கள். இதுபோல மத்திய அரசு எல்லாவகையிலும் ஒத்துழைக்க வேண்டும். நமது உழைப்பு அனைவருக்கும் உதவியாக இருக்க வேண்டும்"

*(சென்னையில் எழும்பூர் பாந்தியன் சாலையில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள கைத்தறி விற்பனைக் கூடத்தை 27.10.'82-அன்று திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து)*

தமிழரசு
மலர் : 13 இதழ்: 10
16–11–1982
திருவள்ளுவர் ஆண்டு 2013 துந்துபி - ஐப்பசி 30

# கூட்டுறவு தரும் கோடி நன்மை!

“மனிதர்கள் வறுமையால் சாவதில்லை. கூட்டுறவு முயற்சியில்லாமையால்தான் சாகிறார்கள்'' என்று குறிப்பிட்டார் அண்ணல் காந்தியடிகள்.

''வாடித் தொழிலின்றி வறுமையால்
சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக்
குற்றத்தால் தோழர்களே!''

என்று சுட்டிக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன்.

எங்கும் எதிலும் கூட்டுறவு - என்றவாறு உலகம் தழுவிய அளவில் ஒரு சமூகப் பொருளாதார மறுமலர்ச்சி இயக்கமாகக் கூட்டுறவு இயக்கம் பரவி வேரூன்றி வளர்ந்துள்ளது. பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது மனிதனுக்கும் மனிதாபிமானத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து மக்கட் பணியாற்றுவது கூட்டுறவு இயக்கமாகும்.

உலகில் பல்வேறு கால கட்டங்களில் தோன்றிய பொருளாதாரக் கொள்கைகளிலும் முறைகளிலும் காணும் சிறப்பியல்புகளைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு, அல்லவைகளை அகற்றி, நல்லவைகளை வரவேற்று - ஒரு சமநிலையை இணைக்கும் சமதர்மப் பொற் சங்கிலியாகக் கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது. இந்தக் கருத்தைத்தான் ரெமைன் ரோலன்டு என்ற அறிஞர் ''கூட்டுறவு இரு புறமும் கொண்டு கூரிய கோடாரி போன்றது. ஒரு முனை சமதர்மத்தின் உளுத்துப்போன சித்தாந்தங்களையும், மறுமுனை முதலாளித்துவத்தின் பயனற்ற கொள்கைகளையும் வேரோடு வெட்டி எடுக்கிறது'' என்றார்.

கூட்டுறவு அமைப்பில் மக்கள் தங்களைத் தாமாகவே தம்மை மனிதர்கள் என்ற முறையில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஏற்றத் தாழ்வற்ற முறையில் சமதர்ம அடிப்படையில் தங்களது பொருளாதார மேம்பாட்டுக்காகக் கூடுகிறார்கள்.

உயர்ந்த இலட்சியங்களையும், ஒப்பற்ற கோட்பாடுகளையும் கொண்டு விளங்கும் கூட்டுறவு இயக்கம் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. எனினும், இந்தியாவில் இதன் கருத்துக்கள் உதயமாகி கடந்த 75 ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது. இந்திய வரலாற்றில் பல துறைகளிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்த தமிழகம் கூட்டுறவு முறையிலும் பின்தங்கிவிடவில்லை. இந்தியாவில் முதல் கூட்டுறவுச் சங்கம், அறிஞர் அண்ணா பிறந்த செங்கல்பட்டு மாவட்டம் திரூரில் தான் தோன்றியது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.


உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் -

என்றார் மகாகவி பாரதியார். கடலிலே பிறந்து, கடலிலே வாழ்ந்து, கடலையே விட்டுச் சென்று கண் கலங்கி நின்ற பல்லாயிரம் எளிய உழவர்களின் கண்ணீர் துடைக்கும் பணியில் துவங்கி, இன்று தமிழகத்தின் எல்லாத்துறைகளிலும்கூட்டுறவுப் பணிகள் படர்ந்துள்ளது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வது மட்டுமன்றி மக்கள் உயர்வுக்குச் சிந்தனை செய்வோம் என்ற உணர்வும் பெருகி வளர்ந்துள்ளது பெருமை தருவதாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கூட்டுறவியக்கத்தின் அடிப்படை அமைப்பாக 4700 கிராம வேளாண்மைப் பணிச் சங்கங்கள் செயல்படுகின்றன. விவசாயப் பெருங்குடி மக்களின் தேவையறிந்து பயிர்ச் செலவுக்குக் கடன் வசதியும் இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. உழவர்கள் கூடுதல் வருமானம் பெறத் துணைத்தொழில்கள் புரியக் கடன்வசதியும் நிலவளத்திற்காக உதவி நீண்ட காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன.தமிழகத்தில் உள்ள வேளாண்மைக் குடும்பங்களில் 75%க்கு மேல் கூட்டுறவு மூலம் பயன் பெற்று வருகிறார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மொத்தக் குடும்பங்களை கூட்டுறவுக் குடை நிழலில் கொண்டுவரும் பெருநோக்குடன், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் மூலம் ஷெட்யூல் பிரிவினரைச் சேர்ந்த 40,000 விவசாயக் குடும்பங்களை நடப்பு ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். அடுத்த ஆண்டில் மேலும் இருபது ஆயிரம் குடும்பங்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய பெருமக்களது வாழ்க்கைத் தரம் உயரப் பல்வேறு கடனுதவிகளைச் செய்தது மட்டுமன்றி இடுக்கண் வருங்கால் உடுக்கை இழந்தவன் கைபோல, இடர்கள் நேர்ந்த போதெல்லாம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவர் தலைமையில் இயங்கும் அரசு தாராளமாகச் சலுகைகள் வழங்கியுள்ளது.

அபராதவட்டி தள்ளுபடி, சாதாரண வட்டி தள்ளுபடி, வட்டி வீதம் குறைப்பு, குறித்த காலத் தவணையில் கடன்களைத் திருப்பிச்செலுத்திய உழவர்களுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடி போன்ற பல சலுகைகள்



நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சீராகப் பண்டங்கள் கிடைப்பதை உறுதி செய்ய கோவையிலும், சென்னையிலும் மண்டல விநியோக மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கவும் நுகர்வோர் நியாயவிலையில் காய்கறிகள் வாங்கவும் சென்னையில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பூங்கா நகர்க் கூட்டுறவுப் பண்டகசாலையும் சில்லறை அங்காடிகள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்து வருகின்றன.

கிராமப்புறங்களில் மின்சக்தியைப் பரவலாக வழங்கும் பொருட்டும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் கும்பகோணத்தில் கிராமிய மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திலும் ஒரு சங்கம் அமைக்கப்படவிருக்கிறது.

மாண்புமிகு சட்ட, கூட்டுறவுத் துறை அமைச்சர்

**திரு. சி. பொன்னையன் அவர்கள்**

வழங்கப்பட்டன. இதுவரை, உழவர்களுக்குச் சுமார் ரூ.200 கோடி வரை பல்வேறுபட்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. உழவர்களிடம் தமிழக அரசு காட்டும் பரிவுக்கு இது நல்ல சான்றாகும்.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மொத்தக் கடன் தொகையில் 20% நலிந்த பிரிவினருக்கு, அதாவது 5 ஏக்கருக்கும் குறைவாகச் சொந்த நிலம் உள்ளவருக்கும், குத்தகையில் பயிரிடுபவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறியாகும். ஆனால் கடந்த ஆண்டில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மொத்தக் கடனளவில் 51% நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை சுமார் 60% க்கு மேல் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தரமான பொருட்களை, நியாயவிலை, சரியான எடையளவில் வழங்கும் பணியில் 3660 பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஈடுபட்டுள்ளன. அவை கிராமங்களிலும் நகரங்களிலும் அமைந்திருக்கின்றன. இவற்றில் மாணவ மணிகளுக்குப் பாடநூல்கள், குறிப்பேடுகள் வழங்கும் சுமார் 2800 பண்டகசாலைகளும் அடங்கும். மேலும், கிராம மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு உதவ 11,000 கிராமக் கூட்டுறவு அங்காடிகளும் உள்ளன.

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், மலைவாழ் பழங்குடியினர் போன்ற சமூகத்தில் மிகவும் நலிந்த பிரிவினருக்கு உதவும் வண்ணம் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியமும், வேலைவாய்ப்பும் கிடைக்கின்றன.

மோட்டார் சைக்கிள் ரிக்ஷாக்கள் சொந்தமாக வைத்துக் கொள்ளவும் சைக்கிள் ரிக்ஷாவில் மோட்டார் பொருத்திக் கொள்ளவும் கடனுதவியும் மானியமும்வழங்கப்பட்டுவருகின்றன. உடல் ஊனமுற்றோரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த வேலூர், தஞ்சை, திருச்சி, கடலூர், நெல்லை ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலைவாழ் பழங்குடியினர் வாழ்வு மலர பயிர்த்தொழில் புரிய 4 சதவீத வட்டியில் கடனுதவி செய்யப்படுகிறது. அவர்களுக்குக் கடனுதவி செய்யவும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து உதவவும் நுகர் பொருட்கள் வழங்கவும் 12 ''லாம்ப்'' சங்கங்கள் செயல்படுகின்றன.

''சமுதாயத்தில் நலிவுற்றோர் நல்வாழ்வு பெறத் துணை புரிவதே நமது குறிக்கோள்களில் ஒன்று. கூட்டுறவு அணுகுமுறை அதற்கு உறுதுணை புரிகிறது'' என்று பண்டித நேரு குறிப்பிட்டதற்கிணங்க, தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் நலிந்தோர் வாழ்வு


## அட்டையில்

இந்தியாவில் உணவு பொருட்கள் நுகர்வோருக்கு கிடைக்க சிறந்த விநியோக முறை உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

நுகர்வோருக்குத் தேவையான பொருட்களை வழங்குவதில் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த பணி ஆற்றி வருகின்றன.

அட்டையில் அண்ணாநகர், சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பாங்காடி விற்பனைப் பகுதி.

வண்ணப்படம் உதவி : தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.




பேராசிரியை பி. பி. இராஜராஜேஸ்வரி

பறவையினங்கள்
நாளை பற்றிக் கவலைப்படுவதுண்டா?
மலர்க் கூட்டங்களுக்கும்
அந்தக் கவலை ஏது?
நேற்றைய நினைப்பிலும்
இன்றைய வாழ்விலும்
நாளைய எதிர்பார்ப்பிலும்
மனிதன் வாழ்க்கைத்தேர்
ஓடுவது உண்மையன்றோ?
அறிவைச் சேமிப்பவன்
அறிஞன் ஆகின்றான்;
ஆற்றலைச் சேமிப்பவன்
வீரன் ஆகின்றான்;
பொருள் சேமிப்பவன்
இன்று செல்வன் அல்லவா?
சேமிப்பு வாழ்வின்
அரிச்சுவடி சிக்கனம்;
சிக்கனத் தாயின்
செல்வக்குமரி சேமிப்பு;
இன்று
அனைத்துலக மன்றத்தார்
சிக்கன அன்னையின்
சிறப்பினைப் பாராட்டிச்
சேமிப்புக் குமரிக்குத்
திருவிழாக் காண்கின்றனர்!

(சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 6.11.82 அன்று நடைபெற்ற உலகச்சிக்கன நாள் விழாவில் வாசித்த வரவேற்புக் கவிதையின் ஒரு பகுதி)

பொலிவு பெற தளராது பணிபுரிந்து வருகின்றன.

மேலும், நலிந்த பிரிவினரான கிராமக் கைவினைஞர்களுக்கு உதவும் வண்ணம், அவர்கள் சிறு தொழில்கள் அல்லது குடிசைத் தொழில்களில் சடுபட குறைந்த வட்டியில் (4%) நகர வங்கிகளும் உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் கடனுதவி செய்கின்றன.

உழைப்பின் பயன்முழுவதும் இடைத்தரகர்களின் தலையீடின்றி உழைப்பவர்களையே சென்றடையவேண்டும் என்பதுதான் கூட்டுறவின் அடிப்படை நோக்கம். சமத்துவ சமுதாயம் மலர கூட்டுறவே ஏற்ற சாதனம். பெருகும் மக்கள் தொகையும், அவர்களில் பெருமளவு மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் கொண்டுள்ள நமது நாட்டில் சீரான பொருளாதார முன்னேற்றம் காணக் கூட்டுறவே ஏற்ற வழி.

## தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்குக் கூடுதலாக ஒரு தவணை அக விலைப்படி அளிக்க அரசு 1.11.82 அன்று உத்தரவிட்டுள்ளது. குறைந்தபட்சம் ஆறு ரூபாயிலிருந்துஅதிகபட்சம் முப்பது ரூபாய் வரையில் கிடைக்கும்.

அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இது கிடைக்கும். இந்த அகவிலைப்படி, நவம்பர் மாதத்தில் பெறும் அக்டோபர் மாதச் சம்பளத்திலிருந்து கொடுக்கப்படும்.


இதன்மூலம் எட்டு இலட்சத்துக்கும் அதிகமானவர் பயன் அடைவார்கள்.

இத்துடன் 17 தவணைகள் அகவிலைப்படி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதினேழாவது அகவிலைப்படி உயர்வால் அரசுக்கு முழு ஆண்டுக்கு 12 கோடி ரூபாயும், நடப்பு ஆண்டுக்கு ஐந்து கோடி ரூபாயும் கூடுதலாகச் செலவு ஏற்படும்.

நமது தலைமையின் தலைசிறந்த ஜனநாயகவாதியான பண்டித நேரு நமது நாடு முன்னேற வேண்டுமென்றால் கூட்டுறவு அணுகு முறையே ஏற்றது என்று நம்பிக்கை கொண்டிருந்தார். ஏனெனில், கூட்டுறவு நிறுவனங்கள் மக்களாட்சிப் பயிர்விளையும் நாற்றங்கால்கள். அவை, சமூக முன்னேற்றத்துக்கு ஏற்ற சாதனங்கள்.

''கூட்டுறவு இயக்கத்தில் சடுபட்டுள்ளவர்கள் தங்கள் சொந்த நலனை முன்வைக்காமல், பிறர் நலனைக் கருத்தில் கொண்டு பாடுபட வேண்டும். இந்த மனப்பக்குவம் ஏற்பட்டால் இயக்கம் சிறப்புற்று வளர்ந்தோங்கும். சமூகம் முழுதும் தோழமை வளரும்'' என்று கனவு கண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரது கனவு நனவாகவும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவும் நமது பயணம் தொடரட்டும்!


# நேருவின் அமுத மொழிகள்





மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத்திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி' 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் திட்டங்கள் வகுக்கவேண்டும்.



வாழ்வில் எதையும் வெறுத்துக் குறை காண்பவன் எவ்வளவுதான் அறிவுக் கூர்மை படைத்திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்றலும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.



பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றையத் தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

மனிதன் புற உலகை வெல்கிறான்; தன்னைத் தான் வெல்வதிலே தோற்கிறான்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத்தான் செல்வத்தைப் படைக்கும்.



பணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள். பணம் பயனுடையதுதான், ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான். பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கினவன் -மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கினவன் மனிதன்தான். பணம் அன்று.



மக்களுக்கு எழுச்சியூட்ட வேண்டுமாயின் பெண்ணுக்கு விழிப்பூட்ட வேண்டும். பெண்மை சக்தி கிளர்ந்தெழுந்தால் குடும்பம் கிளர்ந்தெழும்; கிராமமும் கிளர்ந்தெழும்-நாடும் கிளர்ந்தெழும்.

ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன்வருவதில்லை; அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங் காணவோ சிறிதும் தயங்குவதில்லை.

தொகுப்பு : மாமூலன்


# படமும் செய்தியும்



ஐரோப்பிய சமுகங்களின் குழுத் தலைவர் மேதகு காஸ்டன் தோரான் சென்னைக்கு 3.11.82 அன்று வருகை தந்தபொழுது, மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா வரவேற்பு விருந்தளித்தார்.



இங்கிலாந்து நாட்டுத் தூதுவர் திரு ராபர்ட் வேடே-ஜெரி மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களை 4.11.82 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



தமிழ்நாட்டின் வறட்சிநிலை, உணவு நிலைமை பற்றி விவாதிக்க 23.10.82 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அரசு இணை வேளாண்மை அமைச்சர் திரு ஆர். வி. சாமிநாதன் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.



சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தனியாக 'கபால்ஸ்குழு' (Gabaltz club) என்ற குழுவினை அமைத்து, அதன் மூலம் முதல்மைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக ரூ. 1,500 பெறுமானமுள்ள 100 தட்டுகளை மாண்புமிகு ஊரகக் கைத் தொழில் அமைச்சர் திருகே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடம் 6.11.82 அன்று அளித்தார்கள்.



சென்னை இராணி மேரிக் கல்லூரியில் 6.11.82 அன்று நடைபெற்ற உலக சிக்கன நாள் விழாவில் சிறுசேமிப்பு காவன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி-பள்ளிகளுக்கு மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சுழற்கேடயங்களை வழங்கினார்.



சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் 20-வது கிளையை, சென்னை பெரியார் நகரில் 4.11.82 அன்று மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் திறந்துவைத்து முதல் வைப்புத் தொகையைப்பெறுகிறார்.





தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகததின் வட்டார வாரியத்தின் 42-வது கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் 22.10.82 அன்று நடைபெற்ற பொழுது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் பற்றி விவாதிக்க, தமிழ்நாடு ஆந்திரா மாநில தலைமைச் செயலாளர்கள், பொதுப்பணித் துறைச் செயலாளர்கள் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் 5.11.82 அன்று நடைபெற்றது.



புது டில்லியில் நடைபெறும் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 2.11.82 அன்று பார்வையிட்டார்.

நம் நாட்டில் உள்ள 6,100 கி.மீ. நீளமுள்ள கடற்கரையில் ஏறத்தாழ 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரை தமிழ்நாட்டில் உள்ளது. கடலோரமுள்ள மீனவர்களுக்கு மீன் பிடித்தல் முழுநேரப்பணியாகும்.

இந்தியப் பெருநாட்டின் கடல்களில் பெருவாரியாக மீன்வளம் இருந்தும் அதனைப் பெருமளவில் பிடிப்பதற்கும், அதன்மூலம் வருவாயைப் பெருக்கவும் மீனவ மக்களால் இயலவில்லை. அண்மைக்காலம் வரை கட்டு மரம், நாட்டுப்படகு போன்ற கலங்களையும் தூண்டில் முள், பருத்தி வலை போன்ற சாதாரண உபகரணங்களையும் உபயோகித்ததால் இவர்களால் அதிக அளவில் மீன் பிடிக்க முடியவில்லை. எனவே மீன்பிடித் தொழிலில் பல நூதன சாதனங்களைப் புகுத்தி, தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவர்களின் வருவாயை அதிகப்படுத்த அரசு முடிவு செய்தது.


மீன்பிடித் தொழிலுக்குப் புத்துணர்ச்சி ஊட்டவும், மீனவர்களின் பொருளாதாரத்தில் மேம்பாட்டை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யவும் கூட்டுறவு அமைப்பே சிறந்த சாதனமாகும் என்பதைக் கண்டு தெரிந்து அரசு கடலோரப் பகுதிகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் பல மீனவர் கூட்டுறவு சங்கங்களைத் தோற்றுவிக்கத் தலைப்பட்டது.

1918ஆம் ஆண்டு, முதல் மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. 1952ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் 52ஆக இருந்த மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 1960ஆம் ஆண்டில் 230ஆக உயர்ந்து தற்போது 515ஆக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதம மீனவக் கூட்டுறவு சங்கங்கள் ... | | 476 |
| | உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் | 187 | |
| | கடல் மீனவர் கூட்டுறவு சங்கம் | 289 | |
| 2. | மீனவர் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவு மீன் விற்பனை சங்கங்களும் | | 22 |
| 3. | மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள் ... | | 9 |
| 4. | ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் தரும் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சங்கங்கள் | | 5 |
| 5. | மீனவப் பெண்கள் கூட்டுறவு சங்கங்கள் | | 3 |
| | கூடுதல் | | 515 |

# மீனவர் நலனில் கூட்டுறவு

வி. சங்கரசுப்பையன், இ.ஆ.ப.,
இயக்குநர், மீன் துறை.



## செங்கற்பட்டு மாவட்டம் வழிகாட்டுகிறது!

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், சத்துணவு மையங்களில்–பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு தயாரிப்பதற்காக அரிசி-பருப்பு-எண்ணெய் ஆகியவை அவ்வப்போது லாரிகள் மூலம் வழங்கப்படுகின்றன. தவிர்க்க முடியாத காரணங்களினால், இம்முறையில் தடையோ-தாமதமோ ஏற்பட்டு, குழந்தைகளுக்கு உணவு வழங்குவதில் குந்தகம் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.ஜே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி இம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் 10 மூட்டை அரிசி 5–மூட்டை பருப்பு 20–கிலோ எண்ணெய் எப்போதும் கைவசம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தகவல்:–டி.கே.டி.துரைராசன்

தமிழகத்திலுள்ள 308 கடலோர மீனவக் குப்பங்களும் 463 உள்நாட்டு மீனவக் குப்பங்களும் மீனவக் கூட்டுறவு சங்கங்களின் விவகார எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

### மீனவர் வாழ்வும் வளமும்

மீனவர்களில் பெரும்பான்மையோர் ஏழைகளிலும் பரம ஏழைகளாக உள்ளனர். அநேக மீனவர் சாதாரண கட்டுமரம் மற்றும் அதற்குரிய வலைகளைக்கூட சொந்தமாகப் பெற்றிராத நிலையிலுள்ளனர். மேலும் இவர்கள் வருவாயும் நிலையானதாகவோ, ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடியதாகவோ இல்லை. அடிப்படை மீன்பிடி சாதனங்களுக்கும், அவசரத் தேவைகளுக்குமாக இவர்கள் மீன்பிடிக்கச் சொந்தக்காரர்களிடத்திலிருந்தும், லேவாதேவிக்காரர்களிடத்திலிருந்தும், இடைத்தரகர்களிடத்திலிருந்தும் கடன்பட்டவர்களாகவே உள்ளனர்.

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்ப காலத்தில் சாதாரண நாணயச் சங்கங்கள் போன்றே செயலாற்றின. இவை மீனவ அங்கத்தினர்களின் முன்கடன் தீர்க்கவும், மீன்பிடி சாதனங்கள் வாங்கவும், இதர அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கவும், குறைந்த வட்டியில் நீண்டகால, மத்தியகால மற்றும் குறுகியகால அரசுக் கடன்கள் வழங்கின.

### மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இதுகாறும் வழங்கிய அரசுக் கடன்கள்:

| | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நீண்ட காலக்கடன் | 37.00 |
| 2. | மத்தியகாலக் கடன் | 16.00 |
| 3. | குறுகியக்காலக்கடன் | 0.50 |
| 4. | நடைமுறைக்கடன் | 12.65 |
| 5. | கிடங்குக் கடன் | 0.90 |
| 6. | இடைத்தரகர்களை நீக்கும் திட்டங்களுக்கு | 11.94 |
| | கூடுதல் | 78.99 |

கடன் லேவாதேவி செய்வதனால் மட்டுமே மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத் வழியில்லையென்பதை உணர்ந்து நாளடைவில் இந்த சங்கங்கள் மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்கான நவீன சாதனங்களான விசைப்படகுகள், நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள், நைலான் நூல், நைலான் வலை, மீன் பதப்படுத்தும் அமைப்புகள், விரைவு வாகன வசதிகள் ஆகியவைகற்றையும் உள்நாட்டு மீனவர் வருமானத்தைப் பெருக்க மீன் உற்பத்திப் பெருக்கத்தையும் ஏற்க முற்பட்டுள்ள தோடு மீன் விற்பனையும் பெருமளவில் ஏற்க முனைந்துள்ளன.

அதன் விளைவாக அரசு நிதி உதவி தவிர இதர நிறுவனங்களில் நிதி உதவியையும் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் பெற்று பயனடைந்துள்ளன.

வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம், சென்னை மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் திருநெல்வேலி மீனவர் கூட்டுறவு இணையம், ஆகியவற்றுக்கு 110 மீன்பிடி விசைப்படகுகளை 110 மீனவர் குழுக்களுக்கு வழங்க நிதி உதவி செய்துள்ளது.

### தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவி

புது டில்லியிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மீன்பிடி விசைப்படகுகள், நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள், நவீன மீன்பிடி நைலான்வலைகள் ஆகியவை வாங்கி மீனவ அங்கத்தினர்களுக்கு வழங்கவும், மீன் விற்பனைக்கு விரைவு சாதனமான போக்குவரத்து ஊர்திகள் வாங்கவும், சிட்டங்கிகள் கட்டவும், மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கவும், 1978-79ம் ஆண்டு முதல் தடவையாக மூன்று சங்கங்களுக்கு ரூ. 4.16 லட்சம் அளித்தது. இன்றளவில் 29 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 105.42 லட்சம் மேற்கண்டகாரணங்களுக்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்றுள்ளன.

### இதர வகை நிதி உதவிகள்

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நவீன மீன்பிடி விசைப்படகுகள் வாங்கவும், நாட்டுப்படகுகள் வாங்கவும், நைலான் வலைகள், துரித வாகன ஊர்திகள் வாங்கவும், மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கவும், அவற்றிற்குத்தேவையான குளிர்பதனப் பெட்டிகள் வாங்கவும், பணியாளர் நியமிக்கவும், 50 சதவீதம் கடன் மற்றும் 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில் 35 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 85.64 லட்சம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கிராமப்புனரமைப்பு நிறுவனம் 100 மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வலைகள் வழங்க ரூ. 1 லட்சம் வழங்கியுள்ளது.

சுவீடன் நாட்டின் ''ஹிட்கா'' நிறுவனம், எண்ணூர்குப்பம் மற்றும் எண்ணூர் முகத்துவாரக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுள் 115 பேர்களுக்கு கட்டுமரம் மற்றும் வலைகள் வழங்குவதற்கென ரூ.5 லட்சம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிட மீனவப் பெருமக்களைப்

பெருமளவில் அங்கத்தினர்களாகக் கொண்ட லைட் ஹவுஸ் குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு நாட்டுப்படகுகள் வாங்கவும், வலைகள் வாங்கவும், சிட்டங்கி கட்டவும் தனி அங்கத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் மானியமாகவும் ரூ. 6,40,000 வழங்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டு மீனவர் நலம்

தமிழ் நாட்டில் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் அடங்கிய உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பு சுமார் 3,50,830 ஹெக்டர்களாகும். இந்நீர் நிலைகள் சுமார் 2,00,000 டன்கள் மீன் உற்பத்தி செய்யத் தகுந்தவை என கணக்கிடப்பட்டுள்ளன. உள்நாட்டில் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் முதலிய வற்றில் மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன. அரசுக்கும், உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்கும் சொந்தமான ஏரி, குளம் ஆகியவைகளில் மீன்பாசிக் குத்தகை உரிமையை, முந்தைய ஆண்டின் ஏலத் தொகையிலிருந்து 20 சதவீதம் கூட்டி, மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு அளிக்கவல்ல தனிச்சலுகையை அளித்து அரசு ஆணைபிறப்பித்துள்ளது. மீன்பாசிக் குத்தகை பொது ஏலத்தில் விடப்பட்டால் கூடுதலான தொகைக்கு ஏலம் விடப்பட்டு மீனவர்களின் வருவாய் பாதிக்கப்படக்கூடும். எனவே மீனவர்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் பயன்பெறும் வண்ணம் பொது ஏல முறையை ரத்துசெய்து மீன்பாசிக் குத்தகை உரிமையை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கே அளித்துள்ளது. இதனால் பெரும்பான்மையான உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பங்குபெறுகின்றார்கள்.

### இறால் மீன் வளர்ப்பு

இறால் மீன் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் காரணத்தால் அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. எனவே மீனவர்களும் இறால் மீன் பிடிப்பதிலேயே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர்.

தமிழக அரசும் இறால் மீன் வளர்ப்பின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு தமிழக கடற்கரைப் பகுதிகளில் இறால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற சுமார் 27,000 ஹெக்டேர் கழிமுக நீர் நிலைப்பகுதிகளில், இறால் வளர்ப்புக்கு அரசு பயன்படுத்த எடுத்துக் கொள்ளும் பகுதிகளைத் தவிர, இதர பகுதிகளை மீனவக் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே இறால் வளர்ப்பிற்கு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்க ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த ஆணையின் பயனாக தஞ்சை மாவட்டம் அதிராமபட்டினத்தில் ஓர் இறால் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு 50 ஹெக்டேர் நிலம் இறால்மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு மீனவ கிராமத்தில் உள்ள மிகப் பரந்த கழிமுக நீர்நிலைப்பகுதியில் 50 ஹெக்டேர் நிலத்தில் இறால் மீன் பண்ணைகள் அமைக்க காரங்காடு இறால் மீன்



உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன் பகுதியிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் கீழவைப்பார் கிராமத்திலும் இறால் வளர்ப்புப் பண்ணைகள் நிறுவ இறால் வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### வேலை வாய்ப்பு

ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் பணிப்பெருக்குத் திட்டத்தின் கீழ் 4 படகு கட்டும் சங்கங்களும் 15 படகு ஓட்டுநர் சங்கங்களும், 4 சேவை மையங்களும், 4 மீன் பதப்படுத்தும் சங்கங்களும் கூட்டுறவு அமைப்பின்கீழ் துவக்கப்பட்டன. 1973-74ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டுறவு சங்கங்கள் சரியானபடி பணியாற்றவில்லை. எனவே அவற்றில் 22 சங்கங்கள் கலைக்கப்பட்டு 5 சங்கங்களே இயங்கி வருகின்றன.

### மீன் வளப்பெருக்கம்

மீன் வளர்ப்பு பிற்பட்ட தொழிலாகக் கருதப்பட்டு மீனவர்கள் மட்டுமே அத்தொழிலில் ஈடுபட்ட நிலை மாறி விஞ்ஞான முறையில் மீன் வளர்ப்பில் நமது நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கென செயற்படுத்தப்பட்டுவரும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்மூலம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் வருவாய்த்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆர்வமுள்ள மீன் வளர்ப்பார் வசம் ஒப்படைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான ரீதியில் தூண்டுதல் முறையில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும், அவற்றை வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி 1 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள குளத்தில் 1500 கிலோ மீன் உற்பத்தி செய்யவேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

இவ்வித திட்டத்தின் கீழ் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் மீன்களை விற்பனை செய்யவென தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெருமெடுப்பில் மீன் விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### விற்பனை முயற்சி

இந்தியா போன்ற நாடுகளில் விவசாயப் பொருளாதாரம் மக்களின் வாழ்க்கை ஆதாரமாக இருந்தாலும் மக்கள் கடன் சுமையினால் பெரிதும் அல்லலுறுவதற்கு முக்கிய காரணம் கூட்டுறவு விற்பனை மற்றும் பதன வசதிகளை

போதிய அளவில் பெறாததுதான், அல்லது அவற்றை அசட்டை செய்வதுதான் என்று கூறப்படுகிறது. கூட்டுறவில் வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் உறுப்பினர்களின் விளைபொருகளுக்கு நல்ல ஆதாய விலையைப் பெற்றுத் தருவதில் அந்நாடுகளின் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் குறிப்பிடத்தக்க பங்கு பணியாற்றியுள்ளன.

எனவே, மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனைப் பதப்படுத்துவதிலும், அதனை ஆதாய விலைக்கு விற்பதிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு முன்னோடியாக திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மூன்று உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள் நிறுவபட்டுள்ளன. இச்சங்கங்களில் அரசு பங்கு மூலதனமாக ரூ. 1.65 லட்சம் முதலீடு செய்துள்ளது. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மீன்துறை ஆய்வாளர் செயலாளராகப்பணியாற்ற அரசு ஆணை பிறப்பித்து அதற்காக ரூ. 68,000 மானியமாக வழங்கியுள்ளது.

மீனவர் கூட்டுறவுகள் மீன் விற்பனையில் நல்லதோர் முன்னேற்றம் காணவும், அரும்பாடுபட்டு பிடித்துவரும் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து அதன்மூலம் மீனவர் சமுதாயத்தை சமூக பொருளாதார நிலைகளில் ஏற்றம் காணச் செய்வதும் இன்றைய தலையாய தேவை என்பதை உணர்ந்து ஆரம்பிக்கப்பட மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கம் மீனவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. இதே கருத்தில் மீன் விற்பனைக்காக விரிவான திட்டங்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**இதர பணி**

இயற்கையின் சீற்றம் ஏற்பட்டு மீனவ சமுதாயம் அல்லற்படும்பொழுது தமிழக அரசு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மிகுந்த அளவிலே நிதி உதவியை அளிக்கின்றது. இவ்வித உதவி மீனவர் கூட்டுறவு சங்கங்களின் துணை கொண்டு நிறைவேற்றப்படுகின்றது.

மீன்பிடிக்கச் செல்லும்போது இறந்துவிட நேர்ந்தால் அரசு வழங்கும் சட்டுத் தொகையும், மீனவர் கூட்டுறவு சங்கங்களின் துணையுடனேயே செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டில் 9 திங்கள்களுக்கு மீன்பிடித்தும், மூன்று திங்கள்களுக்கு மீன் கிடைக்காத காரணத்தால் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்க நேரும் மீனவர்களுக்கு வாழும்வகை செய்து தந்த தமிழக அரசின் ''தமிழ்நாடு கடல மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி''த்திட்டமும், மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயலாக்கப்படுகின்றது.

மீனவப் பெருமக்களின் அறியாமையே அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பக்க பலமாக உள்ள கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்கும் பெருந்தடையாக உள்ளது. எனவே மீனவ அங்கத்தினர்கள் அவர்கள் அங்கம் வகிக்கும் கூட்டுறவு சங்கத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும் குறித்து கூட்டுறவுக் கல்வி புகட்ட வேண்டியது அவசியமாகிறது. அதற்காக அங்கத்தினர் பயிற்சிக் கல்வித் திட்டம் அமுலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் தன்னிறைவு பெற்ற சங்கமாக இருப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கியால் கீழ்கண்ட தேவைகள் வற்புறுத்தப்பட்டன.

பயிற்சி பெற்ற முழுநேர செயலாளர் விவகார எல்லையின் பரப்பு—10 கி.மீ.

குறுகியகால் வேளாண்மைக் கடன்லேவா தேவி—ரூ. 2,00,000

விவசாய நிலத்தின் பரப்பு 2,000 ஹெக்டர்

இதன் அடிப்படையில் கிராம வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் திருத்தி அமைக்கப்பட்டு தன்னிறைவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. ஆனால் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு இவ்விதத் திட்டவட்டமான விதிமுறைகள் வகுக்க இடமில்லாதிருக்கிறது. எனினும் ஒரு மீனவர் கூட்டுறவு சங்கம் தன்னிறைவுபெற்ற சங்கமாகத் திகழ, அங்கத்தினர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு அளிக்கும்வண்ணம் மீன்பிடி நிர்நிலைகள் இருக்கவேண்டுமெனவும் அனைவரும் அணுகும்வண்ணம் ஒரு பொது இடத்தில் சங்க அலுவலகம் அமைக்க படவேண்டுமெனவும், சங்கத்தில் ஊதியம் பெறும் எழுத்தர் ஒருவராவது இருக்கவேண்டுமெனவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, மீனவர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நிலைமை, ஊதியம்பெறும் பணியாளர்களை நியமிக்க இயலாத நிலையில் இருப்பதால், அரசு, பணியாளர் மானியம் வழங்க முன்வந்துள்ளது. அரசு மானிய உதவி பெறுவதன்மூலம் படிப்படியாக அமைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களையும் தன்னிறைவு பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சமூகத் தொண்டு**

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அவற்றின் அங்கத்தினர்களிடையே நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமூக நீதியை உருவாக்குவதில் வெற்றிமுகத்தில் உள்ளன. ஒரு வணிக நிறுவனம் என்ற அளவில் மீனவர் கூட்டுறவு சங்கம் வலிவுள்ளதாகவும், தொண்டாற்றும் நிறுவனம் என்ற அளவில் தொண்டு செய்வதைக் குறிக்கோளாகவும் கொண்டு இயங்கி மீனவ சமுதாயத்தை மேம்படுத்தவும் அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் உயர்த்தவும் அனைவரும் பாடுபடுவோமாக.

**பனைப் பொருள் வளாகங்கள்**

இராமநாதபுரம் மாவட்டம் மரியூரில் 34.74 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது. மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் பனைப் பொருள் வளாகங்கள் துவக்க அரசு ரூ. 24.566 இலட்சம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் இப்பகுதிகளில் உள்ள 3040 பேர் நேரடி-மறைமுக வேலை வாய்ப்புக்களைப் பெறுவர்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பர் சான்றோர். கூட்டுறவுக் கொள்கையால் நாடு உயர்வதால் பலவித நன்மைகள் பெருகுகின்றன. பொருளாதார முன்னேற்றத்தோடு முன்னேற்றத்தின் பலன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் சேர கூட்டுறவுக் கொள்கை சாதகமாக அமைகிறது. எனவே பொருளாதார முன்னேற்றத்தோடு, சமுதாய மறுமலர்ச்சியையும் அடைய, சிறந்த ஒரே வழி கூட்டுறவு வழியே.

இத்தகைய புனிதமான நோக்கத்தைச் செயல்படுத்தவே, பல்வேறுபட்ட கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களும் ஒருபிரிவு ஆகும்.

உலகத்தில் 60 கோடி செம்மறியாடுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் இந்தியாவில் மட்டும் உள்ளவை 4 கோடி ஆகும். இதனால் இந்தியா ஆடுகள் இருப்பில் உலகத்தில் 5வது இடத்தை வகிக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் 66 லட்சம் ஆடுகள் இருக்கின்றன. அது இந்தியாவில் இருக்கும் ஆடுகளில் 16.5 சதவீதமாகும். இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஆட்டினம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகையால் ஆட்டினத்தை இயல்நூலறிவு மூலமாகவும் ( Scientific ) மற்றும் திட்டமிட்டு வளர்த்து ஆடு வளர்ப்பவர்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

செம்மறியாடுகள் பலவகையிலும் உபயோகப்புடுவதால் தேசிய முக்கியத்துவமுடையதாகும். அதனுடைய இறைச்சி மக்களுக்குச் சத்துணவாகவும் அதனுடைய சாணம் நல்ல எருவாகவும் உபயோகப்படுகிறது. மாட்டின் சாணத்தைவிட இரு மடங்கு நைட்ரஜன் மற்றும்பொட்டாசியம் இதில் உள்ளதால், அதனை வயல்களில் உரமாகப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க முடிகிறது. அதனுடைய உரோமம் மனிதனுக்குக் கம்பளி ஆடையாகவும் பயன்படுகிறது. அதனுடைய தோலை பதனிட்டு பலவிதமான பொருள்களைசெய்ய பயன்படுத்துகிறார்கள். வெளி நாடுகளுக்குத் தோல் ஏற்றுமதி செய்யப்படுவதால் நம்நாட்டுக்கு முக்கியமாக தேவைப்படும்அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. எனவே, இத்தொழில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எவ்வளவு முக்கியமானது என்றும் இத்தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து மேம்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் உணரலாம்.

பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள சிறு விவசாயிகள் ஆடு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் போன்றோரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இது மிகவும் பயனுள்ளதாகும். இது குறைந்த விலையில் கிடைப்பதாலும் வளர்ப்பதற்கு சுலபமாக இருப்பதாலும் அதனை ஒரு சாதாரண விவசாயி தன்னுடைய வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தை ஈட்டுகின்ற சொத்தாகவும் தனது வருமானத்தை அதிகரிக்க ஒரு வழியாகவும் பயன்படுத்துகிறார்கள். அதனுடைய பராமரிப்பிற்கு குறைந்த செலவே ஆகும். அவை மேய்ச்சல் தரையில் உள்ள புல்களையும், அறுவடை செய்யப்பட்ட வயல்களிலும் வனங்களிலும், மலைச்சரிவுகளிலும் அவைகளின் உணவை தேடிக் கொள்கின்றன.

**வி. மணிவண்ணன்**

**இயக்குநர்,**

**கால்நடை பராமரிப்புத் துறை,**

**சென்னை.**

### ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் நோக்கம்

முன் நாட்களில் ஆடுவளர்ப்பைக் கல்வியறிவில்லாத, ஏழ்மையில் உழலும் சில இனத்தவர் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தங்கள் தொழிலில் புதுமையைப் புகுத்தவில்லை. ஆதலால் அவர்கள் நிரந்தரமாக வறுமையில் வாடினார்கள். பசுமைப் புரட்சிக்கு முக்கியத்துவம்கொடுக்கப்பட்டு தரிசு நிலங்கள் யாவும் உணவு உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் இவர்களின் ஆடுகளுக்கு மேய்ச்சல் தரை இல்லாமல் போய்விட்டது. இதனால் ஆடுகளுக்குப் போதிய மேய்ச்சல் நிலமின்றி, உணவு பற்றாமையால் எளிதில்தொத்து நோயால் பாதிக்கப்பட்டு இறந்தன.

ஆகையால் இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க நூதன வழிகள் மூலம் உயரின ஆடுகளை பராமரிக்கும் நோக்குடன் ஆந்திரத்தில் உள்ள பல்லாரி மாவட்டத்தில் 'குடுதினி' என்ற ஊரில் முதன் முதலாக 'ஆடுவளர்ப்பு மற்றும் கம்பளி நெய்தல் கூட்டுறவு சங்கம்', சென்னை மாகாணத்தில் (தமிழ்நாடு, ஆந்திரம்,



# ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்

# டான்சி


## தரமேன்மையான பொருட்களுக்கு நம்பகமான அறிமுகமான பெயர்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும், அலுவலகங்கள், இல்லங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதில், நாடு முழுவதிலும் பொதுத்துறையில் டான்சி தனித் தன்மையுடன் விளங்குகிறது.

- கனரக மற்றும் இலகு எஃகு கட்டுமானங்கள்.
- முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண்ணலைக் கோபுரங்கள்.
- தொழிற்சாலைக்கான இயந்திரங்கள்.
- இல்லங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கான உறுதிமிக்க பாதுகாப்புப் பெட்டிகள், எஃகு மற்றும் மர பர்னிச்சர்.
- வார்ப்பட குழாய்கள், அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.
- தோல், தோலாலான பொருட்கள்.
- காலணிகள், நவீன தோல் பொருட்கள்.
- ஆழ்கிணறு கை குழாய்கள்.
- எனாமல் பூசப்பட்ட செப்புக் கம்பிகள்.
- பிரஞ்சு பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.
தொலைபேசி : 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

கேரளம் பிரிவதற்கு முன்)அமைக் கப்பட்டது.

அச்சங்கத்தினுடைய முன்னேற்றத்தை கண்ணுற்ற பின் மதுரை மாவட்டத்தில் 1948-ல் சுந்தராஜபுரம் கிராமத்தில் ஒரு ஆடுவளர்ப்பு மற்றும் கம்பளி நெய்தல் கூட்டுறவுச் சங்கம் குரும்ப கவுண்டர்களுக்காக அமைக்கப்பட்டது. அதற்கு அதிக ஆதரவு இருந்தபடியால் மேலும் 5 சங்கங்கள் மதுரை மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டன.

இச்சங்கங்களை தோற்றுவிக்கும்போது கூட்டுறவு அலுவலர்கள் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களை அணுகி கூட்டுறவுச்சங்கங்கள் நல்ல முறையில் நடக்க கலந்தாலோசித்து வந்தார்கள். ஆடுவளர்ப்பு சங்கங்கள் அமைக்க மனு பெற்றதும் பதிவாளர் கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்களை அணுகி இம்மனுவில் கூறப்பற்றுள்ளவைகள் எல்லாம் சரிதானா, தொழில் முறைப்படி (Technically) இச்சங்கத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமா என அறிந்து அரசாங்கத்திற்கு இச்சங்கத்தை பதிவு செய்யலாம் என்று பரிந்துரைசெய்வார்கள். சங்கங்களைப் பதிவு செய்த பின்னும் அரசாங்க உதவியுடன் பெறப்பட்ட ஆடுகளின் இனவிருத்தி, மருத்துவ உதவி முதலியவைகளுக்காக கால்நடைத்துறையை அணுகுவார்கள் (Technical care & Supervision) தொழில் நுட்ப பராமரிப்பும் மேற்பார்வையும் முக்கியமாக பங்கு ஏற்க வேண்டும் என்பது அனுபவ பூர்வமாக கண்டறியப்பட்ட உண்மை. ஆகையால் இச்சங்கங்களை கூட்டுறவுத் துறையிலிருந்து கால்நடைத் துறைக்கு மாற்ற அரசு முடிவு செய்து அரசு ஆணை எம். எஸ். எண் 1603 உணவு மற்றும் விவசாயம் நாள் 10-5-63-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு 1-1-64 இல் கால்நடைத்துறைக்கு மாற்றப்பட்டது. கூட்டுறவுச் சட்டப்படி கூட்டுறவுப் பதிவாளருக்கு உள்ள அதிகாரங்களை அனைத்தும் கால்நடைபராமரிப்புத்துறை இயக்குநருக்கு அன்னாருடைய கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களை பொறுத்தவரையில் அளிக்கப்பட்டது. கால்நடைத் துறைக்கு மாற்றப்பட்டதும் மாதிரி விதிகளை (Model by laws) சிறந்த முறையில் மாற்றி அரசின் ஒப்புதலைப் பெற்று தமிழ்நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான 'மாதிரி விதிகள்' அனுமதிக்கப்பட்டன.

1964-ல் 6 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்தான் இருந்தன. இப்பொழுது 714 சங்கங்கள் உள்ளன. 39 சங்கங்களுக்கு விவசாய மறுநிதி கழக மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தமிழ்நாடு மாநில வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ. 82.08 லட்சம் 2,035 அங்கத்தினர்களின் நன்மைக்காகக் கடன் வழங்கப்பட்டது. மத்திய வங்கிக்கு கடனைத் திருப்பிச் செலுத்த இச்சங்கங்கள் தவறினால் அதை திருப்பிச் செலுத்த அரசு உறுதிமொழி அளித்திருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூ. 2,500-க்கு ஒரு கிடா மற்றும் 24 பெட்டை ஆடுகளும் வாங்கி கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு சங்கத்திலும் 50 அங்கத்தினர்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன. இக்கடன்களுக்கு வட்டி 10 சதவீதம் ஆகும் மேலும் ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 100 வீதம் 2 கிடா வாங்க ரூ. 200 கொடுக்கப்பட்டது. மொத்த கடனில் 75 சதவீதம் விவசாய மறுநிதிகழகத்தினாலும் மீதம் உள்ள 25 சதவீதம் (ரூ. 12.74 லட்சம்) 39 சங்கங்களுக்கும் பங்குத்தொகையாகவும் கொடுக்கப்பட்டது. இப்பங்குத்தொகை எட்டாவது வருடம் முதல் ஐந்து வருடத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். மற்றும் தளவாட சாமான்கள் வாங்க ஒவ்வொரு சங்கத்துக்கும் ரூ. 1,750 வீதம் 39 சங்கங்களுக்கு 7 சதவீத வட்டி வீதம் கொடுக்கப்பட்டது. மேலும் அரசு இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் தனது மூலதனமாக ரூ. 30,000-க்கு குறைவில்லாமல் அளித்துள்ளது.

மேலும் 30 சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் கணக்குகளை சரிவர பராமரிக்கவும் ஆடுகளுக்கு மருத்துவ உதவி அளிக்கவும் கால்நடை ஆய்வாளர் நிலை 1 ஒருவரை காரியதரிசியாகவும், அவருக்கு துணையாக ஒரு மந்தை காப்பாளரும் இலவசமாக 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். மேலும் 3 சங்கங்களுக்கு ஒரு மருத்துவர் மற்றும் சங்க வரவு செலவு கணக்குகளை மேற்பார்வையிட 10 சங்கங்களுக்கு ஒரு கூட்டுறவுச் சங்க முதுநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டனர்.




தருமபுரி மாவட்டச்
சிறப்பிதழாக
வெளிவருகிறது

தற்போது 5 வருடம் முடிந்து விட்டபடியால் முதல் நில ஆய்வாளர் பதவி நீக்கப்பட்டு சங்கங்கள் விரும்பினால் அவர்களின் சம்பளத்தில் பாதியை சங்கம் ஏற்றுக் கொள்வதாயிருந்தால் சங்கங்களுக்கு முதல் நிலை கால்நடை ஆய்வாளர் காரியதரிசியாக நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு 6 சங்கங்களுக்கு கால்நடை ஆய்வாளர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சங்கங்களிலுள்ள ஆடுகளுக்கு, குடற்புழுநீக்கம், வெக்கைநோய் தடுப்பு ஊசி போடுதல் போன்றவைகளுக்கு ரூ. 6,000க்கு மேற்படாமல் ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு ஆட்டிற்கு ரூ 3 வீதம் மொத்தமுள்ள ஆடுகளைக் கணக்கிட்டு மான்யம் வழங்கப்படுகிறது.

30-6-82ல் இச்சங்கங்களுக்கு அங்கத்தினர்களிடமிருந்து வரவேண்டிய தவணை கடந்த பாக்கி ரூ. 33.74 லட்சமாகும். இச்சங்க அங்கத்தினர்களிடமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை 57,110 ஆகும்

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு சங்க அங்கத்தினருக்கும் ஒரு கிடா மற்றும் 12 பெட்டை ரூ.2,000 மதிப்புக்கு கொடுக்கப்பட்டு அக்கடனை 3 தவணைகளில் தவணைக்கு ரூ. 500 வீதம் திருப்பிச் செலுத்தும்படியும் 4வது தவணையை மானியமாகக் கணக்கிட்டு கடனுக்கு முடிவு செய்ய உத்தரவிடப்பட்டது. சங்கம் அரசுக்கு செலுத்த வேண்டிய வட்டி 9 சதவீதம். அங்கத்தினர்கள் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி 10.5 சதவீதம்.

ஒவ்வொரு சங்கத்திற்கும் காரியதரிசியாக ஒரு முதல் நிலை கால்நடை ஆய்வாளர் மற்றும் அவருக்கு உதவியாக ஒருமந்தைக் காப்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இச்சங்கங்களின் கணக்குகளை பேற்பார்வையிட ஒரு கூட்டுறவு சங்க முதுநிலை ஆய்வாளர் மற்றும் இத்திட்டத்தைக் கண்காணிக்க 4 சங்கங்களுக்குமாக இரு கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1979-80-ல் இக்கடன் தொகை ரூ. 2000-லிருந்து ரூ. 3000 ஆக ஒரு யூனிட்டுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

**வறட்சிப்பகுதி நிவாரணத் திட்டம்**

இத்திட்டம், வறட்சிப் பகுதியில் வாழும் எளிய குடும்பத்தினர் மற்றும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் 96 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 89 ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலமாக தேசீய வங்கிகள் கடன் அளிக்கின்றன. சில வங்கிகள், இச்சங்கங்கள் மூலமாக அல்லது நேரிடையாகவே கூட்டுறவுச்சங்க அங்கத்தினர்களுக்கு கடன் அளிக்கின்றன. மற்ற திட்டங்களில் உள்ளது போல கடன் பெறும் உறுப்பினர்களுக்கு மான்யமும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் செயல்படும் 185 சங்கங்களில் 12,069 அங்கத்தினர்கள் உள்ளார்கள். அங்கத்தினர்களுக்கு ரூ. 2.14 கோடி கடன் வழங்கப்பட்டு ரூ. 1.35 கோடி வசூலிக்கப்பட்டு தற்போதுள்ள நிலுவை 0.79கோடியாகும். ரூ. 40.71 லட்சம் மான்யம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 9.24 இலட்சம் ஆகும்.

**கால்நடை மேம்பாட்டுச் சிறப்பும் கட்டம்**

இத்திட்டம் வடஆற்காடு, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வடஆற்காடு மாவட்டத்தில் 94 ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், சேலத்தில் 37ம், திருநெல்வேலியில் 129 சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. கடன்களெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்த பெறப்படுகின்றன. சில வங்கிகள் சங்கங்களின் மூலமாகவும் மற்றும் சில சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் உத்திரவாதத்தின் பேரில் சங்க அங்கத்தினர்களுக்கு நேரிடையாக கடன் கொடுக்கிறார்கள். இது தவிர மான்யமும் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1981-82ம் ஆண்டுக்கு 3000 யூனிட்டுகளுக்கு ரூ. 35.33 லட்சம் மான்யமாக அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சேராத 226 சங்கங்கள் பல மாவட்டங்களில் இயங்குகின்றன. அவைகளின் அங்கத்தினர்களுக்குத் தேசிய வங்கிகள் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் நேரிடையாகவும் கடன் வழங்குகின்றன. 1981-82-ல் இச்சங்களில் 2652 அங்கத்தினர்கள் இருந்தார்கள். அவர்கள் செலுத்திய பங்குத் தொகை ரூ. 1,50,308 அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.49.47 லட்சமாகும். ரூ. 7.41 லட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பேரில் நிலுவையிலுள்ள கடன் ரூ. 15.53 லட்சமாகும். அவர்களிடமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை 21,906 ஆகும்.

கூட்டுறவு மத்திய வங்கிகள் இச்சங்கங்களுக்குக் கடன் அளிக்க முன் வந்தால் இன்னும் நல்ல முறையில் சங்கங்களை நடத்திச் செல்ல இயலும். ஆனால் ஆடு வளர்ப்பு சங்கங்களுக்கு கொடுக்கும் கடனுக்கு ஈடு செய்யும் வாய்ப்பு (Re imbursement Facility) இல்லை. ரிசர்வ் வங்கி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகத்தான் ஆடு வாங்க கடன் கொடுக்கிறது. மேலும் ஆடுவளர்ப்பு சங்கங்கள் மற்ற தொண்டுகளை ( Service ) செய்யவேண்டுமேயன்றி கடன் வழங்கக்கூடாது என்ற கொள்கையை கடைப்பிடிக்க கொண்டிருந்தது. தற்போது அக்கொள்கையை மாற்றி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச்சங்கங்கள்மூலமாகவும் அங்கத்தினர்களுக்கு கடன் வழங்கலாம் என்ற கொள்கையைரிசர்வ் வங்கி ஒப்புக் கொண்டிருப்பதால் (கடிதம் எண் 90991/ஐ. எப். ஐ 81-4, விவசாயத்துறை நாள் 15-3-82) இனி மத்தியகூட்டுறவு வங்கிகள் தாராளமாக இச்சங்கங்களுக்கு கடன் வழங்கும். இதன் மூலம் ஆடுவளர்ப்பு சங்கங்களும் அதன் அங்கத்தினர்களும் மேலும் நல்லமுன்னேற்றம் அடைய நல்ல வாய்ப்புள்ளது.

**பொள்ளாச்சி உட்பட ஐந்து இடங்களில் காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டித் தருதல்**

காவல் துறையினருக்குக்குடியிருப்புகள் கட்டித்தரும் நோக்கத்தோடு, பொள்ளாச்சி, தாழையூத்து, ஆவடி, சென்னை நகரில் இராயபுரம் மற்றும் பழனி ஆகிய இடங்களில்மொத்தம் ரூ 238.66 இலட்சம் செலவில் 446 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. இந்த ஐந்து இடங்களில் பொள்ளாச்சியில் காவலர்கள் குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் மற்ற நான்கு இடங்களில் பொதுப் பணித்துறையும் கட்டித்தரும்.

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில்

# கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு





தமிழ்நாட்டில் உள்ள 65 இலட்சம் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் ஆண்டு முழுவதும் மதிய வேளையில் சத்துணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய பன்னிரண்டு மாவட்டங்கள் கூட்டுறவத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று இம் மாவட்டங்களில் இருக்கும் அரசு நிர்ணயித்துள்ள பல்வேறு உணவு மையங்களுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்கும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

இத்திட்டம் முதல் கட்டமாக கிராம அளவில் 1—7—82 முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1982-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குத் தேவையான ஒருமாத உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் 24—6—82 அன்று தயாராக வைக்கப்பட்டிருந்தன. 24—6—82லிருந்து 30—6—82க்குள்ளான குறைந்த காலத்தில் 40 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் சுமார் 15 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள உணவுப் பொருட்களை வாகனங்களில் எடுத்துச்சென்று ஒதுக்கப்பட்ட பன்னிரண்டு மாவட்டங்களிலுள்ள சுமார் 40 ஆயிரம் உணவு மையங்களுக்கும் உரிய காலத்தில் ஒப்படைத்து, திட்டம் 1—7—82 அன்று தொடங்கப்பட்டு செம்மையாக நடைபெற உறுதுணை புரிந்தன.

1982-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் இப்பணியில் சேர்ந்துகொண்ட மேலும் 11 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் உட்பட, 51 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் தொடர்ந்து உணவுப்பொருட்களை ஒவ்வொரு திங்களிலும் உணவு மையங்களுக்குக் கொண்டு சென்று ஒப்படைத்து, இத்திட்டம் சிறப்பாக நடைபெறப் பணியாற்றி வருகின்றன.


இச் சத்துணவத் திட்டம் 15—9—82 முதல் நகரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டதையொட்டி, கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 6 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள உணவுப் பொருட்களை இப்பகுதிகளில் உள்ள சுமார் 5 ஆயிரம் உணவு மையங்களுக்கும் கொண்டு சென்று ஒப்படைத்து இப்பகுதிகளிலும் இத்திட்டம் செவ்வனே நடைபெற உறுதுணையாக இருந்து வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றும் பகுதிகளில் கிராமப்புறங்களில் 40 இலட்சம் குழந்தைகளும், நகர்ப்புறங்களில் 8 இலட்சம் குழந்தைகளும் ஆக சுமார் 48 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்று வருகின்றனர்.


# விரும்பிய இடத்திற்கு விரைந்து செல்ல வேண்டாமா? பயணம் வசதியாக அமைய வேண்டாமா?

பேருந்துகளில் அளவுக்கு அதிகமாகக் கூட்டம் இருந்தால் அந்தப் பேருந்திலேயே பயணம் செய்ய முயலாதீர்கள். பேருந்துகளில் கூட்டம் அதிகமாகவும், நெரிசலாகவும் இருக்கும் போது —

- அலுவலகப் பயணிகள் முன்னும் பின்னும் தள்ளப்பட்டு அவதிக்குள்ளாகிறார்கள்
- நடத்துநர் எளிதாக நகர்ந்து பயணச்சீட்டுகளை வழங்க முடியாமல் போகிறது. கட்டண நிலைகளுக்கு முன்னதாகப் பேருந்துகளை நிறுத்தி வைத்துப் பயணச்சீட்டுகளை அளிக்க நேர்கிறது. இதனால் கால தாமதம் ஏற்படுகின்றது.
- தேவைக்கதிகமான பளுவினால் பேருந்து உரிய காலத்திற்கு முன்னதாகவே பழுதாகிவிடுகிறது.
- பேருந்துகள் வழியிலேயே பழுதாகி நின்று போகவும், விபத்துக்கள் ஏற்படவும் கூட காரணமாகிறது.



ARIES/DIPR/1[illegible]2·70



பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்)
சென்னை-600 002



# கெட்டிக்கார மனிதர்களாவோம்!

—மு. முத்துக்காளத்தி



ஒ' மனே அடிக்கும் லாபம்
ஊரையே சுரண்டும் கொள்ளை!
மறைவினில் பதுக்கி வைத்து
இரட்டிப்பு விலையைக் கூட்டிப்
பாதிப்பு செய்து பசியினில் மக்கள்
பரிதவிக்கச் செய்யும் பாவம்
ஒழிந்தது; நமக்குள் பேதம்
அழிந்தது; அமைந்தநல் கூட்டுறவால்!

வானத்தில் தோன்றும் வில்லின்—ஏழு
வண்ணத்தில் ஆனகொடி—நம்
எண்ணத்தில் ஊறிட வாழ்வை
வளத்தினில் வைக்கும் கண்டீர்!
ஒருவர் பலர்க்காய் வாழ்ந்து
பலருமே ஒருவர்க் குழைத்து
ஒருவர்நலனில் ஊர்நலம் பேணி
ஊரின்நலனில் அக்கறை வைப்போம்!

நாநயம் பேணி எங்கும்
நாணயம் காத்து நாளும்
தூய்மை மிகு நிர்வாகம்
துலங்கிட வைத்து நன்மை
அனைவர்க்கும் கிட்டுதற்கே
அயராது உழைப்பது கூட்டுறவு!
பொருளின் தரமும் விலையும்
அருளாய் அமையும் அமைப்பு!


மலையளவு நன்மை மக்களுக்குண்டு!
எள்ளளவு தீமை எவர்க்குமில்லை!
பிறந்ததுமுதல் இறக்கும் வரை
சிறந்தது வாழ்வில் கூட்டுறவு முறை!
அன்பை வளர்க்கும்; பண்பைக் கொடுக்கும்;
அன்னை பாலர் பெரியோர் மாணவர்
அனறாடம் உழைப்போர் வணிகர் அதிபர்
அனைவர்க்கும் உரியதாகும்; ஆற்றலை வளர்ப்பதாகும்!

உழைப்பினை உறிஞ்சும் அற்பர்!
விலையினை உயர்த்தும் தீயோர்!
எளியோரைச் சுரண்டும் வலியோர்!
செயற்கையாய்ப் பஞ்சம் செய்து
சீக்கிரமே செல்வம் குவிப்போர்!
தேசத்தை விழுங்கும் வீணர்!
நாசத்தைத் தடுத்து நல்லோர் வாழ்வில்
மோசத்தைப் போக்கிடும் கூட்டுறவு!

பட்டபாட்டுக்குப் பலன்
சட்டெனக் கிடைத்துவிடும்!
பட்டமரம் துளிர்ப்பதன்றிக்
கெட்டுவிட மாட்டார் யாரும்!
உழைப்பவர் உயர இங்கே
பிழைப்பினைக் காட்டும்!
கூடித் தொழில் செய்தால்
கோடி நன்மை கூட்டும்!

எளியவர் உள்ளந்தோறும்
நலிந்தவர் இல்லந்தோறும்
கிளர்ந்தெழும் நம்பிக்கை
வளர்ந்திடும் கூட்டுறவால்!
விளைச்சலைப் பெருக்கிப்
பொருள்களைக் குவித்து
அலைச்சலை ஒழித்து
அற்புதம் செய்வோம்!

பட்டிதொட்டி பரந்த ஊர்களில்
உட்கார்ந் தொருவன் ஆணையிட
ஒட்டியுலர்ந்தவர் வேலை செய்த
மட்டித்தனம் இனிமேல் இல்லை!
ஒட்டி உறவை வளர்ப்போமே!
வெட்டிப் பேச்சை ஒழிப்போமே!
கெட்டிக் கார மனிதர்களாய்
செட்டாய் வாழ்ந்து சிறப்போமே!



# ஆவணம் காப்போம் அறிவை வளர்ப்போம்!

மு. வெங்கடாசலம், இ.ஆ.ப.
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர்.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு''

என்றார் வான்புகழ் வள்ளுவர். கற்கக் கற்க வளரும் அறிவினை வழங்குவன வரலாற்று நூல்கள். பழங்கால ஏடுகளும், செப்பேடுகளும், கல்வெட்டுகளும், ஓலைச்சுவடிகளும், அவற்றில் நம் முன்னோர் எழுதி வைத்துள்ள தகவல்களும் வரலாற்று நூல்களை வரைய ஆதாரமாக இருப்பவை. அத்தகவல்களில் அக்காலத்தில் நிகழ்ந்த அரசியல், பொருளாதார, கலாச்சார, சமுதாய நலத் தொடர்பான நிகழ்ச்சிகள் மலிந்துள்ளன. தேனை உண்ண பூக்களை நாடும் வண்டுகள் போல, ஆராய்ச்சி அறிஞர்கள் அத்தகைய தொல்லேடுகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று, ஏடுகளைக் கண்டு, படித்து ஆராய்ந்து, அவற்றில் பொதிந்துள்ள உண்மைகளைக் கருப்பொருள்களாகக் கொண்டு வரலாற்று நூல்களைப் படைக்கின்றனர். ஆட்சியாளர்கள் பழஞ்சுவடிகளில் பொதிந்துள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, சிறந்த பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சியாளர்களுக்கும், ஆட்சியாளர்க்கும்பயன்படும் வரலாறு மற்றும் நிருவாகச் சிறப்புமிக்க ஆவணங்களை உரிய வகையில் பாதுகாக்கும் உயரிய நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது தமிழ்நாடு ஆவணக்காப்பகம்.

**பராமரிப்பில் உள்ள ஆவணங்கள்:**

தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த ஆவணக்காப்பகங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில், சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகப் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆவணங்களும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருவாய்த்துறை வாரியத்தின் ஆவணங்களும், வனத்துறை, வேளாண்மைத்துறைத் தலைமையக ஆவணங்களும், சிப்பாய்க் கலகக் காலத்திற்கு முற்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலக மற்றும் மாவட்ட, உயர்நீதிமன்றங்களின் ஆவணங்களும், நில அளவை ஆவணங்களும், பழைய இராணுவ ஆவணங்களும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ளன. 1670-ஆம் ஆண்டு முதல் ஆங்கில மொழியில் உள்ள கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆவணங்களும் உள்ளன. இவற்றைத் தவிர பதினேழு, பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த டச்சு. டேனிஷ், பெர்ஷியன், பிரஞ்சு, போர்ச்சுகீசு, மோடி மற்றும் மராத்தி மொழிகளில் உள்ள ஆவணங்களும் உள்ளன. மேலும் சுமார் இரண்டரை இலட்சம் நூல்களைக் கொண்ட ஒரு நூலகமும் ஆவணக்காப்பகத்தில் இயங்குகிறது. இந்நூலகத்தில் வேறெந்த நூலகத்திலும் கிடைப்பதற்கரிய அச்சிட்ட பழைய நூல்களும், அரசு வெளியீடுகளும், அரசிதழ்களும் உள்ளன.

**ஆவணங்களின் வரலாற்று, நிருவாகச் சிறப்பு:**

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், 1955-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு ஆவணக்காப்பகத்திற்கு வருகை தந்தபோது, ஆவணக்காப்பகத்தின் பணிகளைப் பாராட்டியுள்ளார். ''My visit to the Madras Record office was most instructive and Interesting'' என்று குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள ஏடுகள், ''தமிழ்நாடு எல்லாக் காலங்களிலும் புகழ் பெற்றிருந்தது'' என்ற உண்மையைப் பிரதிபலிக்கின்றன. கிளைவ், டூப்ளே போன்றாரின் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை திறமை வாய்ந்த பல ஆட்சியாளர்களின் தொடர்பு தமிழ்நாட்டு அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை இங்குள்ள ஏடுகள் எடுத்துக்காட்டுகின்றன. கிளைவ், மன்றோ, பெண்டிங்க், ஹாரிஸ், டிராவிலியன் போன்றவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற ஆவணங்கள், தமிழ்நாடு வரலாற்றையும், இந்திய வரலாற்றையும் அறியப் பெரிதும் துணை புரிகின்றன. ரிப்பன் பிரபுவின் சீர்த்திருத்தங்கள், அரசியல் கட்சிகளின் தோற்றம், விடுதலை இயக்க வரலாறு, உள்ளாட்சி இயக்கத்தின் மூலம் அன்னிபெஸண்ட் அம்மையாரின் பணிகள், முதலியவற்றை ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங்கள் வாயிலாக நன்கு அறியலாம்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த 1670 ஆம் ஆண்டு முதல் துவங்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிலவிய ஆட்சிமுறைகள், சென்னை அரசாங்கத்திற்கும், இங்கிலாந்தில் இருந்த இயக்குநர் வாரியத்திற்கும் (Board of Directors) இடையே நடந்த கடிதப் போக்குவரத்து, உள்நாட்டு மன்னர்களுடன் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள், பிரஞ்சுக்காரர்களுடனும், முகம்மது அலி போன்ற நவாப்புகளுடனும் அவர்களுக்கு இருந்த தொடர்பு, திப்பு சுல்தான், கட்டபொம்மன், மருதுபாண்டியர் போன்ற உள்நாட்டு வீரர்களுடன் ஆங்கிலேயர் போரிட்ட வரலாறு, பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து உரிமை முழக்கம் எழுப்பிய வரலாறு முதலிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை, பழைய தலைமைச் செயலக ஆவணங்கள் வாயிலாக அறியலாம். மேலும் ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட நிலத்தீர்வை, விவசாயம் தொடர்பான சீர்திருத்தங்கள், சட்டதிட்டங்கள், பல்வகைத் தொழில் முன்னேற்றம், பொருளாதாரத்திட்டங்கள், பர்மா, இலங்கை சிங்கப்பூர், மலேயா, இந்தோனேஷியா, தாய்லாந்து முதலிய ஆசிய நாடுகளுடன் ஆங்கிலேயர் வளர்த்துக்கொண்ட வாணிபத் தொடர்பு முதலியவற்றையும் இந்த ஆவணங்களின் மூலமாக அறியலாம். சேலம் இரும்பு பற்றி நாம் இப்போது பேசுகிறோம். பத்திரிகைகளில் செய்தி படிக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில் இரும்பு உருக்குத் தொழில் நடைபெற்றது என்பதைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புருஸ்பூட்டி, சர் தாமஸ் ஹாலண்ட் ஆகிய இரு ஆங்கிலேய அதிகாரிகளின் அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இங்குள்ள தலைமைச் செயலகச் சார்பற்ற பிற ஆவணங்களும் (Non-Secretariat Records), வரலாறு, நிருவாகத் தொடர்பான பல உண்மைகளை அறிய சிறந்த கருப்பொருள்களாக ஆதாரங்களாகத் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, டச்சு ஆவணங்கள் மலையாளக் கடற்கரைப் பகுதியான கொச்சியில் டச்சுக்காரர்களின் குடியேற்றம், கேரளத்தில் அப்போது ஆட்சிபுரிந்த உள்நாட்டு மன்னர்களுடன் டச்சுக்காரர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம், படேவியா- இலங்கை ஆட்சியாளர்களுடன் கடிதப் போக்குவரத்து முதலிய தகவல்களைத் தெரிவிக்கின்றன. பழைய 'மோடி' மொழியில் எழுதப்பட்ட தஞ்சாவூர் அரசு ஆவணங்கள் தஞ்சாவூர் அரண்மனை, கோயில்களைப் பற்றிய நிதி நிலை அறிக்கைகள், தஞ்சை அரசரின் சொத்து, கடன் பற்றிய விவரங்கள், தஞ்சையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடந்த நிருவாகத் தொடர்பான கடிதப் போக்குவரத்துக்கள் முதலிய தகவல்களைக் கொண்டவை. பாரசீக ஆவணங்கள் (Persian Records) 18-ஆம் நூற்றாண்டில் கர்நாடக நவாப் ஆட்சிக்காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பலநிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. 26.4.1773 முதல் 29.2.1775 வரையில் வாலாஜா நவாப் முகமது அலிகான் எழுதிய நாட்குறிப்புகளும் இந்த பாரசீக ஆவணங்களில் உள்ளன. பாண்டிச்சேரியில் பிரஞ்சு அதிபர் டூப்ளேயின் திவானாகப் பணியாற்றிப் புகழ்பெற்ற ஆனந்தரங்கம் பிள்ளை தமிழில் எழுதியுள்ள நாட்குறிப்புகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. இந்திய மக்களிடம், குறிப்பாக, தமிழ் மக்களிடம் பிரெஞ்சுக்காரர்களின் தொடர்பு, பழக்க வழக்கங்கள், டூப்ளேயின் அந்தரங்க வாழ்க்கை, அன்றாட நிருவாகம் முதலியவற்றை அறிய இந்த நாட்குறிப்புகள் தக்க ஆதாரங்களாக விளங்குகின்றன. இந் நாட்குறிப்புகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று, பன்னிரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

**ஆவணங்களின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டு:**

ஆவணக் காப்பகத்தில் உள்ள வரலாற்று ஆவணங்கள் உலகப் புகழ் பெற்றவை என்று



கூறினால் மிகையாகாது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, இங்கு ஓர் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். காலஞ்சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டு முதல்வராக இருந்த போது, அமெரிக்காவில் 'யேல் பல்கலைக் கழக' ( Yale University ) 250-வது ஆண்டு விழாவையொட்டி ஒரு கண்காட்சி நடந்தது. அக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்க, சென்னையிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க 1692-ஆம் ஆண்டைச் சார்ந்த ஆவணத் தொகுதி ஒன்று, அப்பல்கலைக் கழக வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆணைப்படி அனுப்பப்பட்டது. 17-ஆம் நூற்றாண்டில் சென்னை மாநில ஆளுநராக இருந்த 'எலுகு யேல்' (Elihu Yale) என்பவர் தம் கைப்பட எழுதிய குறிப்புகள் அடங்கிய தொகுதிதான் அது. அதைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனராம்.

**பொதுமக்களுக்கு ஆவணக்காப்பகத்தின் பணி:**


பழைய அரசிதழ்கள் இப்போது விற்பனைக்குக் கிடைப்பதில்லை. அத்தகைய அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை ஆதாரப்பூர்வமாகப் பெற விரும்பும் மக்கள், தேவையான தகவல்களுடன் கூடிய அரசிதழ்களிலிருந்து சான்றிட்ட பகுதி நகல் கேட்டு, இக்காப்பகத்திற்குக் கோரிக்கை மனுக்கள் அனுப்புகின்றனர். குறிப்பிட்ட தேடு, தட்டச்சுக் கட்டணத்தொகை அவர்களிடமிருந்து பெறப்பட்டு, சான்றிட்ட பகுதி நகல்கள் அளிக்கப்படுகின்றன.

மேலும் அக்காலத்தில் நம மாநிலத்தில் வாழ்ந்த ஐரோப்பியரின் குடும்பம், பிறந்த தேதி, இடம், திருமணம், தொழில் பற்றிய விவரங்கள் வேண்டுவோருக்கு இக்காப்பகம் உதவுகிறது. தட்டச்சு மற்றும் தேடு கட்டணத் தொகை பெறப்பட்டபிறகு, சம்பந்தப்பட்ட பழைய ஆவணங்கள் ஆராயப்பெற்று, தேவையான தகவல்கள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

நம் நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், தக்க முன் அனுமதியுடன் ஆவணங்களைப் பார்வையிட வரும் ஆராய்ச்சியாளர்கள் ஏராளம். ஆண்டுதோறும் 300-க்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் இங்கு வந்து, அவர்களின் ஆராய்ச்சிக்குரிய ஆவணங்களைப் பார்வையிட்டு, தேவையான தகவல்களைத் திரட்டுகின்றனர். அவர்களுக்காக, ஆவணக்காப்பக ஆராய்ச்சிக் கூடத்தில் தேவையான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த கட்டணத் தொகையின் பேரில், ஆவணங்களிலிருந்து நிழற்பட நகல்கள் (Xerox Photostat Copies) பெறும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆவணப் பராமரிப்புக்கு மேற்கொண்ட திட்டங்கள்:**

வரலாற்று நூல்களை எழுதுவதற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்குப் புதிய புதிய திட்டங்களைத் தீட்டுவதற்கும் சிறந்த ஆதாரங்களாக விளங்கும் ஆவணங்களைச் சீரிய முறையில் தற்கால அறிவியல் முறைப்படி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அரசு, ஆவணக்காப்பக வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.



**இரசாயனப புகையூட்டல்:**

கரையான், காளான், வெண்ணிறப்பூச்சி, முதலிய பூச்சி, புழு இனங்களால் பாதிக்கப்பட்ட ஆவணங்களைப் பாதுகாக்க இரசாயனப் புகையூட்டும் முறை ( Fumigation Process ) கையாளப்படுகிறது. குறைந்த எண்ணிக்கையுள்ள ஆவணங்களை வைத்து இரசாயனப் புகையூட்ட ஒரு மரப்பெட்டியும் ஒரே சமயத்தில் அதிக எண்ணிக்கையுள்ள ஆவணங்களை வைத்து இரசாயனப் புகையூட்ட இரும்பறைப் பொறியும் ( Vacuuam Fumigation Chamber) உள்ளன. முதல்வகைப் பெட்டி காற்று புகமுடியாதது. அதனுள் துளைகளிடப்பட்ட தட்டுக்கள் இருக்கும். அத்தட்டுக்களின் கீழே ஒரு கோப்பையில் 'பாராடிக்ளோர் பென்ஜின்' ( Para dichloro benzene ) அல்லது 'தைமால்' ( Thymod ) எனப்படும் இரசாயனப் பொருள் படிகங்கள் ( Crystals ) வைக்கப்பட்டிருக்கும், இப்படிகங்களை மின்சார விளக்கின் ஒளி மூலம் சூடாக்கினால் அப்படிகங்கள் ஆவியாகி, கண்களுக்குப் புலப்படாத ஒருவகைப் புகை வெளிவரும். அப்புகை துளைகளின் வழியாகச் சென்று தட்டுக்களின் மீது வைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்ந்துள்ள எல்லாப் பூச்சிகளையும் கொன்றுவிடும். இவ்வாறு இப்பெட்டியில் வைக்கப்படும் ஆவணங்கள் 7 முதல் 8 நாட்கள் வரை இப்பெட்டிகளிலேயே இருக்க வேண்டும். இரண்டாவது வகையான பெரிய இரும்பறைப் பொறி, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதில் 'எட்டாக்ஸைட் எரிவாயு' (Exoxide gas ) என்னும் இரசாயன எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான ஆவணங்களை, பூச்சிகளின் தொல்லைகளிலிருந்து குறுகிய நேரத்தில் பாதுகாக்க, இப்பொறி பயன்படுகிறது.

**ஒட்டிச் செப்பனிடும் பொறி (Lamination machine)**

பழுதடைந்த நிலையில் உள்ள ஆவணங்களை ஒட்டிச் செப்பனிடும் முறையின் (Lamination process) மூலம் செப்பனிட்டுப்

பழுது பார்க்க, ஒரு புதுமையான ஓட்டிச் செப்பனிடும் கருவி ( Lamination Machine) அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பொறியின் மூலம் பழுதடைந்த ஆவணத்தாள்களைக் குறுகிய நேரத்தில் செப்பனிடலாம். 1. மெல்லிய தாள்கள் ( Tissue paper ) 2. 'அஸிடோன்' (Acetone) என்னும் ஒட்டும் திரவம், 3. அஸிடேட் பாயில் ( Acetate foil ) ஆகிய மூன்று பொருள்களைக் கொண்டு, இப்பொறியின் மூலம் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன.

பழைய ஆவணங்கள் செப்பனிடப்படுவதற்கு முன்னர், வேதியல் முறைப்படி தூய்மைப்படுத்தப்படுகின்றன. இம்முறைக்கு 'அமிலத்தன்மை போக்கும் முறை' (de-acidification process ) என்று பெயர். இம் முறையால் ஆவணங்களில் படிந்துள்ள கறைகள் - அழுக்குகள் அகற்றப்பட்டு தாள்கள் வெண்மையாக்கப்படுகின்றன. ஈரம்( wet ), வறட்சி (dry) இவ்விரு முறைகளிலும் இரசாயனப் பொருள்களைக கொண்டு தாள்களில் உள்ள அமிலத்தன்மை அகற்றப்பட்ட பின்னர், தாள்கள் செப்பனிடப்படுகின்றன.

நிழற்பட நகல் பொறி ( Xerox photo copying Machine )யும், மின் அணு படிப் பெருக்கிப் பொறியும் ( Electronic stencil cutter ) வாங்கப் பெற்று, ஆவணக் காப்பகத்தில் நிறுவப் பெற்று, பயன்பாட்டில் உள்ளன.

**நுண்புகைப்படக் கருவி (Micro Film equipment)**

ஆவணங்களை நுண்ணிய முறையில் புகைப்படம் எடுத்துப் புகைப்படச் சுருள்களாக மாற்றிப் பாதுகாப்பதால், ஆராய்ச்சியாளர்க்கும், ஆட்சியாளர்க்கும் மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், இட நெருக்கடியையும் தீர்க்க முடியும் என்பதைக் கருத்திற் கொண்டு ரூ. 6,54,584 விலை மதிப்புள்ள ஒரு 'மைக்ரோ பிலிம்' கருவியை வாங்க, அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன்படி, அண்மையில் அக்கருவி வாங்கப் பெற்று, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறையில் வைக்கப்பட்டு, பயன்படுத்தப்படுகிறது.

பழைய மன்னர்கள், ஜமன்தார்கள், மதத் தலைவர்கள், தனியார் துறை அலுவலர்கள், தனிப்பட்ட நபர்கள் முதலியோர் வசம் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும், ஆவணங்களையும் பெற்று, அவற்றைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பாதுகாக்க வரலாற்று ஆவண மதிப்பீட்டு மாநிலக்குழு' (Regional Committee for Survey of Historical Records) என்னும் குழுவைஅரசு அமைத்துள்ளது. இம்மாநிலக்குழு ஆவணக் காப்பக ஆணையரின் மேற்பார்வையிலும், உறுப்பினர்களாக உள்ள பல அறிஞர்கள் மற்றும் அலுவலர்களின் ஒத்துழைப்பாலும், ஆலோசனைகளாலும் இயங்கி வருகிறது. ஆகவே, பொதுமக்கள் தங்களிடம் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஆவணங்களைத் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பி வைக்கலாம். இது குறித்து நமது முதல்வரும் அண்மையில் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்குள்ள பழைய ஆவணங்களை ஆராய்ந்து, தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து, சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதும் ஆற்றலும் தகுதியும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் ஆராய்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கி, ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கும் முக்கிய நோக்கத்துடன் 17-12-73-ல் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தை அரசு நிறுவியது. இம்மன்றம் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் ஆராய்ச்சிக்கு உதவித் தொகை வழங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் முழு விவரங்களையும், சமூக, அரசியல், பொருளாதாரத் தகவல்களையும் கொண்ட மாவட்ட விவரச்சுவடிகளும் தொகுக்கப் பெற்று வெளியிடப்படுகின்றன. இதற்கென ஒரு பதிப்பாசிரியரும், அவருக்குத் துணையாக உதவி ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

**வட்டார ஆவணக்காப்பகங்கள்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலகங்கள், மற்றும் அரசுப் பொது நிறுவனங்களில் மலிந்துள்ள கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்களை ஒன்று திரட்டி, முறைப்படி பாதுகாக்கும் மூக்கிய நோக்கத்துடன், முதற்படியாக, மதுரை, சிதம்பரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் வட்டார ஆவணக்காப்பகங்களை நிறுவ, அரசு 1109 எண்ணும் 11-6-81 நாளும் கொண்ட கல்வித்துறை நிலை அரசாணையில் ஒப்பளிப்பு அளித்தது. இதன்படி, சென்ற மார்ச் திங்கள் முதல் அம்மூன்று இடங்களிலும் வட்டாரக் கிளை ஆவணக்காப்பகங்கள் இயங்கி வருகின்றன.

**ஆவணக்காப்புக் கலைப் பயிற்சி:**

வரலாறு படைக்க, சிறந்த ஆதாரங்களாகத் திகழும் தொல்லேடுகளை நல்ல முறையில் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக ஆவணக் காப்புக் கலையில் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் திகழ்கிறது. நம் மாநிலத்தில் பிற அலுவலகங்களில் உள்ள ஆவணக்காப்பறைகளில் பணியாற்றும் அலுவலர்கள் இப்பயிற்சி பெற, ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்.

ஆவணக் காப்புத் துறையின் வளர்ச்சிக்கு மேலும் பல திட்டங்களைச் செயற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஆவணப் பராமரிப்பின் அவசியத்தை இன்று அனைவரும் உணருகிறார்கள். ஏனெனில், ஆணைப் பராமரிப்பு இல்லையேல் அறிவு வளர்ச்சி இல்லை. ஆகவே ஆவணம் காப்போம்; அறிவை வளர்ப்போம்.!





# ஆனைமலை அற்புதங்கள்!

பத்திரிகை நிருபர்களை ஏற்றி வந்த சொகுசுப் பேருந்து 'சடக்' கென்று நிற்கிறது.

எல்லாரும் ஜன்னல் வழியே வெளியே பார்க்கிறோம்.

''இங்கே ஆயுதங்களையும், துப்பாக்கிகளையும் ஒப்படைத்துச் செல்லவும்'' என்ற வாசகம் கண்ணில் படுகிறது.

ஆனைமலை நுழைவாயிலுக்கு வந்துவிட்டோம் என்பதை அந்த அறிவிப்புப் பலகை சொல்லாமல் சொல்லியது.

முன்னே 'ஜீப்' ஒன்று எங்களுக்கு வழிகாட்ட, எங்களது அழகிய பேருந்து அதைப் பின் தொடர்ந்து செல்கிறது.

**சொர்க்க பூமி!**

போகிறோம், போகிறோம், போய்க்கொண்டே இருக்கிறோம்.

அழகிய மலைத் தொடர்கள்- கண்ணுக்கினிய காட்சிகள் - எங்கே பார்த்தாலும் பசுமை! பசுமை! பசுமை!

பேருந்து வளைந்து வளைந்து பாம்புபோல் செல்கிறது-மேலே மேலே!

பன்னிற மலர்கள், பார்க்கப் பரவசமூட்டும் செடி கொடிகள், நெட்டை குட்டை மரங்கள், இது வரை நாம் பார்த்திராத தாவர வகைகள், பயங்கரப் புதர்கள்...

மேலே இருந்து கீழே பார்க்கிறோம். 'பாதாள உலகம்' என்று ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்களே அது இப்படித்தான் இருக்குமோ என்ற உணர்வு ஏற்படுகிறது.

அப்பாடா! ஒரு வழியாக 'டாப்புக்கு - 'டாப்ஸ்லிப்'புக்கு வந்து விட்டோம்.

அதாவது பூமியிலிருந்து 8,000 அடி உயரத்துக்கு! தனி உலகத்துக்கு! சொர்க்க பூமிக்கு!

**கவின்மிகு காடு**

வனவிலங்கு வார விழாவினையொட்டி, அக்டோபர் திங்கள் 21 முதல் 23 முடிய கோவை மாவட்டத்தில், 'பத்திரிகை நிருபர்கள் குழுவினர்' சுற்றுப் பயணம் செய்தனர். இந்த இனிய

பி. வி. கிரி

பயணத்துக்குச் செய்தி - மக்கள் தொடர்புத்துறையும், வனத்துறையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகச் சொகுசு பேருந்தில், இரு புகைப்படக் கலைஞர்கள் உட்பட 20 நிருபர்கள் பயணம் செய்தோம்.

ஆனைமலை வனவிலங்கு உய்விடம், கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்திலும், பொள்ளாச்சி இரயில் நிலையத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

இலையுதிர் காடுகளையும், பசுமை மாறாக் காடுகள் சிலவற்றையும் கொண்டு 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த உய்விடம், பரந்து விரிந்து காணப்படுகிறது. 350 மீட்டர் முதல் 2400 மீட்டர் வரை பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கொண்டது இக்கவின்மிகு காடு.

**தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய வன விலங்கு உய்விடம்!**

இப்பகுதியின் மழை அளவு- 500 மில்லி மீட்டர் முதல் 5000 மில்லி மீட்டர் வரை. கிழக்குச் சரிவுகளில் குறைவான மழை, மேற்குச் சரிவுகளில் பலத்த மழை உள்ளது.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய வனவிலங்கு உய்விடமான ஆனைமலையில் யானை, காட்டெருது, புலி, சிறுத்தைப் புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டு நாய், நீலகிரி குரங்கு, சிங்கவால் குரங்கு, கடமான் வகைகள், நான்கு கொம்புகளுடைய மறிமான், புள்ளிமான் முதலியன உள்ளன.

வளைவுப் பாதைகளில் ஜீப்பும், வேனும் சென்று கொண்டிருந்தன. இருபுறங்களும் அடர்ந்த மரஞ்செடி கொடி மரங்களையும் பார்த்துக் கொண்டே சென்றோம்.

**பரம்பிக்குளத்தில்....**

போகிற போக்கில் பல செய்திகள் எங்களுக்குக் கிடைத்தன.

ஆனைமலைக்காட்டில் ஏராளமான தேக்கு மரங்கள் உள்ளன. ஒரு ஏக்கருக்கு 1100 தேக்குச் செடிகளை நட்டால், 80 ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றில் 120 தேக்கு மரங்கள்தான் தேறும். ஒரு ஏக்கருக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும்.

ஒரு நல்ல தேக்கு மரத்தின் விலை ரூபாய் 20,000. இங்கு வெண் தேக்கு, ரோஸ் வுட், மருது, தடசு போன்ற மரவகைகள் உள்ளன. அண்மையில், வேலூரிலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் கொடிமரத்துக்கான தேக்கு மரம் இங்கிருந்து தான் கொண்டு செல்லப்பட்டது.

''அதோ! பரம்பிக்குளம் ஆளியாறு அணை...'' என்று ஒருவர் சுட்டிக் காட்ட எல்லாரும் அங்கே பார்த்தோம்.

பிரம்மாண்டமான வகையில் கட்டப்பட்டுள்ள அந்த அழகிய அணை, அணையோடு இணைந்த பூங்கா-நீர்ப்பரப்பு எல்லாம் மனத்தைக் கவர்கின்றன. இந்த அணை கேரள மாநிலத்தில் உள்ளது. அதாவது 'டாப்ஸ்லிப்'பிலிருந்து 22 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த அணையும், அதையொட்டிய சாலைகளும் நம்முடையது; அதாவது தமிழ்நாட்டினுடையது; நிலம் மட்டும் கேரளாவுக்குச் சொந்தம் இதிலுள்ள தண்ணீரும் நமக்குத் தான் பயன்படுகிறது.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தைப் பார்த்துவிட்டுத் திரும்புகிறோம். பொழுது மெல்ல மெல்ல மறைகிறது. தமிழ்நாட்டு எல்லைக்குள் வந்துவிட்டோம். அதாவது ஆனைமலைக்கு!

எங்களுக்கு முன்னே சென்ற 'ஜீப்' ஓரிடத்தில் டக்கென்று நின்றது. பிறகு எல்லாரும் கீழே இறங்கி மேலே பார்த்தோம். வானளாவிய மரத்தில் கருங்குரங்குகள் 'சர்க்கஸ்' ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தன!

**காட்டுக்குள்ளே**

அதோ! தென்படுகிறதே பாழடைந்த வீடு, அது யாருடையது?

ஓடுகளால் வேயப்பட்ட அந்த வீட்டைப் பார்க்கிறோம். சில பகுதிகள் இடிந்து, செடி கொடிகள் அவற்றில் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. மேட்டுப் பகுதியில் உள்ள அந்த வீட்டைப் பார்த்துவிட்டு, சற்றுத் தாழ்வான பகுதிக்கு நடந்து செல்கிறோம்.

என்ன? எங்களால் நம்பவே முடியவில்லை...அங்கே இருந்தது ஒரு கல்லறை! ஆம். அந்தக் கல்லறையின் மீது Hugo wood என்று எழுதப்பட்டிருந்தது. மேலும் அதில் அவர் பிறந்தது 1870 - இறந்தது 1933 என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

காட்டுக்குள்ளே கல்லறை எப்படி வந்தது! ஹியூகோவுட என்பவர் யார்? மேலே இருக்கிற வீடு யாருடையது?

இந்த வினாக்களுக்கெல்லாம் ஒரு வரலாறே இருக்கிறது.....

''ஹியூகோவுட்' ஒரு வன அலுவலர் ( Forester ). இங்கிலாந்தில் படித்த அவர், பிரிட்டிஷ் காலத்தில் இங்கு வந்திருக்கிறார். அவர்தான் முதன் முதலில் பர்மாவிலிருந்து தேக்குமர விதைகளைக் கொண்டுவந்து இங்கே ஊன்றியவராம். இந்த வன வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர். மேலே உள்ள பாழடைந்த வீடுதான் அவர் அப்போது வசித்த ரெஸ்ட் அவுஸ்-ஓய்வுஇல்லம். எப்படியும் அவர் 50 ஆண்டுக்காலமாவது இங்கு வாழ்ந்திருப்பார் என்று கூறுகிறார்கள். அவர் இறந்த பிறகு, தன்னுடைய உடலைத் தம் தாய்நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லாமல், இந்தக் காட்டிலேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பியது அவரது தியாக உணர்வைப் புலப்படுத்துகிறதல்லவா? காட்டு விலங்குகள் நடமாடும் பகுதியில் நான்கைந்து மரங்களுக்கு நடுவே காட்சியளிக்கிறது அந்தக் கல்லறை. மரங்கள் பூக்களைச் சொரிகின்றன. நாம் நம்மையறியாமலேயே நன்றிப் பெருக்குடன் அஞ்சலி செலுத்துகிறோம்.

''ஹியூகோவுட் வசித்த அந்த ஒய்வு இல்லத்துக்குக் 'கண்ணாடி பங்களா' என்று பெயராம். இப்போது அதற்குப் பெயர் என்ன தெரியுமா? 'கரடி பங்களா!' ஆம் இப்போது அது கரடிகளுக்கு 'ரெஸ்ட் அவுஸாக' உள்ளது.

இவரது நினைவாக, டாப்சிலிப்பில் ஒரு குடில் கட்டப்பட்டுள்ளது. அதன் பெயர்: Wood House மர இல்லம். இது முழுக்க முழுக்க மரத்தாலேயே ஆனது. அதில் சிலபேர் தங்கியிருந்தது, எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

**காட்டெருமைக் கூட்டம்**

இப்போது நன்றாக இருட்டிவிட்டது.

வாகனங்கள் வளைந்து வளைந்து செல்கின்றன.

''அதோ அதோ!..'' காட்டெருமைகளை ஒருவர் சுட்டிக் காட்டினார். 'ஜீப்' முன் விளக்குகள் வெளிச்சம் போட்டதும், அவை கண் சிமிட்டிக்கொண்டு புதருக்குள் ஓடி மறைந்தன.

அப்போது இரவு மணி எட்டு இருக்கும்.

## 'டாப் ஸ்லிப்' என்ற பெயர் எப்படி வந்தது?

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வனவிலங்கு உய்விடத்தில உள்ளதுதான் 'டாப்ஸ்லிப்'.

'டாப்ஸ்லிப்' என்றால் என்ன

தமிழில் 'உச்சி வழுக்கை' என்று சொல்லலாமா? (உச்சி வழுக்கை உள்ளவர்கள் மன்னிப்பார்களாக!)

சரி. இந்த 'டாப்ஸ்லிப்'புக்குப் பின்னணியில் ஒரு சுவையான கதையே உள்ளது.

வாகன வசதியே இல்லாத அந்தக் காலத்தில் இங்கே வந்த வெள்ளையர்களுக்குக் குதிரைகளே போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்பட்டன. 1799-இல் வெள்ளையர் ஆட்சி வந்தது. 1882-இல் வனச் சட்டம் உருவாகி அமலுக்கு வந்தது.

வெள்ளையர்களுக்கு முன் சேரர்களும், அவர்களுக்குப் பின் விஜயநகர மன்னர்களும் இந்த ஆனைமலைப் பகுதியை ஆண்டிருக்கிறார்கள். திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கப்பட்டணத்தில்) வீரன் திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பின்னர், 1799-இல் வந்த பிரிட்டிஷார் உடுமலைப்பேட்டை வரை பரந்து விரிந்து கிடந்த இந்த வனச் செல்வத்தை குறிப்பாக ஆனைமலைக் காடுகளில் மண்டிக் கிடக்கும் தேக்கு மரங்களை வெட்டி, மிக உயர்ந்த ஒரு குன்றின் மீது குவித்து வைத்து, அங்கிருந்து அவற்றைக் கீழே உருட்டி விடுவார்களாம். அப்படி தேக்கு மரங்களை உருட்டிவிட்ட அந்த உயரப் பகுதியைத்தான் 'டாப் ஸ்லிப்' (Top Slip) என்று வழங்குகின்றனர்.

இப்படி உயரத்திலிருந்து உருட்டிவிடப்பட்ட தேக்கு மரங்களைக் கரூர் வரை தரை வழியாகக் கொண்டுபோய், அங்கிருந்து காவிரி மூலம் வங்கக் கடலுக்குக் கொண்டு சென்று, பிறகு கப்பல் கட்டும் தளங்களுக்கு எடுத்துச் சென்றனர் என்று வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.



யானை முகாமில் செய்தியாளர்கள். முன்னால் இருக்கும் யானைதான் ஐ.ஜி.

வழியில், எங்கள் புகைப்படக் காரர் யானையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். அவரை விசாரித்தோம். அவர் காட்டெருமைக் கூட்டம் ஒன்றைப் படமெடுத்ததாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

டாப் ஸ்லிப்பில் நாங்கள் புறப்படுவதற்கு முன்பாகவே, புகைப்படக்காரரை ஒரு யானை மீது (பழக்கப்பட்ட யானைதான்) ஏற்றி, பாதுகாப்புக்கு வனத் துறையைச் சேர்ந்த ஒருவரையும் உட்கார வைத்து அனுப்பியிருந்தார்கள். அப்போதுதான் காட்டெருமைக் கூட்டத்தைப் படமெடுத்துவிட்டு, யானையிலிருந்து இறங்கி வந்து எங்களுடன் கலந்து கொண்டார், புகைப்படக் காரர்.

பிறகு வழியில் கடமான்களையும் பார்த்தோம்.

நாங்கள் தங்கியிருந்த குடில்களுக்கு எல்லாரும் வந்தோம். அப்போது, குடில்களுக்கு எதிரே உள்ள பசும்புல் மைதானத்தில் புள்ளிமான் கூட்டம் ஒன்று இருந்ததைக் கண்டோம். கேமராவின் ஃபிளாஷ் வெளிச்சத்தில் அவை அங்கிருந்து ஓடிய அழகு இன்னும் கண்முன் நிற்கிறது!

அன்று இரவு டாப் ஸ்லிப்பில் தங்கினோம்.

காட்டைச் சுற்றி வந்த களைப்பில் படுத்ததுதான் தாமதம், எல்லாருக்கும் 'டாப் ஸ்லீப்!'

மறுநாள் காலை - ஆறு மணி.

கண்களைக் கசக்கிக் கொண்டு ஜன்னல் வழியே எதிரே பார்க்கிறோம்.

அழகிய மலைத்தொடரும், வனப் பாதுகாவலர் குடியிருப்புகளும் எங்கே போயின?

ஆம். பனிப்படலம் அல்லவா அவற்றையெல்லாம் மறைத்துக் கொண்டு, வெண்மேகமாய்க் காட்சியளிக்கிறது....

''காலை எழுந்ததும் கரியஞ் சோலைக்குப் போக வேண்டும். அங்கே யானைகளைப் பார்க்கலாம்!'' என்று முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தார், சரணாலயத் தலைமை அலுவலர். அதன்படி எல்லாரும் அதிகாலையிலேயே எழுந்து அந்த இடத்துக்கு ஜீப்பில் புறப்பட்டோம்.

**உப்பு என்றால் அல்வா மாதிரி!**

பனி பெய்கிறது...


எங்கள் பணி தொடர்கிறது..

சரம் படிந்த மண் பாதையில் சென்ற ஜீப், ஓரிடத்தில் நிற்கிறது. எல்லாரும் கீழே இறங்குகிறோம். சற்றுத் தொலைவில், உயரமான நான்கு கான்கிரீட் தூண்களுக்கு மேலே 'மரவீடு' ஒன்று தென்படுகிறது. சதுர வடிவிலான அதைச் சுற்றிலும் கண்ணாடி ஜன்னல்கள். அதை வாட்ச் டவர் (Watch Tower) என்று அழைக்கிறார்கள். மேலே ஏறிப் போகக் கீழே மர ஏணி ஒன்று.

அந்த இடத்துக்கு நாங்கள் எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக

காமிராவில் சிக்கிய காட்டெருமைக் கூட்டங்கள்





இதுதான் ''வாட்ச் டவா''

நடந்து சென்றோம். வழியில் காட்டாற்றின் கசிவுகள். அருகே சிறு நீரோடை. அங்கேதான் யானைகள் வருமாம். நீரோடைக் கருகே உப்புதூவப்பட்டிருக்கிறது. உப்பு என்றால் விலங்குகளுக்கு 'அல்வா' மாதிரியாம். அதை மோப்பம் பிடித்துக் கொண்டே வருமாம்.

**கோபம் தணியக் கொட்டடி!**

''யானைக்கு என்ன உணவு தருகிறீர்கள்?'' ஒரு நிருபர் கேள்வி கேட்கிறார். அதற்கு வனப்பாதுகாவலர் ஒருவர் பதில் சொல்கிறார்:

"வேலை செய்யும் யானைகளுக்கு என்றும், ஓய்விலிருக்கும் யானைகளுக்கு என்றும் உணவுகள் தரப்படுகின்றன. இதே போல கருவுற்றிருக்கும் யானைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. அதாவது மற்ற உணவு வகையோடு தேங்காய்கள் சற்று அதிகமாகத் தரப்படும்."

பொதுவாக யானைகளுக்கு கொள்ளு, ராகி, உப்பு, அச்சு வெல்லம், தேங்காய்கள் தரப்படுகின்றன. மருத்துவர் யோசனைப்படி இவை எந்தெந்த யானைக்கு எந்தெந்த அளவு தரவேண்டும் என்ற பட்டியலே அங்கு போட்டிருக்கிறார்கள்.

யானைக்குட்டி தாய் வயிற்றில் இருக்கும் காலம் 18-22 மாதங்களாகும். குட்டி போட்டதும் ஓராண்டுவரை அது பால் கொடுக்கும். பிறகு குட்டியைத் தாயிடமிருந்து பிரித்துத் தனிக் கொட்டடியில் அடைத்து,அதற்குப்பயிற்சி அளிப்பர். இளங்கன்று பயமறியாது என்பார்களே, அதைப் போல, குட்டி யானையும் துருதுருவென்று சற்று கோபமாகவே இருக்குமாம். அதன் கோபத்தை அடக்கவே இந்தக் கொட்டடி.

இந்தக் குட்டி யானையை யார் முதலில் பழக்குகிறாரோ அவரே, இந்த யானை பெரிதாக வளர்ந்து இறக்கும்வரையும் மாவுத்தனாக இருப்பாராம். இப்படி ஒவ்வொரு குட்டிக்கும் ஒரு ஆனைக்காரரை ஒதுக்கிவிடுகிறார்கள்.

யானை ஓய்வு எடுப்பதுண்டு. ஆனால் படுத்துத் தூங்குவதில்லை. யானை தினமும் குளிக்கும். விலங்குகளில் சுத்தமானது யானை ஒன்றுதான். விலங்குகளிலேயே மிகப் பெரிய யானை, பயப்படுவது மிகச் சிறிய கொசுவுக்குத்தானாம்!

யானைகளுக்குக் கட்டளை இடுவதற்கென்று'பாஷை'உண்டு. அவை தமிழ், உருது, கன்னட மொழியாக இருக்கின்றன. பார்- என்றால் தும்பிக்கையைத் தூக்குகிறது. பைட்- என்றால் படுக்கிறது. உட்- என்றால் எழுந்திருக்கிறது.

**ஆனைக்கார வீடு**

ஆனைமலைப் பகுதிகளில் மலைசர், மலமலசர், புலையர், காடன் முதலான இனமக்கள் வாழ்கின்றனர். பொதுவாக இவர்களது தொழில் யானை பழக்குவது, மரம் வெட்டுவதாகும். இவர்கள் எல்லாரும் தமிழே பேசுகிறார்கள். இவர்களது பெயர்களெல்லாம் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கின்றன. வாலி, சுக்ரீவன் என்ற பெயரும் சிலருக்கு உண்டு.

சிறுசிறு மூங்கில் குடிசைகளில் இவர்கள் வாழ்கிறார்கள். பெண்கள் வீட்டில் இருக்கும்போது லுங்கியும் மேலே டவலும் அணிகிறார்கள். யானைகளைப் பழக்குகிறவர்கள், யானை முகாமுக்கு அருகிலேயே வசிக்கின்றனர். இவர்களது வீடு 'ஆனைக்கார வீடு' என்று அழைக்கப்படுகிறது.

சடையன் என்னும் 90 வயது முதியவரைச் சந்திக்கிறோம். வெள்ளையர் காலத்தில் ஒரணா கூலிக்கு பாலக்காட்டிலிருந்து வந்தவராம். அப்போது நிறைய யானைகள் இருந்தனவாம். 'காட்டுக்கு மத்தியில் வசிக்கிறீர்களே உங்களுக்கு விலங்குகளின் தொல்லை ஏதும் இல்லையா?' என்று கேட்டபோது, 'அதெல்லாம் ஒன்றும் இல்லை. நாம தொந்தரவு கொடுத்தாத்தான் மிருகங்களும் தொந்தரவுகொடுக்கும்!' என்கிறார் அவர்.

யானை முகாமைவிட்டுப் புறப்படுகிறோம். வழியில் சிங்கவால் குரங்குகளைப் பார்த்தோம். புகைப்படக்காரர்களுக்கு ஒரே வேட்டைதான்!

**மச்சானைப் பார்த்தீங்களா?**

யானை முகாமிலிருந்து, யானைகளிடம் பிரியா விடை பெற்று மேலும் செல்கிறோம்.

மூலாந்தி, யானைக்குந்தி ஆகிய இடங்களைத் தாண்டிப் போகிறோம். பசுமையான மரஞ்செடி கொடிகள் நம்மைக் கவர்கின்றன. ஆனைமலை தாவரவியல், உயிரியல் மாணவர்கள் ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகத் திகழ்வதை வனப்பாதுகாவலர்கள் விளக்கிக் கொண்டே வந்தார்கள்.

ஓரிடத்தில் 50 அடி உயர மரத்தையொட்டி ஏணி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. மரத்தின் மேலே மூங்கில்களாலான 'தங்குமிடம்' ஒன்று கட்டப்பட்டிருந்தது. யாவும் பாழடைந்த நிலையில் இருந்தன. வனஆராய்ச்சியாளர்கள். வனவிலங்குகளைப் புகைப்படம் எடுப்பவர்கள் இதன் மேல் இரவும் பகலும் இருப்பார்களாம். இந்த மரப் பரணுக்குப் பெயர் தான்'மச்சான்'.

**கன்னிமார்தேக்கு:**

பெரிய பெரிய தேக்கு மரங்களை அனாயாசமாகத் தும்பிக்கையால் தூக்கி அடுக்கி வைக்கும் யானை ஒன்றைப் பார்க்கிறோம்.

பிறகு வரகலியாறு என்னும் இடத்துக்கு வருகிறோம். இங்கேதான் யானைக் குட்டிகளைப் பழக்கும் கொட்டடி உள்ளது. இதை 'யானைப்பந்தி' என்று அழைக்கின்றனர். இங்கும் ஆனைக்கார வீடுகள் இருக்கின்றன. துவக்கப்பள்ளி ஒன்றும் உள்ளது. குழந்தைகள் துள்ளிக் குதித்துக் கொண்டு பள்ளிக்குச் செல்வதைப் பார்க்கிறோம். இந்தக் குழந்தைகளுக்கு முதல்வரின் இலவச மதிய உணவும் வழங்கப்படுகிறது.

டாப்ஸ்லிப்பிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் 'கன்னிமார் தேக்கு' உள்ளது. இதற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. கன்னிமார்கள் ஏழுபேர் அதைப்போலவே ஏழு தேக்கு மரங்கள் இங்கு இருந்தன



ஆனைமலை — வரகலியாற்றில் 'யானைப் பந்தி

வாம். அவற்றுள் இப்போது இருப்பதோ ஒன்றே ஒன்றுதான். அது விந்தை மரமாகக் கருதப்படுகிறது. 41 மீட்டர் உயரமுள்ள இத்தேக்கு மரம் 635 செ. மீ. சுற்றளவுடையது. இம் மரத்தின் வயது பல நூறு ஆண்டுகளாகும். இந்த மரம் இருப்பது கேரள மாநிலத்தில். இதைக் 'கன்னித் தன்மை மாறாத காடு' என்றும் வழங்குவர். அடையாறு ஆலமரம் போல, இந்தத் தேக்கு மரமும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்கின்றது.

**ஆராய்ச்சி இளைஞர்**

ஆராய்ச்சிக்காகப் பலர் பல்வேறு துறைகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் ரஜீத் குமார் என்ற 29வயது இளைஞர், சிங்கவால் குரங்கு பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்றால் விந்தையாக இல்லையா? அதற்காக அவர் ஆனைமலையில் கடந்த இரண்டு மாதங்களாகத் தங்கி இருக்கிறாராம். சென்னை அண்ணாநகரை இருப்பிடமாகக் கொண்ட இவருக்கு, இவ்வாராய்ச்சிக்காக உலக வனவிலங்குப் பாதுகாப்பு நிதியிலிருந்து உதவித்தொகை கிடைத்திருக்கிறது. இவரது ஆராய்ச்சி 1984 மார்ச்சில் முடியுமாம்.

இதற்கு முன் திரு விடேகர் என்பவர் வனவிலங்குகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறாராம். புகைப்பட நிபுணர் திரு. கிருஷ்ணன் இங்கு இரவும் பகலும் காத்திருந்து வனவிலங்குகளைப் பல கோணங்களில் படமெடுத்திருக்கிறார்கள்.

**ராஜநாகமும், செவிட்டு யானையும்!**

''ஆனைமலையில், சிங்கம் தவிர எல்லா வகையான விலங்குகளும் உள்ளன. ராஜநாகம் இங்கே இருப்பது ஒரு சிறப்பு. இது சிறுசிறு பாம்பையும் உணவாகச் சாப்பிடும். இது யானையையே கொன்றுவிடும் கொடிய விஷம் உடையது. ஒரு சமயம் இந்தக் காட்டைச் சேர்ந்த ராஜநாகம் பஸ்ஸில் அடிபட்டு இறந்துவிட்டது. அதன் நீளம் 14 அடி. அதன் தோலை அப்படியே எடுத்துவைத்திருக்கிறார்கள்.

ராஜநாகம் மரப்பொந்தில் தான் இருக்குமாம். இது 22 அடி வரை வளருமாம். இவ்வளவு பெரிய ராஜநாகம் ஒன்று ஹாங்காங்கில் உள்ளது என்றும், திருச்சூர், கிண்டி வனவிலங்குக் காட்சிசாலைகளிலும் ராஜநாகங்கள் உள்ளன என்றும் சொன்னார்கள்.

இந்தக் காட்டில் ஒற்றைக் கொம்பு யானை ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது. இது இன்னொரு யானையுடன் சண்டை போட்டதால், ஒரு கொம்பு உடைந்தது. அந்தக் கொம்பு (24 கிலோ) வனத்துறையால் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு யானையும் இங்கு உள்ளது. அதற்குக் காது கேட்காதாம். அந்தச் செவிட்டு யானைக்குப் பக்கத்திலேயே வண்டிகள் போனால்கூட அது அப்படியே மரம்போல் நிற்குமாம்! ஆனால் அது யாருக்கும் தீங்கு செய்யாதாம்!

**கரடி 'வாக்கிங்' போகும்!**

''வனவிலங்குகள் எதுவும் நமக்குத் தீங்கு செய்வதில்லை. நாம் ஏதாவது செய்தால்தான் அவை நம்மைத் தாக்க வருகின்றன. வனப்பாதுகாவலர் குடியிருப்புக்கு முன்னால்கூட கரடிகள் 'வாக்கிங்' வருவதுண்டு! சில சமயம், சிறுத்தைப் புலி கூடத் தப்பித்தவறி இந்தப் பக்கமாக வருவதுண்டு. எதுவும், யாரையும் ஒன்றும் செய்வதில்லை. ஒரு சமயம் என் ஜீப்புக்கு முன்னால் காட்டெருமைகள் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தன. அவற்றை நான் மெல்லத் தட்டிக் கொடுத்தேன். அவை எதுவும் செய்யவில்லை. வனவிலங்குகளை நாம் வாழ வைக்க வேண்டும்; வனச் செல்வங்களை நாம் காக்க வேண்டும்..'' என்று கூறுகிறார் வனவிலங்குச் சரணாலயத் தலைமை அலுவலர் திரு கே. மாரிமுத்து அவர்கள்.

மலைவாழ் மக்கள், வனத்துறை அலுவலர்கள், சுற்றுலாப் பயணிகள் இவர்களுக்காக பொள்ளாச்சியிலிருந்து டாப்சிலிப்பிற்கு காலை, மாலை இரு முறை பேருந்துகள் விடப்படுகின்றன. இங்குள்ளவர்களுக்காகக் கூட்டுறவு அங்காடி ஒன்றும் செயல்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் வசதியாகத் தங்குவதற்கென உணவகம் இணைந்த அழகிய குடில்களும் இங்கு உள்ளன. காட்டைச் சுற்றிப் பார்க்க - வனவிலங்குகளைக் கண்டு மகிழ-இயற்கை அழகை ரசிக்க வேண்டுமானால் யானை மீது ஏறி பவனி வரலாம். வேன்களிலும் செல்லலாம். இதற்கெல்லாம் கட்டணம் உண்டு.

இந்த அழகிய வனத்தை-ஆனைமலைச் சரணாலயத்தை வனத்துறையினர் மிகுந்த விழிப்போடு பாதுகாத்து வருகின்றனர். வற்றாத ஊற்றாக - எடுக்க எடுக்கக் குறையாத இயற்கை தந்த அருட் கொடையாக அல்லவா திகழ்கிறது இது?

# மண்ணச்ச நல்லூரில் மரம் வளர்ப்புப் பணி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது கொணலைகிராமம். இக்கிராமத்தில் பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஏரியின் உள்வாயில் 22,500 கற்பூர மரக்கன்றுகள் 1982 ஆம் ஆண்டு ஜூன்மாதம் நடப்பட்டன. இருபது ஏக்கர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ள இம்மரக்கன்றுகள் நன்கு வளர்ந்து செழித்துள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களால் வகுக்கப்பட்ட ஒரு கோடி மரம் வளர்ப்புத்திட்டம் நிறைவேற்றுதலில் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஐந்து இலட்சம் மரங்களை நட்டு, தனது இலக்கைநிறைவு செய்தது.

சென்னை — திண்டுக்கல் சாலையில் திருச்சியிலிருந்து இருபது கி. மீ. தொலைவில் கொணலை கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்குச் செல்லும் பாதையில் சாலை ஓரத்திலேயே இருக்கிறது கொணலை ஏரி. இந்த ஏரி 60 ஏக்கர் நீர்ப் பரப்புள்ளது. இந்த அகலமான ஏரியின் வெற்றிடங்களில் மரங்கள் வைக்க வேண்டுமென மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பொதுப்பணித்துறையின் அனுமதி பெற்றார். அதன்படி, இந்த ஏரியில் நடுவதற்குத் தக்கவாறு கற்பூர மரக்கன்றுகள் தருவிக்கப்பட்டன. 22,500 கன்றுகள் 20 ஏக்கர் பரப்பில் 1982 ஜூன் திங்களில் நடப்பட்டன. தேசீய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் இப்பணி 32 ஆயிரம் செலவில் நிறைவேற்றப்பட்டது. 1982 ஜூன் ஜூலை ஆகஸ்டு ஆகிய மாதங்களில் நாள்தோறும் 45 நபர்களைக்கொண்டு நீர் ஊற்றிப் பாதுகாக்கப்பட்டது.

இப்பொழுது அச்செடிகள் மூன்றடி உயரம் வளர்ந்து மிக அழகாகக்காட்சியளிக்கின்றன. கன்று இழப்புக்கள் 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தன. இப்பணிகளைக் கொணலை ஊர் நல அலுவலர், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆகியோர் நேர்முகப் பார்வையில் நிறைவேற்றினர்.

கொணலை கிராமப் பொது மக்கள் இப்பணியின் மீது துவக்கம் முதலே மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள். தற்போது அவர்கள் இந்தச் செடிகளை அவர்களது ஊர்ச் சொத்தாகப் பாவித்துப் பாதுகாத்து வருகின்றனர்.


இன்னும் ஆறு ஆண்டுக் காலத்தில் இந்தச் செடிகளின் மூலம் ரூ. 2 இலட்சம் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.


இதே போன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக்கிராம மக்களும் மரம் வளர்க்கும் பணியில் முழு ஒத்துழைப்பு நல்கினால் மிகக் குறுகிய காலத்தில் பசுமை மிகுந்த மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டிட முடியும் என்பதில் ஐயமில்லை.

**சி. பி. இராமநாதன்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.



# செலவு குறைய சிபாரிசுப்படி உரமிடுங்கள்








**இறவை நிலக்கடலைக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.**

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு மூட்டைக்கான உற்பத்தி செலவு குறையும். இறவைக் கடலையைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| கடலை சாகுபடி | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| செலவு (ஏக்கருக்கு) | ரூ. 1000 | ரூ. 1200 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 10 மூட்டை | 20 மூட்டை |
| எனவே ஒரு மூட்டைக்கான உற்பத்தி செலவு | ரூ. 100 | ரூ. 60 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

இறவைக் கடலைக்கு ஏற்ற உரம் விஜய் 14-28-14. ஏக்கருக்கு 50 கிலோ விஜய் 14-28-14 உரத்துடன் 25 கிலோ பொட்டாஷையும் கலந்து இடவேண்டும்.



## சமச்சீர் உரமிட விஜய்


மேலும் நிலக்கடலைப் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

| விஜய் 14-28-14 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 14 |
| மணிச் சத்து | 28 |
| சாம்பல் சத்து | 14 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 11.5 |

HTM-MFL-2833



# புதுமைக்கு ஒரு கோ-ஆப்டெக்ஸ்

ஒவ்வொரு ஆண்டு தீபாவளி யின்போதும் கோ-ஆப்டெக்ஸ் புது ரகங்களை அறிமுகப்படுத்து வருகிறது. வழக்கம்போல் இவ் வாண்டும் சிறப்பாக, குழந்தை களுக்கென்று புது வடிவத்தில் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

**பாலியஸ்டர் சிங்கப்பூர் லுங்கிகள்**

இந்த ஆண்டு தீபாவளிப் பண் டிகைக்கு 20,000 பாலியஸ்டர் லுங்கிகள் ஆய்வு முறையில் விற் பனைக்காகத் தயாரிக்கப்பட் டன. இத்தகைய லுங்கிகள் நல்ல வடிவமைப்பிலும் கலை வண்ணத் திலும் கண்கவரும் விதத்தில் அச் சிடப்பட்டுள்ளன. குறிப்பாக ஆண், பெண் இருபாலர்களின் உள்ளங்களை ஈர்க்கும் விதத்தில் இந்த வகை லுங்கிகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இதன் வெற்றியின் பேரில், வர்த்தக ரீதியாகப் பெருமளவில் தயாரிக்கப்படும் எனத் தெரி கிறது.

**ரவிக்கைத் துணிகள்**

எந்தப் பாலியஸ்டர் சேலைக் கும் பொருத்தமாகக் கூடிய விதத் தில் 100 பிரசித்திப் பெற்ற வண் ணங்களில் ரவிக்கைத் துணிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய வெப்பதட்ப நிலைக்கேற்ப பாலி யஸ்டர் இழையும், பருத்தி இழை யும் 67:33 என்ற விகிதத்தில் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ள தாகையால் இவை மெல்லியதாக வும், உறுதியாயும் கண்கவரும் விதத்திலும் அமைந்துள்ளது தனி சிறப்பாகும்.

**தாள் வடிவங்களைத் துணிக்கு மாற்றல்**

பிரத்தியேகமானதும் அழகு மிக்கதுமான வடிவமைப்புகள், தாள்களிலிருந்து துணிகளுக்கு மாற்றப்படுகின்றன. இத்தகைய கலை நுணுக்கம் அண்மையில் தான் அபிவிருத்தி செய்யப்பட்டு நம் நாட்டிற்கு வந்தது. கைத்தறி பாலியஸ்டர் துணிகளில் இத் தகைய வகை அச்சிடுவதை அறி முகப்படுத்துவதில் கோ-ஆப் டெக்ஸ் முன்னோடியாக விளங்கு கிறது.

தீபாவளி பண்டிகைக்குக் குறைந்த அளவாக பாலியஸ்டர் சேலைகளில் 10,000 மீட்டர் களும் பாலியஸ்டர் சட்டைத் துணிகளில் 10,000 மீட்டர்களும் ஆய்வு முறையில் விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

**பருத்தித் துணியில் நவீன வண் ணங்கள், நவீன அச்சுக்கள்**

பருத்தியில் அச்சிடப்பட்ட சேலைகள் நீண்டகாலமாக விற் பனைக்கு வந்துள்ளன. அச்சிடுவ தில் சிறிது மாற்றம் செய்து ஒரு புதியரகமாகப் பருத்தியில் நவீன வண்ணங்கள் கொண்டு அச்சிடப் பட்ட ரகங்கள் (Khadi Prints) தீபாவளி பண்டிகையை ஒட்டி அதிக அளவில் அறிமுகப்படுத்தப் பட்டன.

கடந்த கைத்தறிக் கண்காட்சி யின்போது (ஏப்ரல் '82) இவ் வகை ஆடைகளுக்கு ஊக்கமூட் டும் ஆதரவு கணிசமாகக் கிடைத் தது.

வெண்மை நிறச்சாயம் கொண்டு, வடிவமைப்பில் வரை கோடுகளை அச்சிடவும் சில வேளைகளில் வடிவமைப்பின் மலர் பாகங்களை அச்சிடவும் பயன்படுகின்றன. ஆக, வடி வமைப்பின் பொலிவை இது எடுத்துக் காட்டுகிறது. ஓர் இலட் சம் சேலைகள் விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

**பயன்மிகு கைத்தறி பாலியஸ்டர் சட்டைத்துணிகள்**

—கவர்ச்சிமிக்க வடிவமைப்பு களில் கிடைக்கிறது.

—புகழ்பெற்ற எந்த ஆலைத் துணிக்கும் தரத்தில் குறை யாமலிருக்கிறது.

—குறைந்த விலையில் கிடைக் கிறது.

—கவர்ச்சிமிக்க - பொருத்த மான - வடிவமைப்புகளில் நூற்றுக்கும் மேலான ரகங் களில் கிடைக்கின்றது.

—பெரியவர்களுக்கு மட்டுமல் லாமல் குழந்தைகளுக்கும் வடிவமைப்புகளில் நாம் விரும்பியவற்றைப் பெற வசதியிருக்கிறது.

**பாலியஸ்டர் சேலைகள்**

தீபாவளி பண்டிகையை ஒட்டி நூற்றுக்கும் மேற்பட்ட நல்ல வடிவமைப்புகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவடிவமைப் புக்கள் விற்பனைக்கு வந்தன என்பது சிறப்பு அம்சமாகும். ஒவ்வொரு வடிவமைப்பும் ஐந்து வகை வண்ணங்களில் அறிமுகப் படுத்தப்பட்டது. சுமார் 3 இலட் சம் சேலைகள் கண்கவரும் வண் ணங்களில் வெளியிடப்பட்டுள் ளன.

**பாலியஸ்டர் கால்சட்டைத் துணிகள்**

வாடிக்கையாளரின் ஒப்புதலின் பேரில் வர்த்தக உற்பத்தி ஆரம் பிக்கப்பட்டது. ஒரு இலட்சம் மீட்டர் கால் சட்டைத் துணிகள் பொருத்தமான வண்ணங்களி லும் கோடுகளிலும் வெளியிடப் பட்டுள்ளன.



# பலரும் போற்றும் பாலபவனம்

ஜவகர் பால பவன் எங்குள்ளது?

சென்னை அண்ணா சாலையிலுள்ள, அரசினர் தோட்டத்தில் உள்ளது. அதாவது ராஜாஜி மண்டபத்துக்கு எதிரில் உள்ள காந்தி இல்லத்தில் இது அமைந்துள்ளது.

மாலை வேளையில், இந்த பவனுக்கு முன்னே உள்ள மைதானத்தில், நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஆடிப்பாடுவதைப் பார்க்கலாம்.

இந்த பாலபவனம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? எப்படிச் செயல்படுகிறது?

''பாடப் புத்தகங்களையும் பாடத் திட்டங்களையும் கற்பிக்கும் பொதுப் பள்ளியில் பெற இயலாத அரியவாய்ப்புகளையும், அனுபவங்களையும் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.''

-இந்தக் கருத்திற்கிணங்க பண்டித ஜவகர்லால் நேருவின் சிந்தையில் தோன்றிய புதிய முறைக் கல்விக்கூடம் தான் 'ஜவகர் பால பவன்'. இதை அவர் 1956ஆம் ஆண்டு நாட்டுக் குழந்தைகளுக்காக அளித்தார்.

பொதுப் பள்ளிகளில் பெற இயலாத வாய்ப்புகளையும், அனுபவங்களையும் அளித்து, மாணவர்களிடம் மறைந்திருக்கும் தகுதிகளை ஆக்க பூர்வமான வழிகளில் வெளிப்படுத்த இம்முறை உதவி புரிகிறது.

இதை அடிப்படையாக வைத்து ஒரு துவக்கமாக, பால பவன் நிறுவனம் (இந்தியா) டில்லியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகள் இப்பலனைப் பெற 'ஜவகர் சிறுவர் இல்லங்கள்' எல்லா மாநிலங்களிலும் துவக்கப்பட்டன. தமிழ்நாடு, கேரளம், ஹைதராபாத், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள ஏனைய பால பவனங்கள்போல் தமிழ்நாட்டுப் பால பவனத்திலும் கலை, கைவேலை, ஓவியம், நடனம், பாட்டு, விளையாட்டு முதலியவற்றால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் புதிய அனுபவங்களும் அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இந்த வாய்ப்புகளைக் குழந்தைகளுக்கு அளிக்க, மாவட்ட பால பவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை திருச்சி, புதுக்கோட்டை, நாகர்கோவில் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பால பவனங்கள் உள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் பால பவனம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகள் இப்பயனைப் பெற, பள்ளிகளில் 'பால பவன் சங்கங்கள்' நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால பவன் விடுமுறைப் பயிற்சி முகாம்களையும் நடத்துகிறது.

உடல் ஊனமுற்ற மனநலக் குறைவான குழந்தைகளுக்கு விடுமுறை முகாம் நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகளின் நன்மைக்காக வினாடி வினா மற்றும் திரைப்படக் காட்சி அவ்வப்பொழுது நடைபெறுகிறது.

இவ்வாறு பால பவனம், பாலர் பயன்பெறத்தக்கவகையில் பல்வேறு நற்பணிகளை ஆற்றி வருகிறது.

## என்ன பால்?

பால் பால்
என்ன பால் ?
பசுப் பால்.
என்ன பசு ?
வெள்ளைப் பசு.
என்ன வெள்ளை ?
சட்டை வெள்ளை.
என்ன சட்டை ?
கால் சட்டை.
என்ன கால் ?
பந்தக் கால்.
என்ன பந்தல் ?
தண்ணீர்ப் பந்தல்!

**கோ. வெற்றிச்செல்வன்**
ஒன்பதாம் வகுப்பு
தூய அந்தோணியார்
மேல்நிலைப் பள்ளி
தஞ்சாவூர்.

## பாறைகள் 'பயிரிட்டு' வீடுகள் கட்டுகிறார்கள்

சோவியத்து யூனியனில், மிகவும் அதிசயமான ஏரிகள் பல இருக்கின்றன.

ஒரு ஏரியில் புதிது புதிதாகப் பாறைகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. அந்த வட்டாரத்து மக்கள், அந்தப் பாறைகளை எடுத்துச் சென்று, வீடுகள் கட்டப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த ஏரி நீரில் மாக்னிசியம உப்பு கலந்திருக்கிறது. ஏரியின் அடியிலிருந்து சோடா உப்பு சேர்ந்து நீர், ஊற்றாக வந்தபடி இருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்து இரசாயன மாற்றம் ஏற்பட்டு, பாறைகள் உருவாகின்றன. மாலினொவோயி என்பது இந்த ஏரியின் பெயர்.

மாணவர் பக்கம்




—பனையபுரம் அதியமான்—

கந்தன் ஏழாவது படிக்கும் சிறுவன். இவனுக்கு செல்வி என்ற ஒரு தங்கை உண்டு. கந்தனது பெற்றோர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள். தனது பிள்ளைகளின் மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்தனர்.

கந்தனும், செல்வியும், பள்ளிக்கூடம் செல்லும்போது தினமும் அவர்களுக்குக் காசுகள் தருவார்கள். செல்வி அந்தக் காசுகளில் ஒன்றைக்கூடச் செலவு செய்யாமல் உண்டியலில் போட்டுச் சேமித்து வந்தாள். ஆனால் கந்தனோ அந்தக் காசுகளைக் கொண்டு நடைபாதைக் கடைகளில் விற்கும் ஈமொய்க்கும் மிட்டாய்களையும் 'ஐஸ்'போன்றவற்றையும் வாங்கித் தின்பான்.

கந்தனுடன் படிப்பவன் சுந்தர். இவன் நல்ல குணங்களைப் பெற்றவன். அவன் கந்தனைப் பார்த்து ''கந்தா நீ தெருவில் விற்கும் பண்டங்களை வாங்கித் தின்னாதே. அதனால் உன் உடல் நலம்தான் கெட்டுப் போகும்'' என்று சொல்வான்.

அதற்குக் கந்தன், ''நீ யாரடா அதைக் கேட்க, என்னுடைய காசு, நான் வாங்கித் தின்கிறேன் உனக்கென்ன அதைப்பற்றி?'' என்று அடித்துப் பதில் கூறுவான்.

ஆனால் சுந்தர் கந்தனைத் திருத்தஎவ்வளவோ அறிவுரைகள் சொல்லியும் பயனில்லை.

கந்தன் தொடர்ந்து அசுத்தமான தின்பண்டங்களைத் தின்று வந்ததால் அவனுக்கு அடிக்கடி சுரம், வயிற்றுப் போக்கு, வாய்ப்புண் ஆகியவை வர ஆரம்பித்தன. ஆனால், இதைப்பற்றி அவன் மூச்சு விடவே இல்லை!

இதனால் கந்தன் உடல்நிலையைக் கண்ட அவனது பெற்றோர்கள் கவலையடைந்தார்கள். அவனை டாக்டரிடம் அழைத்துச்சென்றார்கள். மருந்து சாப்பிட்ட பிறகு... மறுபடியும் பழைய கதைதான்!

ஒருநாள் அவன் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தான். அப்போது ஐஸ் வண்டி ஒன்றுசென்றுகொண்டிருந்தது. அப்போது 'ஐஸ்' சாப்பிட வேண்டும் என்ற ஆசையும் வந்தது. ஆனால் அவன் வாய்ப்புண்ணோ ஆறாமல் இருந்தது. வாய்ப்புண்ணின் எரிச்சலை அடக்க 'ஐஸ்' வாங்கிச் சாப்பிட்டால் 'சில்' என்று குளிர்ச்சியாய் இருக்கும் என்று எண்ணி இரண்டு 'ஐஸ்'களை வாங்கிச் சாப்பிட்டான். ஆனால் 'ஐஸ்' தீர்ந்தவுடன் பழையபடி வாய்ப்புண் எரிச்சலைக் கொடுக்க ஆரம்பித்தது. வயிறும் ஏதோ செய்வதுபோல இருந்தது. ஆகவே இனிப்பான மிட்டாய் சாப்பிடலாம் என்று ஆசைப்பட்டு, மிட்டாய் வாங்கி வாயில் போட்டுக் கொண்டான்.

வகுப்பில் போய் உட்கார்ந்தான். ''அய்யோ-அம்மா! வயிற்றை வலிக்குதே'' என்று கீத்த ஆரம்பித்தான். இதைக்கண்ட சுந்தர் ஆசிரியர் அனுமதியுடன் அவனை ரிக்ஷாவில் ஏற்றிக் கந்தனின் வீட்டுக்குக் கொண்டு சென்றான். வீட்டுக்குச்சென்றவுடன்கந்தனின் தாய் அதே வண்டியில் அவர்களை டாக்டர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

டாக்டரிடம் கந்தன் தெருவில் விற்கின்ற கண்ட தின்பண்டங்களை வாங்கித்தின்பது குறித்தும் தான் எவ்வளவு சொல்லியும், கந்தன் கேட்காதது குறித்தும் விளக்கமாகச் சொன்னான் சுந்தர்:

தன் மகன் இவ்வளவு நாளாக இவற்றையெல்லாம் மூடி மறைத்துப் பொய் சொன்னதைக் கேட்ட கந்தனின் தாய் மிகவும் மனம் வருந்தினார்.

''அம்மா! இனிமே நான் பொய்யே சொல்ல மாட்டேன்—தெருவில் விற்கிற தின்பண்டங்களையும் வாங்கித் தின்னமாட்டேன்'' என்றான். கண்களைக் கசச்சிக் கொண்டே.

''கந்தா! இனிமேல் தெருவில் விற்கிற தின்பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாது. அவற்றால் உன் உடல் நலம் கெடும்'' என்று டாக்டர் புத்திமதி சொல்லி அனுப்பினார்.

ஒரு நாள், பள்ளிக்கூடத்துக்கு முன்னால், ஐஸ் வண்டி ஒன்று வழக்கம்போல் நின்று கொண்டிருந்தது. 'ஐஸ்! ஐஸ்!' என்று வண்டிக்காரன் கத்திக் கொண்டிருந்தான்.

கந்தன் அந்த வண்டியைப் பார்த்துக்கொண்டே சென்றான். பல வண்ணங்களில் சிறுவர்கள் ஐஸ் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க பார்க்க கந்தனுக்கு நாக்கில் நீர் ஊறியது.

அப்போது அங்கு வந்த சுந்தர், ''டேய்! கந்தா! ஐஸ் சாப்பிடலாம் வர்றாயா? நான் வாங்கித் தாறேன்!'' என்று காசு எடுக்கத் தன் பாக்கெட்டில் கையை விட்டான்.

உடனே கந்தன், ''ஐயோ ஐஸா? அது எனக்கு வேண்டவே வேண்டாம்!' என்று பள்ளிக்கூடத்துக்குள் ஓடினான்.

ஆம். கந்தன் இப்போது திருந்திவிட்டான். ஐஸ் கூட அவனுக்கு இப்போது சுடுகிறது!



## உள்ளம் மறக்குமா?

சேலம் கவிஞர் செ. ஆடலரசு

மனிதராய்ப் பிறந்த பல்லோர்
மனிதராய் இருப்ப தில்லை!
புனிதனே! நீயோ நல்லோன்
பூரித்தோம் உன்பண்பாலே!

கனிவினைக் கசுழறும் உன்றன்
கனிமுகம் எண்ணுகின்றோம்
இனியுமுன் வழிநடப்போம்
இதயத்தில் ஏற்றி வைப்போம்!



## விளையும் பயிர்

பள்ளியில் படிக்கும் காலத்தில், கல்வியிலும் தேர்ச்சி பெற்று, கலையிலும் தேர்ச்சி பெறுபவர்கள் அபூர்வமாகத்தான் காணப்படுவார்கள். அந்தப் பட்டியலில் இடம் பெறுகிறார்கள் இரட்டையர்களான செல்வி ரமா, உமா சகோதரியர்.


சென்னையில், மாநில மகளிர் பள்ளியில் எட்டாம் வகுப்பில் பயிலும் இவர்கள் சிறந்த நடன மணிகளாகவும் திகழ்கிறார்கள். பரதநாட்டியம், பங்குரோவ், மலையாள நாட்டியம் ஆகியவற்றிலும் கரகம், காவடி ஆகிய ஆட்டங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ளனர். பள்ளியில் கொண்டாடப் பெறும் விழாக்களில் எல்லாம் இவர்களது நாட்டியம் காட்டாயம் நடைபெறும்.

அரசினர் தோட்டத்தில் உள்ள நேரு பாலர் பவனத்தில்தான் துவக்கத்தில் நாட்டியப் பயிற்சி பெற்றனர். வானொலி சிறுவர் சோலை நிகழ்ச்சிகளில் பலமுறை பங்கு பெற்றிருக்கிறார்கள்.

—தமிழ்ப்பித்தன்

## கடிதம் எழுதுவது எப்படி?

கடிதங்கள் இதய தாகத்தை எழுப்புபவை; இதய தாகத்தைத் தணிப்பவை. இதயங்களைப் பிணைப்பவை; ஒருவரை இன்னொருவர் எவ்வளவு நேசிக்கிறார், எவ்வளவு மதிக்கிறார் என்பதைக் கடிதங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம். தங்கள் லட்சியக் கனவுகளை இலக்கியங்களாகப் படைக்கிறவர்களைப் போலவே, சிலபேர் தங்களது உள்ளக் கிடக்கையினைக் கடிதங்களில் கொட்டுகிறார்கள்.



கடிதங்கள் எழுதுவதற்குப் பொறுமை, ஆர்வம், சிந்தனை இவையெல்லாம் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, நாம் யாருக்கு எழுதுகிறோமோ அவரைப் பற்றிப் பாசமும் பரிவும் அன்பும் நம் உள்ளத்தில் பொங்கிப் பாய வேண்டும். அப்பொழுது தான் அந்தக் கடிதம், பெறுகிறவரின் மனத்தில் பதியும், பலநாள் அதில் வதியும். பேரறிஞர்கள் இப்படி எழுதிய கடிதங்கள் இலக்கியக் கருவூலங்கள் ஆகியுள்ளன. கணவன்-மனைவி எழுதிக்கொள்ளும் கடிதங்கள் குடும்ப வாழ்க்கையைத் தழைக்கச் செய்யும். குழந்தைகளுக்கு பெற்றோர்கள் எழுதும் கடிதங்கள் அவர்களை நல்வழிப்படுத்த உதவும். ஆர்வத்தோடும் உள்ளார்ந்த அன்போடும் கடிதங்களை எழுத வேண்டும். அப்பொழுதுதான் அவற்றால் பயன் இருக்கும். "வந்து சேர்ந்தேன். இரவு போரடித்தது. சினிமாவுக்குப் போனேன்," என்று எழுதும் கடிதங்கள் தகவல் தெரிவிக்க உதவுமே தவிர, நெஞ்சில் நிலைக்காது, உள்ளத்தில் தங்காது.

—ராஜமுருகன்


## புலி வருகிறது!

ஆனைமலையில் செய்தியாளர்கள் தங்க விருந்த ஒரு குடிலின் முகப்பில் ஒரு புலி நின்றுகொண்டிருந்தது. அதுதான் இது!

மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று பார்க்கிறோம். "தயவு செய்து என்னைத் தொடாமல் பார்க்கவும்" என்ற வாசகத்தைப் படித்ததும் மூச்சுவிடுகிறோம்.

நாம் பார்த்தது உண்மைப் புலி அல்ல (அதுவும் இந்தப் பக்கம் வருவதுண்டாம்!) பொம்மைப் புலி என்று தெரிந்து கொள்கிறோம். ஆம். ஆனைமலையில் வசித்த இந்தப் பெண்புலி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டதாம். இதன் தோலை அப்படியே பத்திரப்படுத்தி வைத்து, பிறகு மைசூரில் இந்தப் பொம்மைப் புலியை உருவாக்கினார்களாம். உயிருள்ளது போலவே தோற்றமளிக்கிறதல்லவா இது!






## காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை காத்தும்...

# லேப்ராஸ் கோப்பி முறை!

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அறிவித்த புதிய இருபது அம்சத் திட்டத்தின் பதின்மூன்றாவது அம்சம்—'மனப் பூர்வமான விருப்பத்தின் அடிப்படையில், மக்கள் இயக்கமாகக் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுதல்' என்பதாகும்.

அதனை நிறைவேற்றுவதில் மாநில அரசுகளெல்லாம் தீவிரம் காட்டி வருகின்றன. என்றாலும், அவ்வகையில் தமிழக அரசு தனிச் சிறப்போடு விளங்கி வருகிறது.


கருச்சிதைவு செய்துகொள்ளுவவதென்பது, உலகப் பழமை வாய்ந்ததாகும்.

**மற்ற நாடுகளில்....**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே கருச்சிதைவு செய்வோர் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலை கிரேக்கத்தில் இருந்தது. இதிலிருந்து அப்போதே அங்கு கருச்சிதைவு செய்யப்பட்டிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

ஆபத்தான நிலையில், கருச்சிதைவு செய்து கொள்ள அனு

**பி.எல். ராஜேந்திரன் —**



மதிக்கலாம் என்ற வழக்கம் 1800ல் பண்டைய ரோமாபுரியில் இருந்திருக்கிறது.

அதிகக் குழந்தை பெறுவோருக்குப் பரிசுண்டு எனக் கூறப்படும் ரஷ்ய நாட்டிலேயே கூட 1920ல், கருச்சிதைவு சட்டமாக்கப்பட்டிருக்கிறது.


19ஆம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்க நாட்டில் கருச்சிதைவுச் சட்டம் நிறைவேறியிருக்கிறது.

1954ல் சீனத்தில் இச்சட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

1976ல் இங்கிலாந்தும் இதனை சட்டமாக்கியிருக்கிறது.

துருக்கி, ஈரான், ஐக்கிய அரபுக் குடியரசு, லெபனான் போன்ற முஸ்லீம் நாடுகளிலெல்லாம் கூட கருச்சிதைவு சாதாரணமாக்கப்பட்டுள்ளது.

நம் இந்தியப் பெரு நாட்டில் 1971 ஆகஸ்ட்டுத் திங்களில் தான் கருச்சிதைவுச்சட்டம் (Medical Termination of Prognanev Act) உருவாக்கப்பட்டது. 1972 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து இச்சட்டம் அமல்படுத்தப்பட்டது.



பல்வேறு கைமுறை வைத்தியங்களை மேற்கொண்டோ, முறைகேடான வகையிலோ கருச்சிதைவு செய்து கொள்ள முயலுவது கருவுக்கு மட்டுமல்ல, உயிருக்கே ஆபத்தாகி விடுவதும் உண்டு. ஆகவே, இப்போது கருச்சிதைவு சட்டமாக்கப்பட்டு விட்டதால் அதற்கெனப் பயிற்சி பெற்ற மருத்துவர்களை அணுகிக் கருச்சிதைவு செய்துகொள்ளுவது நலன் பயப்பதாகும்.

**கருத்தடைகள்**

பெண்கள் கருத்தடை செய்து கொள்ள 'லூப்' என்கிற கருத்தடை வளையம் பொருத்துமுறை ஒன்று உண்டு. 'லிபிஸ்' 'காப்பர்ட்டி' என்ற இரண்டு வகை அதில் இருக்கிறது. கருத்தடை மாத்திரைகள் (Oral Pills) உட்கொண்டு, கருவுறாமல் பாதுகாத்துக்கொள்ளுவதும் உண்டு.

'பாதுகாப்பான நாட்களில் உடலுறவு' கொள்ளுவது என்ற முறையின் மூலமும் கருவுறுவது தவிர்க்கப்படலாம்.

முன்பெல்லாம், தாய்மார்கள் ''குழந்தை பெற்ற அடியோடு தான் 'டூபெக்டமி' என்ற பெண்களுக்ககான அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியும்; அப்போதுதான் அவ்வகைச் சிகிச்சை தொடர்பான நரம்புகள் எளிதில் கிட்டும் என்று கருதப்பட்டது. மருத்துவத் துறை முன்னேற்றத்தில், இப்போது சாதாரண நிலையிலும் அப்படிச் செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான அறுவைச்சிகிச்சை முறைக்குப் பின்னால் தாய்மார்கள் ஒரு வாரமோ பத்து நாளோ மருத்துவ மனையில் இருக்கவேண்டியிருக்கும்.

அவ்வகைச் சிகிச்சைக்குப் பின்னால் அடிவயிற்றில் தழும்பு தங்கிவிடும் என்பது வேறு.

இந்த இரண்டு காரணங்களுக்காகவே பல தாய்மார்கள் கருத்தடை செய்து கொள்ளத் தயங்கியதுண்டு.

இனி, அவ்வாறெல்லாம்யாரும் அஞ்சத் தேவையில்லை என்ற வகையிலே பெண்களுக்குக் கருத்தடைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முறைதான் 'லேப்ராஸ்கோப்பி(Laparoscopy System) என்பதாகும்.

இந்த வகை நிரந்தரக் கருத்தடை முதன் முதலாக அமெரிக்க நாட்டிலேதான் துவக்கப்பட்டது.

நாளடைவில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிய அம்முறை இந்தியாவில் பம்பாயில் துவங்கியது.

**'' லேப்ராஸ்கோப்பி '' முறை மூலம் எளிதில் கருத்தடை செய்து கொள்ளும் தாய்மார்கள் நான்கே மணிநேரத்தில் நல்லபடி எழுந்து நடமாடலாம். சிகிச்சை செய்யப்படும் இடத்தில் தழும்பே நிற்காது.**

இந்தக் காரணங்களால் -லேப்ராஸ் கோப்பி' முறைமூலம் கருத்தடை செய்து கொள்ள முன் வரும் தாய்மார்கள் எண்ணிக்கை தமிழகத்தில் நாளுக்கு நாள் பெருகிவருவதை நம்மால் காண முடிகிறது.

**சென்னையில் சிகிச்சை**

சென்னை மாநகரில் மட்டும் அரசினர் ராஜா சர். ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை,(ஆர்.எஸ்.ஆர்.எம்) தாய் சேய் நல மருத்துவமனை, கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் 'லேப்ராஸ்-கோப்பி' முறைக்கருத்தடை செய்யப்படுகிறது.

அந்தச் சிகிச்சை முறையினை நேரில் கண்டறிவதற்கென அரசினர் ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனைக்குச் (ஆர்.எஸ்.ஆர்.எம்.) சென்றோம். 1980ஆம் ஆண்டு முதலே இந்த மருத்துவமனையில் 'லேப்ராஸ் கோப்பி' முறையில் கருத்தடைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

அதற்காகக் காத்திருந்த தாய்மார்கள் ஒவ்வொருவரின் கையிலும் அவர்கள் அந்தச் சிகிச்சைக்கேற்ற உடல்வாகு உள்ளவர்கள் தானா என்று பரிசோதித்து விவரம் எழுதப்பட்ட பரிசோதனை அட்டை இருந்தது.

ஒவ்வொருவராக ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைக்கப்பட்டார்கள். அடுத்த பத்து நிமிஷத்திற்குள்ளேயே அவர்கள் வெளியே கொண்டுவரப்படுவதைப் பார்த்தபோது நமக்கு வியப்பாக இருந்தது.

''இந்த முறைச் சிகிச்சை செய்ய ஒருவருக்கு எவ்வளவு நேரம்பிடிக்கிறது?'' என்று டாக்

டர் ராஜேஸ்வரி அவர்களை விசாரித்தோம்.

''ஐந்து நிமிடம்கூட ஆகாது!'' என்று கூறி நம் வியப்பை இன்னும் அதிகமாக்கினார் அவர். டாக்டரின் அனுமதியோடும், பாதுகாப்பான உடுப்புகளோடும் நாமும் அறுவைச் சிகிச்சை அறைக்குள் செல்லுகிறோம்.

**சிகிச்சை முறை**

அறுவைச்சிகிச்சைக்கானதனிப் படுக்கையில் ஒரு பெண்மணி கிடத்தப்பட்டிருக்கிறார். அவர் உடம்பில் சிகிச்சைக்குரிய பகுதி மட்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

''இவர்களுக்குக் குளோரபாம் தருவதுண்டா?'' என்கிறோம்.

''இல்லை; அந்தப் பகுதியில் மட்டும் மரத்துப்போவதற்காக ஊசி போடுவோம்'' என்கிறார் டாக்டர்.

சிகிச்சை தொடங்குகிறது.

அடிவயிற்றில், பெண்ணுறுப்புக்குச் சற்று மேலே துவாரமிட்டு' லேப்ராஸ்கோப்பிசிஸ்டத்தின் மூலம் உள்ளே அளவோடு கார்பன்-டை-ஆக்ஸைடு செலுத்தப்படுகிறது. அதே கருவி மூலமே, உடலுறவின் பின் உயிரணுக்கள் செல்லும் முக்கிய நரம்பு (Felobiyan Tube) 'லேப்ராஸ்கோப்பி' கருவியின்வெளியே தலைப்பில் உள்ள 'லென்ஸ்' மூலம் பார்த்தறியப்பட்டு எடுத்து மடிக்கப்படுகிறது. பிறகு அதே கருவியின் முனையில் உள்ள வளையம் ஒன்று (Felobering) அந்த மடிப்பைச் சேர்த்துக் கண்ணி மைக்கும் நேரத்தில் போடப்பட்டுவிடுகிறது. அவ்வளவுதான் சிகிச்சை!

எல்லாமே, அவர்கள் சொன்னதுபோல மூன்று நான்கு நிமிடத்தில் முடிந்துவிடுகிறது.

இதுபோல் வளையமிட்டு விடுவதால், உயிரணுக்கள் கருப்பையைச் சென்று சேர முடியாது. ஆகவே கருத்தறிக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

''இப்படிச் சிகிச்சை செய்துகொண்ட சில காலத்திற்குப் பிறகு ஒரு பெண்மணி குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பினால் என்ன செய்வது?'' டாக்டர் ராஜேஸ்வரி அவர்களிடம் நாம் கேட்கிறோம்.

''அப்படி விரும்பினால் அந்த 'ரிங்'கை இந்த வகையில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் மூலம் எடுத்துவிட்டுக் கொள்ளலாம்'' என்கிறார் அவர்.

**''அந்த வளையம் உள்ளே இருப்பதால் பொருத்திக் கொள்ளும் பெண்ணுக்கோ, அவர் கணவருக்கோ ஏதாவது துன்பம் உண்டாக வழியுண்டா?''**

**''யாருக்கும் எந்தத் துன்பமும் உண்டாகாது!''**

''மாதவிலக்கில் ( Menses ) ஏதேனும்...''

''மாதவிலக்கு எப்போதும் போல் இருக்கும் இன்னும் சொல்லப்போனால், லேப்ராஸ்கோப்பி சிகிச்சை பண்ணிக் கொண்ட பெண்ணை, அதற்கடுத்த மாதவிலக்கு நேரத்தில் மீண்டும் மருத்துவமனைக்கு வரச்சொல்லிவேறு எதுவும் சங்கடம் ஏற்பட்டிருக்கிறதா என்று பரிசோதிக்கிறோம். ஆனால் அப்படி எந்தக் கஷ்டமும் யாருக்கும் ஏற்பட்டதில்லை.''

**துன்பம் உண்டா?**

''சிகிச்சை முடிந்த அடியோடு இரத்தப் பெருக்கு போன்ற துன்பங்களுக்கு யாராவது ஆளானது துண்டா?''

''இதுவரை இல்லை. சிகிச்சை முடிந்த இரண்டு மூன்று மணி நேரத்திலேயே அவர்கள் வீட்டுக்குச் செல்லலாம் என்றாலும், நீங்கள் கேட்பது போல எதுவும் ஆகிறதா என்று பார்க்கத் தான் ஒவ்வொருவரையும் நாற்பத்தெட்டு மணிநேரம் இங்கேயே வைத்துப் பார்த்து பரிசோதித்து விட்டுவீட்டுக்கு அனுப்புகிறோம்.

'லேப்ராஸ்கோப்பி' சிகிச்சை செய்யப்படும் இடத்தில் பெரும்பாலும் தையல் போடப்படுவது இல்லை. சாதாரணக் காயம் போலவே அந்தப் புண் வெறும் பிளாஸ்திரி போட்டாலே ஆறி விடுகிறது. சிலர் உடல்வாகுக்கு அதற்கான அவசியம் ஏற்பட்டாலும் கூட ஒரே ஒரு தையல்தான் போடப்படுகிறது. ஆறாவது நாளே அதைப் பிரித்து விட முடியும்.

லேப்ராஸ்கோப்பி சிகிச்சை செய்து கொள்ளுகிறவர்கள், உடலுறவைச் சில நாட்கள் தள்ளிப் போடுவதைத் தவிர மற்றெல்லா வேலைகளையும் எவ்வித அச்சமும் இல்லாமல் செய்யலாம். 'லேப்ராஸ்கோப்பி' கருத்தடை செய்து கொள்ள முன்வரும் தாய்மார்களுக்கு அரசு மூலம் ரூ.130-அன்பளிப்பு அளிக்கப்படுகிறது.''

1982ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனையில் 440 தாய்மார்கள் 'லேப்ராஸ்கோப்பி' சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். பிப்ரவரியில் 584 பேர்களும், மார்ச்சில் 1461பேர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆண்டில், கடந்த செப்டம்பர் மாதம் முடிய அங்கே இந்த சிகிச்சை செய்துகொண்ட மொத்தப் பெண்மணிகளின் எண்ணிக்கை மட்டும் 3480 ஆகும்.

முன்பெல்லாம் இந்தச் சிகிச்சைக்கான பயிற்சிபெற மருத்துவர்கள் பம்பாய்க்குப் போய்வந்து கொண்டிருந்தார்கள். இப்போதோ சென்னை மாநகரிலேயே இதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கிராமப்புறத் தாய்மார்களுக்கு மாத்திரைகள் உட்கொள்ளுவதின் மூலம் கருத்தடை செய்து கொள்ளும் முறையும் மைய அரசாலும் மாநில அரசாலும் நல்ல அளவில் பரப்பப்பட்டு வருகிறது.**

வேறுமுறை அறுவைச் சிகிச்சை மூலம் கருத்தடை செய்து கொண்டால் பல்வேறு பணிகளில் ஈடுபடும் நம்மால் ஒருவார காலம் படுக்கையில் கிடக்க முடியாதே என்ற வருத்தம் கிராமாந்தரப் பெண்களுக்கு இருந்தது. இப்போதோ இந்தலேப்ராஸ்கோப்பி முறைமூலம் முதல் நாள் சிகிச்சை செய்துகொண்டு மறுநாள் வெளியே வந்து வேலை பார்க்கலாம் என்ற தைரியம் கிராமப்புறத் தாய்மார்களுக்கெல்லாம் வந்திருக்கிறது. ஆகவே அவர்களும் பெருமளவில் இவ்வகைச் சிகிச்சைக்கு முன் வருகிறார்கள்.

'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?' —என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் வாக்கை மெய்ப்பிக்கும் அரும்பணி 'லேப்ராஸ் கோப்பி' முறை மூலம் மிக எளிதில் நாடெங்கும் நிறைவேற்றப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்று கிராமத்துப் பஞ்சாயத்து கூடிற்று. பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்ட அத்தனைபேரும் வந்திருந்தார்கள். பொன்னன் தலை முண்டாசை உதறி பவ்யமாக இடுப்பில் கட்டிக் கொண்டு ஒரு இடத்தில் நிற்காமல் உலவினான். அவன் மனக்கொதிப்பு முழுதும் அந்த உலாவலில் தெரிந்தது. பஞ்சாயத்து கூடுவதே அவனுக்காகத்தான். அவனின் ஒரே மகள் மங்கம்மா விஷயமாகத்தான். தன் மகள் இந்த அளவிற்குத் துணிவாள் என்று பொன்னனே நினைக்கவில்லை. பதினெட்டு வருஷமாக ஆத்தா இல்லாத குறைகூடத் தெரியாமல் செல்லமாக வளர்த்த தன்னைவிட எங்கிருந்தோ பட்டணத்திலிருந்து வந்த அந்த வாத்தியார் பயல் பெரிதாகப் போய்விட்டதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்பா அம்மா இல்லாத அனாதைப் பயல், பிழைப்பதற்கு இந்த ஊரைத் தேடி வந்த பயல். ஒழுங்காக பிழைக்கிற வழியைப் பார்த்துக் கொண்டு போகாமல் பக்கத்து ஊரில் ஓடுகிற பயாஸ்கோப் படம் மாதிரி காதல் பண்ணுகிறானாம் காதல். அதுக்குத் தன் பெண் மங்கம்மாதானா அகப்பட்டாள்...? உயர் சாதிப் பயலுக்கு இந்த ஆதித்திராவிடப் பொண்தானா பலி. இந்த மாதிரி எத்தனைப் பேரைப் பார்க்கலை. காதல் கத்திரிக்காய்னு உளறி கல்யாணம்னு எதையோ பண்ணிக்கிட்டுஆறே மாசத்துக்கப்புறம் சொல்லாமற் கொள்ளாமல் கம்பி நீட்டி விடுவான்கள். அப்புறம் இந்த அப்பாவிப் பொண்ணுதான் தவிக்கும். கையில் காலணாக் காசுகூட இல்லாமல் நிக்கும். திரும்பவும் வயக்காட்டு வேலை கிடைச்சாத்தான் உண்டு. அதுக்குள்ளாற வயிற்றுல வேற சுமை சேர்ந்து போயிடும்....

இந்த மாதிரி எத்தனைக் கண்றாவிகளை அவன் பார்க்கவில்லை. அந்த நிலைமைக்குத் தன் மகள் போவதை அவன் ஒருக்காலும் அனுமதிக்கமாட்டான். அவனுடைய நோக்கமெல்லாம் இந்தக் கல்யாணத்தை நிறுத்துவது. இல்லாவிட்டால் பெண் பெயரில் ஒரு ஆயிரம் ரூபாயாவது இந்தப் பயலைப் போடச் சொல்வது. பயல் ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவான். பேசாமல் பட்டணத்தைப் பார்க்கப் போய்ச் சேருவான்.

அந்தப் பயலைச் சொல்லியும் தப்பில்லை. இந்தப் பெண்ணுக்கு புத்தி பிசகிப் போச்சு. ஒழுங்கா நடவு நடவும், அறுப்பறுக்கவும் போய்கிட்டிருந்தது. அந்த வழியா பள்ளிக்கூடத்துக்குப்போன இவனைப் பார்த்து ஏன் சிரிக்கனும். கேட்டபோது அவன்தான் முதல்லே சிரிச்சான்னு சொல்லிச்சு. அவன் சிரிச்சதாகவே வச்சுக்குவம். இது ஏன் பதிலுக்கு சிரிச்சுது.? சிரிச்சதோட நின்னுச்சா...? அப்புறம் பேச்சு வேற.... என்னவெல்லாம் பேசிக்கிட்டாங்க... எல்லாம் கோபாலு சொல்லித்தான் இவனுக்குத் தெரியும்.

அவன் இவளோட பேரைக் கேட்டானாம். இவள் தலையைக் குனிஞ்சு வெட்கப்பட்டு சிரிச்சுக்கிட்டே மெதுவா ''மங்கா...''னிச்சாம்.

அவன்: நாளைக்கும் இதே நேரத்துக்கு இங்க இருப்பியா....?

இவள்: ''அறுப்பு இருந்துச்சுன்னா இருப்பேன்''.

அவன்: ''இல்லாட்டி போனால் என்ன...? சும்மா வாயேன்...?''



# அவன் கண்ட கனவு

## இந்துமதி

இவள்: ''ஐயயோ, சும்மா வந்தால் எங்கப்பன் திட்டும்''

அவன்: ''சரி... இங்க வரவேணாம். என் வீடு தெரியுமில்லே. பிள்ளையார் கோவில்லேருந்து மூணாவது வீடு. அங்க வாயேன்...''

இவள்: ''ஐயயோ.. அது நாயக்கமார் சந்து இல்லே..? அங்கெல்லாம் வந்தால் வீட்டை விட்டுப் பத்து கஜதூரம் தள்ளி மரத்தடியில்தான் எங்களை நிக்க வைப்பாங்க...''

அவன்: ''பத்து கஜதூரம் தள்ளி நிக்கணுமா... ? ஏன்..?

இவள்: என்னங்க இது புரியாத மாதிரி கேட்கிறீங்க. எங்களை எப்படிங்க கிட்டே சேர்ப்பாங்க. நாங்க ஆதித்திராவிடங்க இல்லே...?''

அவன்: மண்ணாங்கட்டி! (என்றான் சீற்றத்துடன்) பாரதியார் என்னசொல்லியிருக்காரு தெரியுமா? 'ஜாதிகள் இல்லையடி பாப்பான்னு' சொல்லியிருக்காரு....

இவள்: அது யாருங்க பாரதி யாரு.....?

இவன்: (மென்மையாய் சிரித்தபடி).....ம்.....? ஒங்க தாத்தா..

இப்படித்தான் அவர்களின் காதல் துளிர்விட்டு பின்னர் ஒவ்வொரு நாளும் வளர்ந்து இப்போது பூதாகாரமாகி பொன்னனை மருட்டிற்று. விஷயம் தெரிந்ததும் அவன் மகளைக் கூப்பிட்டு கண்டித்தான். மிரட்டிப் பார்த்தான். எதற்கும் அவள் அடங்காமற் போகவே பொன்னன் தனசேகரைப் போய் மிரட்டினான். தனசேகரன் அதற்கு, ''உன் பொன்னை நான் ரொம்ப நேசிக்கிறேன். கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கிறேன்..'' என்றதும் பொன்னன் இன்னும் ஆத்திரப்பட்டான்.

''எங்க சாதி சனம்னாலும் நாளைக்கு ஒரு தப்பு நடந்துச்சுன்னா அட்டிக் கேட்கலாம். நீ எங்களைவிட உசந்த சாதி பட்டணத்தாரு. படிச்சவன். நாளைக்கே எம் பொண்ணு மேலே இருக்கிற மோகம் தீர்ந்து போனதும் விட்டுட்டுப் போயிட்டியானா நான் என்ன செய்வேன். அதனால உனக்கு நான் என் பெண்ணைக் கட்டித் தர மாட்டேன்''.. என்றதும் தனசேகரனும் கோபப்பட்டான்.



நீ என்ன கட்டித் தாறது நானே கட்டிக்கிறேன். போ..'' என்று சொல்லி விட்டுப் போனதும்தான் பொன்னன் பஞ்சாயத்தைக் கூட்ட ஏற்பாடு பண்ணினான்.

பஞ்சாயத்து கூடிற்று. தனித்தனியாக மங்கம்மா, தனசேகரன், பொன்னன் மூவரும் விசாரிக்கப்பட்டார்கள். மங்கம்மாவும் தனசேகரனும் அவர்கள் முடிவில் மிகத் தீவிரமாகவும், பிடிவாதமாகவும் இருக்கவே, பஞ்சாயத்தார் பொன்னனை விட்டுக் கொடுக்கும்படி வேண்டினர்.

கடைசியில் பொன்னன் ஒரு நிபந்தனையின் பேரில் தன் பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தான்.

''இதப் பாருங்க. எம் பொண்ணு பேர்ல ஒரு ஆயிரம் ரூபா வச்சிட்டு அவனைக் கல்யாணம் கட்டிக்கிடச் சொல்லுங்க. நான் வேணாங்கலே..'' என்றான்.

''ஆயிரம் ரூபாயா.....?'' என்று அசந்து போனான் தனசேகரன்.

''அவ்வளவு பணத்துக்கு நான் எங்கேங்க போவேன்....? எனக்கு யாரு இருக்காங்க கடன் கொடுக்க..?'' என்று பரிதாபமாகப் பார்த்தான். ஆனால் பொன்னன் அதில் மிகப் பிடிவாதமானான். ''இதப்பாரு பணம் வைக்க முடியும்னால் என் பொண்ணு உனக்கு. இல்லாட்டி போனால் அவளை மறக்கற வழியைப் பாரு''.....

அதையே பஞ்சாயத்தாரும் சொல்ல பஞ்சாயத்து கலைந்தது. பஞ்சாயத்தின் முடிவை மீறி எதுவும் செய்ய இயலாத நிலைமையில் மங்கம்மாவைப் பார்த்து பேசக் கூட முடியாமல் தவித்தான் தனசேகரன். இதற்கு என்ன வழி என்று குழம்பின நிலைமையில் தான் தமிழக அரசுப் பத்திரிகையான 'தமிழரசு' அவன் கையில் கிடைத்தது. அதைப் புரட்டினவன் கண்ணில் கலப்புத் திருமணம் பற்றின அந்தக் கட்டுரை கண்ணில் பட அதை மிகக் கவனமாகப் படித்தான்.

'ஆதித்திராவிடர்களில் யார் கலப்புத் திருமணம் செய்து கொண்டாலும் அரசாங்கம் அவர்கள் பெயரில் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கி ஒன்றில் ரூ. 3,000 போடும். பின் திருமணத்தை நடத்தி அன்று ரூ 300ம் வேறு வழங்கும்.

அதை எடுத்துக்கொண்டு தனசேகரன் நேராகப் பொன்னனிடம் ஓடினான். அவனுக்குப் புரிகிற வகையில் செய்தியைப் படித்து விளக்கினான்.

''நீ ஓராயிரம்தானே உன் பொண்ணுமேல போடணும்னு சொன்னே. இப்போ அரசாங்கமே இந்த மாதிரி கல்யாணங்களை ஆதரிச்சு மூவாயிரம் ரூபா போடுது. முன்னூறுரூபா கையில் தருது. இப்ப என்ன சொல்ற...? இனிமேலயாவது கல்யாணத்துக்கு சம்மதிப்பியா மாட்டியா...?''

மூவாயிரமா.... பொன்னன் வாயைப் பிளந்தான். தனசேகரனின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

''கல்யாணத்துக்கப்புறம் என்னையும் ஒங்க கூடவே வச்சுக்க மாப்பிள்ளை. பொறக்கப் போற பிள்ளையை மடி மேலே போட்டு நான் கவனிச்சுக்கிடறேன். நீ மங்கா கூட சந்தோஷமா பயாஸ்கோப்பு பாக்கப் போவலாம். என்ன மாப்பிள்ளை....?''

அடுத்த மாதம் முதலமைச்சரின் முன்னால் நடந்த அந்த சீர்திருத்த கலப்புத் திருமணத்தில் மனப்பூர்வமாக தமிழக அரசையும், அதனை ஆளுகின்ற அரசரையும் வாழ்த்தின தனசேகரன் தனக்கு பிறக்கப்போகிற முதல் குழந்தை ஆணானால் அதற்கு முதலமைச்சரின் பெயரையே வைப்பது என்று முடிவு செய்துஅதை மங்கம்மா விடம் சொல்ல,

அவள் குறும்புத்தனமாகக் கேட்டாள்.

''ஏங்க பொண்ணா பொறந்திடுச்சுன்னா என்ன பேரு வப்பீங்க....?''

ஒரு வினாடி யோசித்து பின் அவன் ஒரு புன்சிரிப்புடன் பதிலளித்தான்.

''....ம்....? தமிழரசின்னு வைப்பேன்....''.

## மூங்கில் குழாய்கள்

குடி தண்ணீரை நாம் இரும்புக் குழாய் அல்லது பிளாஸ்டிக் குழாய் மூலம் பெறுகிறோம் அல்லவா? ஆனால் இப்போது மூங்கில் குழாய் மூலம் தண்ணீர் பெறலாம் எனக் கண்டறியப் பட்டுள்ளது.

அதன்படி, மூங்கில் குழாய்களைக் குடிநீர் வசதியளிக்க உபயோகப்படுத்தலாம். உலோகம் மற்றும் பிளாஸ்டிக் குழாய்களுக்கு மாற்றாக இக்குழாயை உபயோகிக்கலாம். பிளாஸ்டிக் குழாயின் விலையைவிட இதன் விலை குறைவானதல்ல. இருந்த போதிலும் குறைந்த முதலீட்டில், இலகுவான முறையில் இக் குழாய்களைப் பொருத்தி உள்ளூரிலேயே பராமரிக்கலாம்.

ஜப்பானிலும், பிலிப்பைன்சிலும் உள்ள பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் மூங்கில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இந்தோனிஷியாவில் உள்ள ஜாவாவில் 24 கிராமங்களுககு 90 கிலோ மீட்டர் தூரத்திற்கு அண்மையில் மூங்கில் குழாய்கள் பொருத்தப்பட்டு, 60,000 மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. தன்சானியாவில் அதிக அளவில் மூங்கில் குழாய்கள் உபயோகிக்கத் துவங்கியுள்ளனர். 1.5 அங்குல விட்டமுள்ள மூங்கில் குழாய் மூலம் 500 பேர்கள் உள்ள கிராமத்திற்குத் தண்ணீர் வழங்கலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிக அழுத்தத்தைத் தாங்கக் கூடிய வலுவான சில வகை மூங்கில்களும் இருக்கின்றன.

மூங்கிலைச் சில பூச்சிகள் தாக்குகின்றன. சூரிய வெப்பத்தில் மூங்கில் இருந்தால் அதில் உடனடியாகத் தெறிப்புகள் உண்டாகும். இதனால் மூங்கிலின் ஆயுட் காலம் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் தான் 15 ஆண்டுகளுக்கு மேல் மூங்கில் உயயோகமாகும்படி இருப்பதற்கு விஞ்ஞானிகள் சில வழிமுறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

# மனிதாபிமானி ஜவகர்லால் நேரு



## எஸ்.எம்.மருதம்

"வெட்கம்! வெட்கம்!!'' என்ற விண்முட்டும்குரல் ஒலிக்கவே, வெகுளி கொண்ட மேதிலால் நேரு, ''யார் அப்படிக் குரல் எழுப்பியது? தைரியமிருந்தால் மேடைக்கு வரலாமே'' என்று அறை கூவல் விடுத்தார்.

*1914*-ஆம் ஆண்டு ஒருநாள் மாபெரும் பொதுக் கூட்டத்தில், இந்தச் சூடான நிகழ்ச்சி நடைபெற்றது. அன்றைய ஐக்கிய மாகாணத் தலைநகராகத் திகழ்ந்த லட்சுமணபுரியில் பரந்து விரிந்த திடலில் நடந்து கொண்டிருந்த மாபெரும் மக்கள் கூட்டத்தில் செல்வாக்குமிக்க சிங்கமென விளங்கிய பண்டித மோதிலால் நேரு பேசிக் கொண்டிருந்தார்.

'ஹோம்ரூல்' என்று அழைக்கப்பட்ட சுயாட்சிக் கோரிக்கை போர் முழக்கம் செய்ததற்காக விடுதலை வீராங்கனை அன்னிபெசன்ட் அம்மையாரை காராக்கிரகத்தின் கதவுகளுக் கப்பால் ஆங்கில ஆட்சியாளர் அடைத்து வைத்ததை மோதிலால், அக்கூட்டத்தில் கடுமையாகச்சாடி, கரவொலியைப் பெற்றார். ஏகாதிபத்திய ஆட்சியின் இழிசெயல் இது என்றும் முழங்கினார்.

இருப்பினும் பொங்கிஎழுந்த கூட்டத்தின் கூட்டைக்குறைக்கும் எண்ணத்தில்,

''இருந்தாலும் நம்விதியைத் தீர்மானிப்பவர்கள் அரசாங்கத்தார். எனவே அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, பொறுத்திருந்து பார்ப்பதே நல்லது'' என்றும் மோதிலால் பேசினார்

அப்போதுதான் கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து ''வெட்கம் வெட்கம்'' என்ற அந்த ஆவேசக்குரல் எழுந்தது. அந்தக் குரலை எழுப்பியது வேறு யாருமில்லை. பண்டித மோதிலால் நேருவின் ஒரே ஒரு அருமை மகன் பண்டித ஜவகர்லால் நேருதான். துடிக்கும் இளமை தோள் தட்டி நின்றது எழுந்த சீற்றம் எவரெஸ்டில் ஏறிச்சென்றது!

''பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிங்கத்தின் பிடரியை பிடித்து உருட்டிப் புரட்டி, பின்னங்கால்கள் தெறிக்க ஓடச் செய்ய வேண்டுமே தவிர, தயவை எதிர்பார்த்து தாம் பூலம் தூக்கலாமா'' என்று கருதிய இளைஞர் நேரு அப்படி ஆவேசக்குரல் எழுப்பினார்.

சொத்து சுகங்களை சுக போக வாழ்க்கைதனை, தூக்கி எறிந்துவிட்டு, சுதந்திரப் போர்க்களத்தில் குடும்பத்தை இணைத்துக் குதித்த தன் தந்தை கோழையாக இருக்க முடியாது. ஆனாலும் இப்படி இறங்கிப் பேசலாமா? என்று எண்ணிய ஜவகர்லால், தந்தையின் சவாலை ஏற்று மேடைக்குச் சென்று அவரை அவமானப்படுத்த விரும்பவில்லை. கூச்சலிட்டவர் யார்? என்று தெரியாமல் கூட்டத்தில் மறைந்து கொண்டார்.

பின்பு ஒருநாள், ''அப்பா லட்சுமணபுரிக் கூட்டத்தில் குரல் எழுப்பியது யார் தெரியுமா? நானேதான். நீங்கள் சவால்விட்டவுடன் பயந்து கொண்டு மேடைக்கு வராமல் இல்லை. தந்தை என்பதாலும் அல்ல. ஒரு மூத்த மனிதரை, தலைவரை மக்கள் மன்றத்தில் வாதிட்டு அவமானப்படுத்த விரும்பவில்லை'' என்றாராம். மோதிலால் இதற்களித்த பதில் ஒரு புன்னகைதான்.

ஜவகர்லால் நேரு எப்போதுமே ஒரு மனிதாபிமானி. மதவாத மவுடிகங்கள் மடமைக் கருத்துக்கள், மனித அறிவை மழுங்கடிக்கும் கற்பனைக் கதைகள், அவருக்கு கசப்பூட்டும எட்டிக்காய், அறிவார்ந்த சிந்தனைச் செயல்கள் அவருக்கு இனிக்கும் கற்கண்டுப் பலாச்சுளைகள்! எனவே அவர் சிந்தனை செயல் அனைத்தும் மனிதர்களையே சுற்றிச் சுழன்றது.

''தலைமுறை தலைமுறையாக நடந்து வரும் பழக்கங்கள் என்பதற்காக எதையும் நம்பிவிடாதே'' என்ற புத்தரின் கருத்தே நேருவின் கருத்தாகும். எனவேதான்,


''போதிமரத்தடி புத்தன்
போய்விட்டான் என்றிருந்
தோம் அவன்
பாதி வழி சென்ற பின்னே
பண்டிதராய்த் திரும்பி விட்
டான்''

என்று நமது அரசவைக் கவிஞர் பாடினார் போலும்!

''மடமைக் கருத்துகளில் நம்பிக்கை கொண்டு, இந்திய நாட்டின் பெரும்பான்மை மக்கள் எவ்வளவு காலம் அடிமைப்பட்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணுந்தொறும் தனக்கு வியப்பாக இருப்பதாகவும், அறிவார்ந்த மனித செயல்களுக்கு மதங்கள் முட்டுக் கட்டைகளாக இருப்பதால் எந்த மதமும் தன்னை ஈர்க்கவில்லை என்றும் ''டிஸ்கவரி ஆஃப் இந்தியா'' என்ற நூலில் அவர் குறிப்பிட்டிருப்பது இதற்குச் சான்றாகும்.

லண்டனிலிருந்து படிப்பை முடித்துக் கொண்டு இந்தியா

திரும்பி அரசியலில் நேரு அடி எடுத்து வைத்த நேரம், அலகாபாத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் குடிநீர், பற்றாக்குறை போன்ற பல்வேறு துயரங்களால் அவதிப்பட்டதை அறிந்தார். தன்னந்தனியாக அவர் கொதிக்கும் வெயிலில் தலையில் துண்டைப் போட்டாவது வயல் வரப்புகளில் நடந்து கிராமப்புறங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டு, குறித்துக் கொண்டு வருவார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வற்புறுத்தி இந்தக் குறைகளை நீக்கச் சொல்வார்.



மனிதாபிமான செயல் தானே இது.

*1932*-ஆம் ஆண்டு பிகாரில் பெரும் பூகம்பம் ஏற்பட்டு, பெரும் பாதிப்பு ஏற்பட்டது. உடனே தனது பணிகளை ரத்து செய்து விட்டு, அங்கு விரைந்தார். மாங்கீர் நகரத்தில் இடிபாடுகளை அகற்றும் பணியில் அவரும் ஈடுபட்டார். மண்வெட்டியை எடுத்து அவர் பள்ளங்களை வெட்டி இடிபாடுகளை எடுத்து சுமந்து எறிவதைப் பார்த்த ஆயிரமாயிரம் தொண்டர்கள் ஆர்வமாக நிவாரணப் பணியில் குதித்தனர். 15 நாட்கள் அங்கேயே தங்கி இருந்து பணி செய்தார்.



*1939*-ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிற்கு ஓர் இந்தியக் குடிமகன் என்ற முறையில் நேரு சென்றிருந்தபோது, அங்கு உள்நாட்டுக் கலவரம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் போரில் அந்நாட்டு மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். இந்தியா வந்த பின், அப்போது அவர் எந்த அரசுப் பதவியில் இல்லாதவராக இருந்தாலும் சொந்த முயற்சியில் பொருள்திரட்டி ஒருகப்பல் நிறைய உணவுப் பொருளை ஸ்பெயின் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். நாட்டின் எல்லைகளையெல்லாம் கடந்து அவரது மனிதாபிமானச் செயல் கடல் கடந்து உதவச் சென்றது. அதே 1939-ஆம் ஆண்டு நேரு செக்கோஸ்லோவிக்யா சென்றிருந்தபோது, இத்தாலிய அதிபர் முசோலினி நேருவை தன்வீட்டிற்கு அழைத்தார். ஆனால் மனித இன சுதந்திரத்திற்கே சவால்விட முனைந்திருந்த பாஸிஸ்டு முசோலினியை நேரு பார்க்க மறுத்துவிட்டார். பின் அவருடைய விமானம் ரோம் நகரில் இறங்கியபோது கூட முசோலினி அவரைச் சந்திக்க செய்த முயற்சி தோல்வியுற்றது.



அதைபோல் அவரை ஜெர்மன் நாட்டிற்கு வந்து போகும்படியும் அழைத்தனர். இட்லரின் நாஜிசபோக்கையும் விரும்பாத நேரு, அந்த அழைப்பையும் புறக்கணித்தார். ஏகாதிபத்தியமண்ணாசையால் மக்களைக் கொன்று குவிக்கும் போர் வெறி படைத்த இட்லரையும், முசோலினியையும் அவர் சந்திக்க மறுத்ததும் அவருடைய மனிதாபிமான அடிப்படையில்தான்.

லட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் பேரியக்க மாநாட்டிற்கு நேரு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு நடந்த மாநாட்டிலும் அவரே தலைவராக இருந்தார் அடுத்து பெய்ஸ்பூரில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்கும் நேருவையே தலைமை ஏற்கச் செய்யும் ஏற்பாடுகள் நடைபெற்றன.

இச்சமயம் கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'மாடர்ன் ரிவியூ' பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது.

''இரண்டு தடவைகள் நேருவுக்குக் காங்கிரஸ் தலைமைப் பதவி கிடைத்ததால் அவருக்கு கர்வம் ஏற்பட்டுவிட்டது இனி அவருக்குத் தலைமை பொறுப்பை விட்டுக் கொடுக்கக்கூடாது''.

என்று அந்தக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. கட்டுரை எழுதியவர் பெயர் எதுவும் வெளியிடப்படவில்லை.உடனே காங்கிரஸ் ஊழியர்களும், மக்களும் ஏன் சில தலைவர்களும் கூட ஆத்திரமடைந்து, அந்த பத்திரிக்கைக்குக் கண்டனத் தந்தி அனுப்பினர். எழுதியவர் யார்? என்றும் கேட்டனர். பின்புதான் விவரம் தெரிய வந்தது. அந்தக் கட்டுரையை எழுதியவர் நேருதான் என்று.

தானே தொடர்ந்து தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. சொன்னாலும் கேட்பாரில்லை மற்ற மூத்த தலைவர்கள் சிலருக்கு மனவருத்தம் ஏற்படக் கூடும் என்று கருதி, அந்த மனிதாபிமான அடிப்படையில் நேருவே பெயர் போடாமல் தனக்கே எதிரான அந்தக் கட்டுரையைத்தானே தீட்டினார் என்றால் அவருடைய பெருந்தன்மைதான் என்னே!

*1946*-ஆம் ஆண்டு இந்தியாவின் இடைக்கால மைய அரசின் பிரதமராக நேரு இருந்த போது,'முஸ்லிம் லீக்கின் நேரடி நடவடிக்கை' அறிவிப்பை அடுத்து, வங்கத்திலும், பஞ்சாபிலும் பெரும் கலவரம் வெடித்து அது எதிர் நடவடிக்கையாக பீகாரிலும் பரவியது. பஞ்சாபிலும், பீகாரிலும் கலவரப்பகுதிகளுக்கு நேரு விரைந்தார். கம்பு, அரிவாள், கத்தி ஈட்டி கொண்டு தாக்குதல் நடத்தி பலர் கொல்லப்படும் பகுதிகளிலும் நேரடியாக-கால் நடையாகச் சென்று அமைதி முயற்சியை மேற்கொண்டார். பீகார் மாநிலத்தில் ஒரு இந்து இளைஞன் முஸ்லிம் ஒருவரை வெட்டி வீழ்த்த முயன்றபோது ஓடிச் சென்று கொடுவாளைப் பிடுங்கி, ''என்னைக் கொன்றுவிட்டு என் பிணத்தின்மேல் நின்று அவனைக் கொல்'' என்றார். மனிதாபிமான அடிப்படையில் எழுந்த துணிச்சல் தானே அது?

''இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும். என்ற வாக்குறுதியை நேரு தெளிவாக அறிவித்தற்குக் காரணம், நாட்டின் ஒரு பகுதி மக்கள் மனம் புண்படக்கூடாது என்ற மனித உரிமை உணர்வின் பால் எழுந்ததுதானே?

*1946*-ல் காஷ்மீர் அரசு ஷேக் அப்துல்லாவை கைது செய்து சிறையில் அடைத்த போது ''ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்'' என்ற முழக்கத்துடன் நேரு தடை உத்தரவை மீறி காஷ்மீரில் புகுந்த போது போலீஸ் துப்பாக்கிச் சனியன் அவர் நெற்றியைக் கிழித்ததும்,


*1948*ல் இந்தோனிஷியாவில் டச்சு ஏகாதிபத்திய ஆட்சி கூட்டாட்சி நடத்தி, டாக்டர் சுகர்ணோவையும் முகமது ஹாட்டாவையும் சிறையில் அடைத்து, மக்களை வேட்டையாடிய போது, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் மாநாட்டைக்கூட்டி, கண்டனக் குரல் எழுப்பியதும், நேருவின் மனித உரிமை, மனிதாபிமானச் செயல்கள் என்றுதானே கூற வேண்டும்?'

தென்னாப்பிரிக்க நிறவெறியாட்சியின் உரிமை பறிக்கும் உன்மத்தச் செயலுக்கெதிராக அவர் குரல் கொடுத்தார். காங்கோ நாட்டின் எழுஞாயிறு, இளஞ்சிங்கம் பேட்ரீஸ்லுமும்பா படுகொலை செய்யப்பட்டபோது. ''இது காட்டுமிராண்டித்தனமான, கண்மூடித்தனமான, இதயத்தை உலுக்கும் இழிசெயல்'' என்று கண்டனக் குரல் எழுப்பினார் நேரு.

வியட்நாமில் அமெரிக்க பி.52 விமானங்கள் விஷவாயுக் குண்டு மழை பொழிந்து பயிர்களையும், உயிர்களையும் பாழ் செய்து, பலியாக்கிய போதும், ''நிறுத்துங்கள் இந்த நீசச்செயலை'' என்று முழக்கமிட்டவரும் நமது நேருதான்.

எனவேதான் அவர் மனித குலத்தின் மாபெரும் தலைவராக உலகத் தலைவர்களில் ஒருவராக ஒளிவீசினார்.





aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின்

# புதிய கட்டடத் திறப்பு விழா

நகர்ப்புற மக்களின் தேவை நிறைவேற்றுவதுடன் கிராமப் புறங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க் கைத் தரம் உயர்வதற்கும் அரும்பணி ஆற்றி வருகிறது தமிழ்நாடு பால் உற்பத்தியா ளர்கள் கூட்டுறவு இணையம்.

'நுகர்வோருக்கு நயமான விலை!

உற்பத்தியாளருக்கு நியாய மான விலை! என்னும் நோக் கோடு செயல்பட்டு வரும் இந் நிறுவனம் அரசின் புதிய பால் பெருக்குத் திட்டங்களினால் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் செலவில் மாதவரம் பால் பண்ணையில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியா ளர் இணையத்தின் திறப்பு விழா 1.11.82 திங்கட்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனை வரையும் தமிழ்நாடு பால் உற் பத்தியாளர் கூட்டுறவு இணை யத்தின் நிருவாக இயக்குநர் திரு ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., வரவேற்றார். அவர் தமது வரவேற்புரையில், ஏறத் தாழ ரூ. 20 இலட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் ஓராண்டுக்குள் ளாகவே கட்டி முடிக்கப்பட் டதைத் தெரிவித்தார்.

தேசிய பால்வள வாரியத் தின் தென்மண்டல இயக்குநர் திரு ஏ.பானர்ஜி அவர்கள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

நிருவாக இயக்குநர், நிரு வாக அலுவலக ஊழியர்கள் சார்பில் முதலமைச்சர் குழந்த தைகள் சத்துணவுத் திட்டத் திற்கு ரூ. 30,026க்கு உரிய காசோலையை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச் சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி' அவர்களிடம் அளித்தார்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அரும்பணிகளை விளக்கியும் பாராட்டியும் பெரியார் மாவட்ட பால் உற்பத்தியா ளர்கள் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே.ஏ. செங்கோட்டையன் எம்.எல். ஏ, மதுரை மாவட்ட பால் உற் பத்தியாளர் கூட்டுறவு ஒன்றி யப் பெருந்தலைவர் திரு வெ. பாலகுரு சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டு றவு ஒன்றியப் பெருந்தலை வர் திரு.பி. கண்ணன், தர்ம புரி மாவட்ட பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு வி.ராஜ

கோபால் "சென்னை செங்கல் பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே. பாலாஜி, திரு ஜே.சி.டி. பிரபாகரன் எம்.எல்.ஏ. திரு. குமரி அனந்தன் எம்.எம்.ஏ., ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து, ஆவின் இல்ல முதல் இதழை வேளாண்மைத்துறைச் செயலாளர் செல்வி எம்.எஸ். ரமேஷ் இ.ஆ.ப. வெளியிட்டார். முதல் பிரதியை தேசிய பால் வள வாரியத்தின் அலுவலர் திரு. ஜானகிராமன் பெற்றுக்கொண்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த தலைமைச் செயலாளரும் இணையத்தின் தலைவருமான திரு கா. திரவியம் இ.ஆ.ப. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''இவ்விணையம் வளர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்கிறது. புதிய கட்டடத்தில் 130 பணியாளர்களும் 30 அதிகாரிகளும் பணியாற்றுவார்கள்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பணி மக்களுடன் தொடர்பு கொண்டது. ஒருவரைக் குறைகூற பால்காரர் போல அவர் பேசுகிறார் என்பார்கள். நாம் கனிவுடன் நடந்து கொண்டு வந்தால் மக்கள் 'ஆவின் நிறுவனத்தார் போல பேசவேண்டும்' என்ற புதுமொழியைச் சொல்லுவார்கள்.

நயமான விலையில் பால் நுகருவோருக்குக் கிடைக்க வேண்டும். அதேசமயத்தில் உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இணையம் செயல்பட்டு வருகிறது''

நிருவாக அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''கடந்த இருபது ஆண்டுகளில் மாதவரம் பகுதி மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. முதல் பால் பெருக்கத் திட்டம் 1962ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. ரூ. 16 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் 42 கோடி ரூபாய் செலவில் 1972ல் தொடங்கப்பட்டது. அதிலிருந்து இது வளர்ச்சி அடைந்துள்ளது.

''தமிழ்நாடு முழுவதும் உள்ள 3 லட்சம் விவசாயிகள் வாழ்வுக்கும் உதவிடும் பால் பெருக்கத் திட்டங்களால் இணையம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது."

''நமது ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்டப் பெருந்தலைவர்கள் அனைவரும் பால் பெருக்கத் திட்டத்திற்குப் பெரும்பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் அயராத உழைப்பாலும் முயற்சியாலும் இணையம் மிகுந்த வளர்ச்சி அடைந்து வருகிறது.

"விவசாயப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்கு அரும்பணியாற்றிவரும் இவ்விணையப் நாளும் வளர, நமது அரசு துணை நிற்கும்."

அமைச்சர் அவர்களின் நம்பிக்கையை எதிரொலிப்பதாக நிருவாக அலுவலகப்புதிய கட்டடத்திறப்பு விழா அமைந்திருந்தது.

—மாமூலன்

## கைத்தறி மாளிகையின் புதிய கட்டடம்-சில தகவல்கள்

சென்னை எழும்பூரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரியது ஆகும்.

இது ஆறு மாடிகளைக் கொண்டது. இவற்றில் ஐந்து மாடிகள் கைத்தறித் துணி விற்பனைக்கும், ஆறாவது மாடி கைத்தறிக் கண்காட்சிக்கும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாடியிலும் 4,500 சதுர அடிகள் பரப்பு கொண்ட விற்பனைக் கூடங்கள் நவீன பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மொத்தப் பரப்பளவு 27,000 சதுர அடி.

இந்த விற்பனை நிலையம் முழுவதும் குளிர் சாதன வசதி கொண்டது 'லிப்ட்' ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட மக்களைக் கவரக் கூடியதும், மாநகரத்தின் மிக முக்கியமானதுமான பகுதியில் இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

உட்புறம் நன்கு அலங்கரிக்கப்பட்ட நவீனப் படுத்தப்பட்ட விற்பனை நிலையம் இது.

இந்தச் சிறப்புமிக்க விற்பனை நிலையம் அயல் நாட்டு உல்லாசப் பயணிகளையும் கவரத்தக்கது. 'கோ–ஆப்டெக்ஸி'ன் வரலாற்றில் இது ஒரு பொன்னேடு.

தமிழகத்தில், கூட்டுறவு இயக்கத்தில் கைத்தறி வளர்ச்சிக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். இதன் கட்டடச்செலவும், அலங்காரச் செலவும் சேர்த்து மொத்தம் ரூ. 140 இலட்சமாகும்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட கைத்தறித துணிகளின் அனைத்து ரகங்களும் இந்த விற்பனை நிலையத்தில் இடம் பெற்றிருக்கும். இந்த விற்பனை நியைத்தின் பகுதிகள், கைத்தறித் துணிகள் ரகம் வாரியாக வைத்து விற்பனை செய்வதற்கு வசதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் 1979-80 ஆண்டில் ரூ.36கோடி, 1980-81 ஆண்டில் ரூ. 40 கோடி, 1981-82 ஆண்டில் ரூ. 70 கோடி விற்பனையாகியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடாக ரூ. 100 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டு தீபாவளியின்போது கோ-ஆப்டெக்ஸ் ரூ. 32 கோடிக்கு விற்பனை ஆகியது.

# சிறுதொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு


# அரசு துறைகள்/ நிறுவனங்கள் அளிக்கும் ஆதரவு!



பேருந்துகளுக்குத் தேவையான மின்கலங்கள்

போல்ட் மற்றும் நட் வகைகள். IS 1363/67ன் படி.
M.S. ரிவெட்டுகள்: ISS 2155/1962ன் படி
ஸ்டீல் ரிவெட்டுகள் ISS 226 ISS 1148/1964ன் படி





உயர் மின் அழுத்த டவர்கள்



தீயணைக்கும் கருவி

மருத்துவ சிகிச்சைக்குத் தேவைப்படும் பேண்டேஜ் துணி IS 863/1969—அப்சார் பெண்ட் பஞ்சு (DS Cat No. 6510 IND/MED/IC/0176(J)ல் கண்ட விவரங்களின் அடிப் படையில் 50கிராம் 500கிராம் எடை கொண்ட பொட்டலங்கள் —I.V. திரவங்கள்.



கண்டென்சர்கள் சோக் IS: 1569ன் படி IS: 1534 பாகம் Iன்படி

பெயிண்ட்-ரெட் ஆக்ஸைட்-அலுமினிய-எனாமல்-துரு ஏறாமல் இருக்கப் பூசப்படும் வர்ணங்கள்.
மின்னல் காலுரைகள
ஃப்யூஸ் யூனிட் IS: 2086 1963ன் படி
L.T. இன்ஸுலேட்டர்கள்
குழல் விளக்குகளுக்குத் தேவையான ஸ்டார்டர்கள் IS: 2215

ஸ்டெரிலைசர் (மின் இணைப்பு கொண்ட மின் இணைப்பு இல்லாத)





வீதி விளக்குகளுக்குத் தேவையான ஃபிட்டிங்குகள்

உடனடித் தேவை உள்ளவை



ப்ரேக் ட்ரம், சைலன்ஸர், மஃப்ளர், ஸ்பிரிங் சுருள்கள், கிங் பின், உள்ளிட்ட ஆட்டோமொபைல் பாகங்கள்/உறுப்புகள்




டிஸ்ட்ரிப்யூஷன் டிரான்ஸ்பார்மர்கள் 11KV, 22KV.

ஸ்டீல் பர்னிச்சர்கள் அலமாரிகள், பெட்டகங்கள், ரேக் போன்றவை.
IS 3761/66ன் படி ஃபைலிங் கேபினெட் சேர் ISS:3499 பாகம் 1/74ல் கண்டுள்ள விவரப்படி
மேசைகள் - IS:3498/75ன் படி.




விரைந்து எதிர்பார்க்கப்படும் தேவைகள்

தென்னை நார் Grade II IS 898—1964 (G3)
பருத்தி நாடா
ஆய்வு கூடங்களுக்கும் தொழில்களுக்கும் தேவையான இரசாயனங்கள் (ஆர்கானிக் & இன் ஆர்கானிக் உப்புக்களும் கரைப்பான்களும்.
M.S. வாஷர் IS 2016/1967 அட்டவணைப்படி.
ட்ரெட் ரப்பர்



ட்ரங்க் பெட்டிகள்.

டிஸ்ட்ரிப்யூஷன் கம் ஸ்விட்ச் ஃப்யூஸ் யூனிட் IS: 4064/67ன் படி.
L.T. பவர் கேபின்-கன்ட்ரோல் கேபின் கேபிள் பாக்ஸ் C.I.



முள்வேலிக் கம்பிகள் — A3

வார்ப்பட இரும்பினால் தயாரிக்கப்பட்ட மேன் ஹோல் கவர் - குழாய்கள் - இணைப்புகள்
P.V.C. இன்சுலேசன் டேப் 15mm 25mm அகலங்களில் 25மீட்டர் நீளங்கள் IS 2448ன் படி



P.V.C. குழாய்கள் ஃபிட்டிங்குகள்.

TAMIL NADU SIDCO

## விற்பனை உதவிப் பகுதி

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
5, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
தொலைபேசி: 82171 தந்தி: TANSIDCO சென்னை.
டெலக்ஸ்: 041—7581

# கூட்டுறவு நகர வங்கிகளின்
# வரலாறு வளர்ச்சி



**சி. எம். ராஜன்,**
திட்ட இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.

**கூ**ட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளில் கூட்டுறவு நகர வங்கிகள் அண்மையில் பெருமளவு முன்னேற்றமடைந்துள்ளன. நகர்ப்புறங்களில் உள்ள சிறு கடைக்காரர்கள், வியாபாரிகள், சிறுதொழில் புரிவோர், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோரின் அன்றாட கடன் தேவைகளை நிறைவு செய்வதில்இவற்றிற்குப் பெரும் பங்குண்டு. அது மட்டுமின்றி நகர்ப்புறவாசிகளின் சேமிப்புகளைத் திரட்டி அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதிலும் நவீன வங்கி வசதிகளைத் தந்து, நடுத்தர மக்களிடையே வங்கிப் பழக்கத்தைப் பரப்புவதிலும் இவை முதலிடம் பெற்றிருக்கின்றன.

கூட்டுறவு நகர வங்கிகளின் தொண்டு நம் நாட்டிற்குத் தேவை என்பது 1915லேயே உணரப்பட்டது. சாதாரண நடுத்தர மக்கள் வங்கி இயல் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறந்த நல்லதொரு பயிற்சிக்கூடமாக இருக்கும் என்று கூட்டுறவு பற்றிய மெக்லகன் குழு 1915ல் வலியுறுத்தியிருக்கிறது. 1931ல் நியமிக்கப்பட்ட மத்திய வங்கி விசாரணைக்குழு இந்த வங்கிகளின் சிறப்பைப் பின்வருமாறு கோடிட்டுக் காட்டிற்று:

பெரிய கடைக்காரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் வர்த்தக வங்கிகள் என்னென்ன உதவிகளைச் செய்கின்றனவோ அந்தந்த உதவிகளையெல்லாம் கூட்டுறவு நகர வங்கிகள் சிறு கடைக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் செய்யவேண்டியது அவற்றின் கடைமையாகும். அதேபோல 1946ல் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டக்குழு இவ்வாறு கூறியிருக்கிறது. 'நகர்ப்புறங்களில் ஏராளமான நடுத்தர மக்கள் சின்னஞ்சிறு கடன்களுக்காக வட்டிக் கடைக்காரர்களை நம்பியிருக்கிறார்கள். இம்மக்களிடையே நெருங்கிய பழக்கமும் உறவும் கொண்டிருக்கின்ற நகரக் கூட்டுறவு வங்கிகள் அவர்களின் கடன் தேவையை நிறைவு செய்வதற்கேற்ற பொருத்தமான நிறுவனங்களாகும். 1957ல் பம்பாயில் நடைபெற்ற முதலாவது கூட்டுறவு நகர வங்கிகள் மாநாட்டில் பின்வருமாறு பரிந்துரைக்கப்பட்டது:

''நகர வங்கிகளுடைய அலுவல்களின் தன்மையை மேம்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. அப்படி மேம்படுத்தினால்தான் வங்கிகள் தங்கள் உறுப்பினர்களின் கடன் தேவையை, குறிப்பாக உற்பத்திப் பணிகளுக்கு, கைவினைஞர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் வேண்டிய கடன்களைப் பயனுள்ள முறையில் வழங்கலாம்.

ரிசர்வ் வங்கியினர் 1957-58ல் மேற்கொண்ட ஆராய்ச்சியில் கூட்டுறவு நகர வங்கிகளின் சிறப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

1855ஆம் ஆண்டிற்கும் 1885க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனியில் ஹெர்மன் ஸல்ஸேயும் (Herman Schultz இத்தாலியில் லூகி லூஸட்டியும் (Luigi Luzzatti) தொடங்கிய நகரக்கடன் வங்கிகள் பெற்ற பெருமளவு வெற்றியில் பிறந்த நம்பிக்கையின் விளைவாக இந்தியாவிலும் அத்தகைய நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், வசதிகளையும் தொடங்க 20ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் பெரும்பாலான நகர வங்கிகளும் கடன் சங்கங்களாகத்தான் தோற்றுவிக்கப்பட்டன.

இந்தியாவில் முதல் கூட்டுறவு நகர வங்கியை அமைத்த பெருமை தமிழ்நாட்டிற்குரியது. 1904 அக்டோபரில் காஞ்சிபுரத்தில் அது துவக்கப்பட்டது. 1904ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் நகரக் கடன் சங்கங்களை அமைக்க அனுமதி அளித்த போதிலும் மெக்லகன் (1915) குழு இவ்வங்கிகளின் சிறப்பைச் சுட்டிக்காட்டிய பிறகுதான் இவ்வங்கிகள் பெருமளவில் அமைக்கப்பட்டன.

இந்த வங்கிகளின் வரலாற்றில் காணப்படுகின்ற சிறப்பு மிகுநிலை அவற்றின் வளர்ச்சி பொருளாதார உற்பாதங்களுக்கு ஈடுகொடுத்து எப்போதுமே நிலையானதாகவே இருந்து வருவதாகும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்ட காலத்திலும் கூட இவற்றின் வளர்ச்சி ஒரே சீராகவே இருந்தது. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப் பாதித்த அளவிற்கு நகரக் கூட்டுறவு வங்கிகளைச் சோதிக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் நகர வங்கிகளின் வருமானம் பாதிக்கப்படாமல் இருந்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது ஏற்பட்ட பொருளாதார நன்னிலையும் இவ்வங்கிகளின் விரைவான வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்தது.

காலப்போக்கில் இவ்வங்கிகளின் வரலாற்றில் பற்பல மாறுதல்களும் அதன் நோக்கங்களில் முற்போக்கான இலட்சியங்களும் ஏற்படலாயின. பாரம்பரியமான முறைகள் புதிய வங்கி யுக்திகளுக்குவழி விட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்ய குறிப்பாக கிராமப்புறங்களில் வாழ்கின்ற நடுத்தர மக்களின்

பொருளாதார நிலையை மேம் படுத்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்ற சிறு தொழில் களுக்குப் பெருமளவில் கடன் வழங்க வேண்டும் என்ற கொள்கை பரவத் தொடங் கியது.

இந்தத் தேசிய நீரோட்டத் தில் காணப்பட்ட இன்னொரு முக்கியமான திருப்புமுனை ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் திரு பி.என். டாம்ரேயின் தலைமையில் கூட் டுறவுகள் மூலம் தொழில்களும் கடன் வழங்குவது பற்றி ஆராய செயற்குழு அமைக்கப் பட்டதாகும். சிறு தொழில் களுக்கும், குடிசைத் தொழில் களுக்கும் கடன் கொடுப்பதில் நகரக் கூட்டுறவு வங்கிகளின் பங்கு எவ்வாறு இருக்க வேண் டும். இப்போது இந்த முயற்சி களில் காணப்படுகின்ற தடை கள், தடங்கல்கள் என்ன என் பன போன்றவற்றைத் திறமை யாகவும் திட்டவட்டமாகவும் நிறைவேற்றுவதற்காக மேற் கொள்ள வேண்டிய செயல் முறைகளைப் பரிந்துரைப்ப தற்காகவும் இக்குழு 1967 ஜூன் மாதம் அமைக்கப்பட் டது. இக்குழுவின் பரிந்துரை களை ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டதுடன் அவற்றை செயல்படுத்தியது.

**நகர வங்கிகளின் சேவை**

ரிசர்வ் வங்கி இப்பரிந்துரை களை ஏற்றுக் கொண்டிருப்ப தோடு அதைச் செயல்படுத்த வும் துவங்கி உள்ளது.

**வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம்:**

வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1966 மார்ச் மாதம் கூட்டுறவுகளுக்கும் விரிவாக்கப் பட்டது. கூட்டுறவு நகர வங்கி களின் வரலாற்றில் முக்கிய மான கட்டமாகும்.

**மாதவதாஸ் குழு**

இந்திய நகர கூட்டுறவு வங்கிகளின் வரலாற்றில் இன் னொரு மைல் கல் மாதவதாஸ் குழுவின் அறிக்கையாகும். வங்கி முறையில் நகர வங்கி களின் பங்கினை மேம்பாடு செய்வதற்காகவும், இந்த மதிப் பீட்டின் அடிப்படையில் கூட் டுறவு நகர வங்கிகளை எதிர் கால பங்கினைக் குறிப்பாக அவற்றுக்கு மேலும் உதவிகள் அல்லது வசதிகள் செய்யவும் சிறுதொழில்களுக்கு உதவிசெய் யவும் அவற்றின் நடைமுறை கள் எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பனவற்றை யெல்லாம் பரிசீலனை செய்து அரசுக்கு அறிவிக்க இக்குழு அமைக்கப்பட்டது. நகர வங்கி களின் மூலம் கடன் வழங்கவும் நடைமுறைக் கொள்கைகளை குறிப்பாக சில கடன்காரர் களுக்கு மேலும் நல்ல முறை யில் சேவை செய்வது போன்ற வற்றை ஆராயவும், தொழில் மேலாண்மையின் நன்மையை மேம்பாடு செய்யவும் பயிற்சி வசதிகளைப் பரிசீலிக்கவும் இக் குழு கேட்டுக் கொள்ளப்பட் டது.

---

## துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த மாரிமுத்து மனைவிக்கு அரசு உதவித் தொகை அனுமதி

1.9.81 அன்று சாத்தூர் காவல் துறையைச் சார்ந்த காவலர் இராமநாதபுரம் மாவட் டம், சாத்தூர் தாலுக்கா, அனைக்கரைப்பட்டி கிராமத்தில் தற்காப்புக்காக நடத்திய துப்பாக்கி சூட்டின் போது திரு. மாரிமுத்து என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த திரு. மாரிமுத்து வின் மனைவி திருமதி ஜெய காந்தம் என்பவருக்கு அரசு உதவித்தொகையாக ரூ. 5000/- அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட் டுள்ளார்.

---

இன்று இந்தியாவில் 1253 நகரக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இவை திரட்டியுள்ள வைப்புகளின் அளவு ரூ. 1473 கோடி. அதா வது பத்து ஆண்டுகளில் டெபா சிட்டுகள் மும்மடங்காகப் பெருகியுள்ளன. அதேபோல அவை வழங்கியுள்ள கடனும் ஏறக்குறைய மூன்று மடங்கு பெருகியுள்ளது.

இந்நகர வங்கிகளின் எண் ணிக்கை கணிசமாக இருந்த போதிலும் அவை ஒரு சில மாநிலங்களில் அதாவது மகா ராஷ்டிரம், குஜராத், கர்நாட கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங் களில்தான் குவிந்திருக்கின்றன. இந்தியாவிலுள்ள நகர வங்கி களில் 78 சதவிகித எண்ணிக் கையும் இந்நான்கு மாநிலங் களில் செயல்படுகின்றன. மேலும் அவை பெரிய நகரங் களில்தான் அதிகமாகக் காணப் படுகின்றன. ஆகவே, அவற் றைச் சிறிய நகரங்களிலும் பரவச் செய்து வங்கி வசதி களை அங்கும் கிடைக்கச் செய்ய திட்டம் வகுக்கவேண் டும். இந்த வங்கிகள் செயல் படாத 68 சதவீத நகரங்களி லும் புதிய வங்கிகளைத் துவக் கியும், கிளைகளைப் பெருக்கி யும் சேவையைப் பரப்ப வேண்டும்.

தமிழ்நாட்டில் இப்போது 20.60 இலட்சம் அங்கத்தினர் கள் கொண்ட 132 கூட்டுறவு நகர வங்கிகள் இயங்கி வரு கின்றன. அவற்றின் வைப்பு களின் அளவு ரூ.100.41 கோடி ஆகும். அவை 1981-82ல் ரூ. 129.78 கோடி கடனாக வும் வழங்கியுள்ளன. பிற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகளும் தங்கள் சொந்த பலத்திலேயே இயங்கி வருகின்றன. அவை மத்திய வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன் பெருமளவில் இல்லை. அதுவும் வங்கித் தொழிலுக் காகப் பெறப்பட்ட ஓவர் டிராப்ட் கடன்களாகும்.

**நலிந்தோர் நலம் பெற**

நம் சமுதாயத்தில் நலிந் துள்ள மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவ தற்காகவும், அவர்கள் உற்பத் தித்துறையில் ஈடுபட்டு வரு மானத்தைப் பெருக்குவதற் கான வகை செய்வதற்காகவும் தனியாகத் திட்டம் ஒன்றை தமிழ்நாட்டில் கூட்டுறவு நகர வங்கிகள் 1981-82ல் இருந்து செயல்படுத்தி வருகின்றன. இந்தப் புதிய திட்டத்தின்படி; பொருளாதார நலிவுற்றோ ருக்குக் குறைந்த வட்டியில், ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டியில், தொழில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்குத் தமிழக அரசு பங்கு மூலதன உதவி வழங்கி வருகின்றது. 1981-82ல் கூட்டுறவு நகர வங்கிகள் மட்டும் ரூ. 41.15 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியுள் ளன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி




# மேற்கு வங்கத்தில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா கல்கத்தாவில் 15.10.82 அன்று நடைபெற்றது. மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் திரு ஜோதிபாசு அவர்கள் தலைமை வகித்து, பூரதியார் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் விழாவினைத் தொடக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களும் விழாவில் பங்கேற்றார்.



16—11—1982



மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கல்கத்தா தமிழ்ச் சங்கம் வரவேற்பு அளித்தது.

